ஆகஸ்ட் 31 - செப். 06, 2008 August 31 - Sept. 06, 2008 பக்கங்கள் - 28 25.00

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA


# சுடர் ஒளி

THE SUDAROLI

வார மலர்



## மீண்டும் வான்புலிகள்



## ஒதுங்கும் ஒஸ்லோ...!



## அதிரடித் தேர்தல் வெற்றிகள் ஆட்டம் காணுமா?





## தி.மு.க. அணியிலிருந்து கம்யூனிஸ்ட்களும் வெளியேற்றம்! தமிழகத்தில் 3ஆவது அணி?



## ஒபாமாவுக்கு வலுச்சேர்க்கும் பிடெனின் தெரிவு!

# அதிரடித் தேர்தல் வெற்றிகள் ஆட்டம் காணுமா?



இலங்கை அரசுக்கு இப்போது குருசந்திர யோகம்! எல்லாத் திசைகளிலும் வெற்றிச் செய்திகளே அரசின் செவிப்பறைகளைத் தஞ்சமடைந்து கொண்டிருக்கின்றன. யுத்தம், தேர்தல் என 'மஹிந்த சிந்தனை' சவாரி செய்கின்ற இரட்டைக் குதிரைகளும்



எதிர்பார்த்த இலக்குகளை வெகு எளிதாகவே அடைந்து கொண்டிருக்கின்றன. நாட்டினுடைய எல்லா வளங்களும் கடைசிச்சாறு உள்ளவரைக்கும் கசக்கிப் பிழியப்பட்டு, யுத்தத்துக்கும், தேர்தலுக்குமாய் பணம் வாரியிறைக்கப்படுகின்றது. துணுக்காய், உயிலங்குளம் பகுதிகளை தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததாகப் படைத்தரப்பு அறிவித்த சூடு தணிவதற்குள், வடமத்திய மற்றும் சப்பிரகமுவ மாகாணசபைகளும் அறுதிப் பெரும் பான்மையோடு அரசின் வசமாகியிருக்கின்றன. இந்த வெற்றிகளினால் இராணுவ, அரசியல் ரீதியான முன்னகர்வுகளை இலங்கையரசு இன்னும் தீவிரப்படுத்த யுத்தம் தொடர்பாகவும், நாட்டின் ஏனைய விடயங்கள் தொடர்பாகவும் தீர்க்கமான முடிவுகளை தன்னிச்சையாக எடுப்பதற்கு வசதியாக, அறுதிப் பெரும்பான்மையோடு ஆட்சியிலிருக்க மஹிந்த அரசு விரும்புகின்றது. எனினும், எடுத்த எடுப்பிலேயே நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டுப் பொதுத்தேர்தலொன்றை நடத்துவதனூடாக அறுதிப்பெரும்பான்மையை அடைவதென்பது சாத்தியமற்ற விடயமென்று நன்கு விளங்கிக்கொண்ட மஹிந்த அரசு, தன்னுடைய வேலைத்திட்டங்களை அரசியற் கட்டமைப்பின் அடித்தளத்திலிருந்து ஆரம்பித்திருக்கின்றது. உள்ளூராட்சி சபைகள், மாகாணசபைகள் என்பவற்றை தன்னுடைய பூரணகட்டுப்பாட்டின் கீழ்கொண்டு வந்துவிட்டால், அதன் மூலம் தன் அதிகாரக்குரலை இன்னும் பலமாக்கி, மிகச் சுலபமாக நாடாளுமன்ற அறுதிப் பெரும்பான்மையை அடைய அரசு திட்டம் போட்டது. பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல கிழக்கு மாகாணத்தின் வீழ்ச்சி அரசின் திட்டத்துக்கு மிகச் சாதகமான ஆரம்பப் புள்ளியாக அமைந்தது.

அரச படைகள் கிழக்கு மாகாணத்தை முற்று முழுதாகத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தவுடன் முதல் வேலையாக வடக்கு - கிழக்கு மாகாணத்தை வடக்கு மாகாணம், கிழக்கு மாகாணம் என அரசு கூறுபோட்டது. பின்னர் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டு, அரசின் பலம் அங்கு நிலைநாட்டப்பட்டது. இந்த வெற்றியை 'போரைத் தொடர்ந்து நடத்துவதற்கான அங்கீகாரமாகவே' அரசு எடுத்துக் கொண்டது. கிழக்கு மாகாணசபைத் தேர்தலின் போதும் 'புலிகளை ஒடுக்குவதற்கான மக்கள் ஆணையை கிழக்கு மகாணசபைத் தேர்தலின்போது விழுகின்ற வாக்குகள் தான் தீர்மானிக்க வேண்டும்.' என்ற சாரப்படவே அரசால் பிரசார நடவடிக்கைகள் முடுக்கப்பட்டிருந்தன. கிழக்கு மாகாணசபையின் மூலம் கிடைத்த வெற்றி, அரசின் நாடாளுமன்ற அறுதிப் பெரும்பான்மை கனவைக் கொழுந்து விட்டெரியச் செய்தது. அதன் விளைவால் நடந்தேறியதுதான் வடமத்திய, சப்ரகமுவ மாகாணசபைத் தேர்தல்கள்.

தேர்தல் பற்றிய அறிவிப்பை வெளியிட்ட மறுகணமே, கச்சையை இறுகக்கட்டிக் கொண்டு களத்திற் குதித்துவிட்டது ஆளும் தரப்பு. பதவி, பணம், செல்வாக்கு என்னும் தூண்டிலில் மாற்றுக்கட்சிப் பிரமுகர்கள் பலரைத் தன் காலடிக்குள் படுத்துக்

**- பிரமன் -**

கிடக்கின்ற விசுவாசிகளாகவும் மாற்றிக்கொண்டது. அதன் பிறகு சாம, தான, பேத, தண்ட முறைகளையெல்லாம். வெகுசிரத்தையோடு பிரயோகித்து எதிர்க்கட்சிகளின் குரல் மக்களின் செவிகளில் விழுந்துவிடாதபடி பிரசாரப்பீரங்கிகளையும் இயக்கத் தொடங்கியது. இவ்வளவு செய்தபின்னும் வானளாவ உயர்ந்து நிற்கின்ற பொருளாதாரச் சுமையும், அதனைத் தொடர்ந்தும் சுமக்க முடியாது ஓலமிடுகின்ற மக்களின் வேதனையும் தம்முடைய தேர்தல் வெற்றியென்ற கனவில் மண்ணை அள்ளிப் போட்டுவிடலாமென்று மஹிந்த சிந்தனையாளர்கள் பயம்கொண்டனர். எனவே, காலாகாலமாய் சிங்களப் பேரின அரசுகள் பயன்படுத்தி பழசாய்ப் போன புலி ஒழிப்புக்கான தூசு தட்டிச் சாணை பிடித்து பயன்படுத்தத் தொடங்கியது.

''தாயகத்தைக் காப்பதற்கு, அரசாங்கத்துடனும், வீரமிகு படையினருடனும் மக்கள் கைகோக்கவேண்டும். வடக்கை மீட்கும் அரசின் முயற்சிக்கு ஆதரவா? அல்லது அதனைச் செயற்படுத்த சில சக்திகள் மேற்கொள்ளும் சதித்திட்டத்துக்கு ஆதரவா? என்ற மக்கள் தீர்ப்பினை மகாகாணசபைத் தேர்தல் முடிவுகள் பிரதிபலிக்கும்'' என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது உரைமூலம் சிங்கள மக்களிடையே யுத்தத்தீயை உண்டுபண்ணி, குளிர்காய எண்ணினார். துணுக்காய், உயிலங்குளம் பகுதிகளில் படையினர் பெற்ற வெற்றிச் செய்தியின் பேரிரைச்சலும் மஹிந்தவின் குரலோடு இணைந்து கொள்ள, எதிர்க்கட்சிகளின் குரல் எடுபடாமலே போயிற்று.

ஏராளமான வெட்டுக்குத்துகள், மோசடிகள் என்பவற்றோடு நடந்தேறிய வடமத்திய மாகாணத் தேர்தலில் பெரும்பான்மையோடு அதிகாரக் கதிரையை அடையமுடிந்தது. வடமத்திய மாகாணசபையிலுள்ள 33 ஆசனங்களில் 20 ஆசனங்களையும், சப்ரகமுவ மாகாணத்தின் 44 ஆசனங்களில் 25 ஆசனங்களையும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கைப்பற்றியிருந்தது. எந்தவொரு தொகுதியிலும் எதிர்க்கட்சிகளால் தலையெடுக்கமுடியவில்லை.


வன்னிப் போர்க்களத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிகள் ஒவ்வொன்றாக வீழ்ச்சியுறும் போதெல்லாம் எவ்வாறு படைத்தரப்பின் போர்வெறியும், ஆக்கிரமிப்பு அவாவும் அதிகமாகின்றதோ அதேபோன்ற மாகாண சபைத் தேர்தல்களினூடாகக் கிடைத்து வருகின்ற வெற்றிகளும் ஆட்சியாளர்களின் அதிகாரக் கனவுகளுக்கு எண்ணெய் ஊற்றுவனவாக அமைந்துள்ளன. இதனால்தான் ஐ.தே.க. சம்மதித்தால் பொதுத்தேர்தலை உடனே நடத்த அரசாங்கம் தயாராக இருப்பது போன்ற அறிக்கைகள் அரசுத் தரப்பிட மிருந்து வெளிப்படுகின்றன. கூடவே, ஏனைய மாகாணசபைகளுக்கான தேர்தல்களை நடத்துவது பற்றியும் யாழ்ப்பாணத்தில் மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்தி முடிப்பது பற்றியும் அவசர அவசரமாக அரசாங்கத்தினால் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது.

தன்னுடைய அதிகார இருப்பினை உறுதிநிலை செய்வதற்காக யுத்தம், தேர்தல் என்னும் இரண்டையும் வெகுவேகமாக விஸ்தரிப்புச் செய்வதில் அரசு முனைப்பாயுள்ளது. எனினும், நாட்டின் அபிவிருத்தி தொடர்பாகவோ, மக்களின் சுமைகளைக் குறைப்பது தொடர்பாகவோ, சமாதானத்தை நிலைநாட்டுவது பற்றியோ, மனிதவுரிமைகளை மதிப்பது தொடர்பாகவோ, ஆக்கபூர்வமான எந்தச் செயற்றிட்டத்தையும் அரசு நிறைவேற்றுவதாகத் தெரியவில்லை. நிதிப்பற்றாக்குறை யுத்தசூழ்நிலை என்ற காரணங்காட்டி ஏராளமான அபிவிருத்தித் திட்டங்கள் முடக்கப்பட்டுள்ளன. புதிய புதிய வரிகள் அறிமுகம் செய்யப்பட்டு, மக்களின் அத்தியாவசிய நுகர்வுப் பண்டங்களுக்குரிய விலை சடுதியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. புதிய அரசாங்க நியமனங்கள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. இப்படி மக்களின் வாழ்வாதார விடயங்களில் கஞ்சத்தனம் காட்டுகின்ற அரசாங்கம் மக்களின் வாழ்வையும், நிம்மதியையும், ஒற்றுமையையும் சீர்குலைக்கின்ற யுத்தத்திற்கும், அனாவசியத் தேர்தல்களுக்கும் வாரி வழங்கும் வள்ளலாகத் தன்னை அடையாளப்படுத்துகின்றது.

அரசின் இருநிலைப்பட்ட தன்மைகள் அதன் அதிகாரப் பிடியை இறுக்குவதற்கு வேண்டுமானால் உதவி செய்வதாக இருக்கலாம். ஆயினும், அரச யந்திரத்தின் சீரான நகர்வுக்கு எதிர்காலத்தில் பாரிய எதிர்வினைகளை உண்டுபண்ணிவிடும் சாத்தியத்தினையும் அது கொண்டிருக்கவே செய்கின்றது. யுத்தத்தை நடத்தி, நிலப்பரப்புக்களைக் கையகப்படுத்தி, பின்னர் அங்கே தேர்தல்களை நடத்துவதன் மூலம் ஜனநாயகத்தை இலங்கைத் தீவெங்கும் உயிர்பெறச் செய்துவிட்டதாக, தன்னுடைய அதிகாரவெறிக்கு அரிதாரம் பூசிக்கொள்ள அரசு முயல்கின்றது. ஆனாலும், கெட்டிக்காரன் சாயம் சர்வதேசத்தின் முன் எப்போதே வெளுத்துவிட்டது. சிலநாடுகள் அதனைக் கண்டுகொள்ளாதது போல் காட்டிக்கொண்டாலும், சில நாடுகள் தமது எதிர்ப்புணர்வினை வெளிக்காட்டும் நடவடிக்கைகளிலும் இறங்கியுள்ளன. அவற்றுள் பொருளாதார உதவிகளை வழங்காது அரசினைப் பட்டினி போட வைக்கின்ற ஜேர்மனியின் செயற்பாடும் முக்கியமானது.

ஜேர்மனியோ, பெரும்பாலான சர்வதேச நாடுகளோ இலங்கையரசுடன் இணைந்து செயல்படக்கூடிய வகையில் இன்று இலங்கையில் நிலைமைகள் சுமூகமாகக் காணப்படவில்லை. ''உங்கள் மக்களுக்கு ஒரு தீர்வினை வழங்கினீர்களானால் அந்தக் கணத்திலேயே ஒவ்வோர் இலங்கையருடனும் இணைந்து பணியாற்ற மீண்டும் நாம் தயாராகி விடுவோம்'' என்ற ஜேர்மன் தூதுவர் 'ஜோர்கன் வீர்த்'தின் கூற்று, இலங்கை நிலை தொடர்பாகச் சர்வதேச நாடுகள் கொண்டுள்ள எண்ணவலைகளைப் பட்டவர்த்தனமாக்குகின்றன.

ஒருநாட்டில் மோசடித் தேர்தல்கள் மூலமோ, அழிவை ஏற்படுத்தும் யுத்தம் மூலமோ உண்மையான ஜனநாயகம் மலரப்போவதில்லை. மக்களின் சுபீட்சமான வாழ்வியலும், அவர்களின் நிம்மதிக்கான உறுதியும், நிறைவான பொருளாதாரமுமே நிரந்தர சமாதானத்தையும், ஜனநாயகத்தையும் உண்டுபண்ணமுடியும். ஆனால், நம்நாட்டில் நடப்பதோ இதற்குத் தலைகீழானதாகவே உள்ளது. புலிகளுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கூறப்பட்ட விடயங்களை நடைமுறைப் படுத்துவதிலும், உயர்பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக் குடியமர்த்துவதிலும், செம்மணி, பாலமீன் மடு போன்ற புதைகுழி மர்மங்களை விடுவிப்பதிலும், மக்களின் பொருளாதார நெருக்கடிகளைக் குறைப்பதிலும் மெத்தனப்போக்கைக் கடைப்பிடிக்கும் அரசாங்கம், யுத்த முன்னெடுப்புக்களையும், தேர்தல் ஏற்பாடுகளினையும் 'பம்பரம் போல சுழன்றுகொண்டு' துரிதகதியில் செய்து முடிக்கின்றது. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளும் அவசரத்தில் வேகமான யுத்த முன்னெடுப்புகளும், அவற்றினூடாகப் பெறப்படுகின்ற வெற்றிகளைக் காட்டிப் பெறுகின்ற, அதிரடியான தேர்தல் வெற்றிப் பிச்சைகளுயம் புலிகள் எதிர்தாக்குதலை ஆரம்பிக்கும்போது அரசை ஆட்டங் காண விடாது பாதுகாக்குமா என்பதே இப்போது எல்லோர் முன்னுமுள்ள கேள்வியாகும். *




பிள்ளைகள், பெரியவர்கள்,முதியோர்கள் அனைவருக்கும் விசேடமாக நோய் வாய்ப்பட்டுள்ள போதும் ( நோய்களிலிருந்து சுகம் அடையும் போதும் ) கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்களுக்கும் நலனுடன் இருப்பதற்கு மேலதிக போஷாக்கும் சக்தியும் தேவைப்படுகிறது.

ACTION சக்தி,புரதம்,கொழுப்பு,காபோவைதரேட்டு ஆகியவற்றுடன்,11 அத்தியாவசிய கனிப்பொருட்களையும்,13 அத்தியாவசிய விட்டமின்களையும் வழங்குகின்றது. பெறக்கூடியதாகவுள்ள கனிப்பொருட்களினுள் கல்சியம்,நாகம்,இரும்பு,ஆகியவை ACTION இன் போஷாக்கு பெறுமானத்தில் பெரும் பங்கு வகிக்கின்றன.

**கல்சியம்**

உடலின் பிரதான கனிப்பொருள் கல்சியம் ஆகும். இது உங்கள் பற்களையும் எலும்புகளையும் பலமாக வைத்திருப்பதில் பெரும் பங்காற்றுகின்றது. "ஒஸ்டியோபோரஸிஸ்" என்ற நோயை தடுப்பதற்கு இது அத்தியாவசியம் ஆகும். அங்கலாய்ப்பு,மனஅழுத்தம்,முதிர்ச்சி ஆகியன கல்சியக் குறைபாடுகளுடன் தொடர்புபட்டவை.அண்மைய ஆய்வுகள் படிப்படியான சிதைவு நோய்கள்,ஒவ்வாமை,இதயநோய் ஆகியவற்றுடன் கல்சியம் குறைப்பாட்டினை தொடர்புபடுத்தி காட்டியுள்ளன.

**நாகம் (ZINC)**

வளர்ச்சி,கலப்பிரிவு,இனப்பெருக்கல் வளம்,நோய் எதிர்ப்பு சக்தி ஆகியவற்றிற்கு நாகம் மிக முக்கியமானது.காயங்களின் விரைவாக குணப்படுத்துதலையும்,சிகிச்சைக்கு பின்பான காலப்பகுதியில் நோய்களில் இருந்து விரைவான குணமடைதலையும் உறுதிப்படுத்துகின்றது.இது சுவை,மணம் ஆகியவற்றை உணரும் திறனை பேணுவதன் மூலம் பசியின்மையால் பாதிக்கப்பட்டோரின் பசியுணர்வை அதிகரிப்பதற்கும் உதவுகிறது. இது ஆரோக்கியமான சருமத்திற்கும்,தலைமுடி வளர்ச்சிக்கும் அவசியமான கனிப்பொருள் ஆகும்.

**இரும்பு (IRON)**

ஒட்சிசன் காவியான "ஹீமோகுளோபினின்" முக்கிய கூறு இரும்பாகும். இதன் பற்றாக்குறை கலங்களுக்கான ஒட்சிசன் விநியோகத்தை மட்டுப்படுத்துவதனால், மந்தமான தொழிற்பாட்டையும் களைப்பையும் ஏற்படுத்துகின்றது. சக்தி உற்பத்திக்கான சுரப்பிகளின் தொழிற்பாட்டிற்கு உறுதுணையாகின்றது. "ஒட்சியேற்றத்திற்கு" எதிரான தொழிற்பாட்டு தன்மையை கொண்டது.

சக்திவாய்ந்த நிர்ப்பீடனத்தொகுதிக்கு ஊக்கமளிக்கின்றது. இது மூளை அபிவிருத்திக்கு முக்கியமானதுடன்,ஞாபக சக்தியை அதிகரித்து,கற்பதற்கு உதவியளிக்கிறது.

பெறக்கூடியதாகவுள்ள உயிர்ச்சத்துக்களினுள் விற்றமின்B தொகுதி,விற்றமின்E,பயோட்டின் ஆகியவை மனித உடலின் வளர்ச்சிக்கும்,மேன்மைக்கும் அத்தியாவசியமானவை.

**விற்றமின் B தொகுதி**

B1 - இதய வீக்கம், கால் குரண்டல்,ஆகியவற்றை தடுப்பதுடன்,தசைநார்களை பலமடையச் செய்கின்றது.தாழ்வுணர்ச்சி, மனஅழுத்தம், அங்கலாய்ப்பு ஆகிய நிலைமைகளுக்கு அத்தியாவசியமாகும்.

B2 - செங்குருதி குழியங்களின் ஆக்கத்திற்கும் கொழுப்பு,புரதம்,காபோஜதரேட்டு ஆகியவற்றின் அனுசேப தொழிற்பாட்டில் உதவுவதற்கும் அவசியமானது.சரும குறைபாடுகளையும்,ஒற்றைத்தலையிடியையும் குணமாக்க உதவுவதுடன்,விழி மென்சவ்வு உண்டாவதையும் தடுப்பதற்கு உதவுகிறது.

B3 - ( NIACINAMIDE ) -

கொலஸ்ரோலை குறைப்பதற்கு உதவுவதுடன்,சரும ஆரோக்கியத்தை மேம்படுத்துகின்றது. மன அழுத்தத்தில் இருந்து விடுபடவும் இதை உபயோகிக்கலாம்.

B5 - ( PANTOTHENIC ACID ) -

மாறாத களைப்பு,ஒற்றைதலையிடி, ஒவ்வாமை ஆகியவற்றிற்கு எதிராக தொழிற்படும். சக்தி உற்பத்திற்கு உதவும், ஆரோக்கிமான நரம்புத் தொகுதியை மேம்படுத்தும்.

B6 - உடலின் ஒவ்வொரு தொழிற்பாட்டிற்கும் தேவையானது. பல்வேறு சுரப்பிகளினுடனும்,ஒத்திசைவாக செயற்படுகின்றது. செங்குருதிச் சிறு குழியங்களின் புரதங்கள், நரம்பியல் செயற்பாடுகள் ஆகியவற்றின் ஆக்கத்தில் பெரும்பங்காற்றுகின்றது.

B12 - இரத்தச் சோகையை தடுக்கின்றது. கர்ப்பத்தின் போது முக்கியமான உயிர்ச்சத்தாகவும் விளங்குகின்றது.

B9 - ( FOLIC ACID ) ஹீமோகுளோபினின் உருவாக்கத்திற்கு உடலினை இயலுமான தாக்குகின்றது. கர்ப்பத்தின் போது சிசுவின் வளர்ச்சிக்கு அத்தியவாசியமானது.

BIOTIN- ஆரோக்கியமான சருமத்திற்கும், தலைமுடிவளர்ச்சிக்கும் அத்தியாவசியமானது. முதுமைக்கு முன்பான நரையை தடுப்பதற்கும் உபயோகமாகின்றது. நரம்புத் தொகுதி,எலும்புகள்,தசைநார்கள் ஆகியவற்றை உருவாக்குவதற்கும் பேணுவதற்கும் உதவுகிறது. கொழுப்பின் அனுசேப தொழிற்பாட்டில் திறமையாக செயலாற்றுகிறது. இதனால் ஊளைச் சதையை குறைப்பதற்கு உதவுகிறது.

**VITAMINE - E.**

நரம்புத் தொகுதியின் தொழிற்பாடுகளை மேம்படுத்துவதில் நலன் மிக்கதாக கண்டறியப்பட்டுள்ளது. இதன் ஒட்சியேற்றத்திற்கு எதிரான செயற்படு தன்மை காரணமாக ஆரோக்கியமான சருமத்தையும்,தலைமுடியையும் மேம்படுத்த உதவுகின்றது.

சக்தி அடங்கியது - ( 27 அத்தியாவசிய கூறுகள் + Beta Carotene )

சீனி சேர்க்கப்படாதது.

இலங்கையர்களுக்கான சிபாரிசு செய்யப்பட்ட உணவு படிகளை தழுவி உருவாக்கப்பட்டது.

ACTION பானத்தை குளிராகவோ அன்றி சூடாகவோ நேரடியாக தயாரித்துக் கொள்ளலாம். நாளந்தம் தேநீருடன் அல்லது பாலுடன் கலந்தும் பருகலாம்.

# தி.மு.க. அணியிலிருந்து கம்யூனிஸ்டுகளும் வெளியேற்றம்! தமிழகத்தில் 3ஆவது அணி?

தமிழகத்தில் தி.மு.க. தலைமையிலான அணியிலிருந்து சிறிய கட்சிகள் ஒவ்வொன்றாக வெளியேறி வருகின்றன. முதலில் ம.தி.மு.க, பின்னர் பா.ம.க. இப்போது கம்யூனிஸ்ட் கட்சிகளின் முறை வந்திருக்கிறது.

சிறிய கட்சிகள் தி.மு.க, அ.தி.மு.க என்று அணிமாறுவது ஒன்றும் புதிய விஷயமல்ல. ஆனால், தற்போதுள்ள தி.மு.க ஆட்சிக்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடும் என்பதால் இந்த வெளியேற்றம் முக்கியத்துவம் பெறுகிறது.

1967க்குப் பின் முதல் முறையாக திராவிடக் கட்சி ஒன்று தனது சொந்தத்தில் அறுதிப் பெரும்பான்மை இன்றி தள்ளாடித் தள்ளாடி ஆட்சி நடத்தி வருவதுதான் இந்த முக்கியத்துவத்துக்கு காரணம்.

1967இன் பின் தி.மு.க வோ அ.தி.மு.க வோ தமது சொந்தப் பலத்தில்தான் ஆட்சி நடத்தியுள்ளன. எந்த பிற கட்சியின் தயவிலும் தங்கி இருக்கவில்லை. ஆனால், இன்றுள்ள தி.மு.க ஆட்சிக்கு அக்கட்சியின் 94 எம்.எல்.ஏக்களின் ஆதரவு மட்டும் நோக்கில் ராமதாஸ் இவ்வாறு கூறுகிறார் என்பது தெளிவு. இந்த அழுத்தத்தை கலைஞர் எவ்வாறு சமாளிப்பார் என்பது கேள்வியே!

இடதுசாரிகள் மத்திய அரசுக்கான ஆதரவை வாபஸ் பெற்றதால் தமிழகத்திலும் தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணியில் இருந்து விலக வேண்டுமென்பது கம்யூனிஸ்ட்களின் முடிவு. ஆனால், சென்ற லோக்சபா தேர்தலில் இடதுசாரிகள், மத்தியில் காங்கிரஸுடன் கூட்டணி வைக்காதுவிட்டாலும் தமிழகத்தில் மட்டும் கூட்டணி வைத்துக் கொண்டனர். அதனால், லோக்சபாவுக்கு 4 ஆசனங்களை அவர்கள் தமிழகத்தில் வெல்லமுடிந்தது. சட்டசபை தேர்தலிலும் கூட்டணியைத் தொடர்ந்து 15 ஆசனங்களை வென்றனர். அந்தவகையில் அவர்கள் தி.மு.க கூட்டணியில் லாபமே அடைந்தனர். தற்போது அணுசக்தி ஒப்பந்த விவகாரத்தால் காங்கிரஸ் - கம்யூனிஸ்ட் உறவு கசந்த நிலையில் தி.மு.கவுக்கு பெரும் இழப்பு இதனால் ஏற்பட்டுள்ளது.

நம்பிக்கை வாக்கெடுப்பின்போது லோக் சபாவில் தி.மு.க. சார்பில் பேசிய கண்மண் தெரியாது பேசுவது தெளிவாகத் தெரிகிறது. கலைஞர் தனது தரப்பின் நியாயங்களை உரைத்திருக்கிறார். கம்யூனிஸ்ட்கள் ஆளும் மேற்குவங்கத்தின் நந்தி கிராமத்தில் ஆர்ப்பாட்டம் செய்த பொதுமக்களை, அம்மாநில அரசு சுட்டு கொன்றது குறித்து தி.மு.க கண்டனம் ஏதும் தெரிவிக்கவில்லை. ஆனால், தமிழகத்தில் ரெட்டணை கிராமத்தில் இதை ஒத்த சம்பவம் நடந்ததற்கு தமிழக இடதுசாரிகள் பெரும் எதிர்ப்பு இயக்கமே நடத்திமுடித்தனர். இதை சுட்டிக் காட்டிய கலைஞர் ''நாம் சரியாகவே நடந்தோம்; கம்யூனிஸ்ட்கள் அநியாயமாக நடக்கிறார்கள்'' என்று கூறியுள்ளார்.


எவ்வாறாயினும் இருகட்சிகளிடையேயான உறவு முறிந்துவிட்டது. இதனால் இருதரப்புக்கும் இழப்பே! அதில் உடனடி இழப்பு தி.மு.கவுத்தான். காரணம் தமிழக அரசுக்கு பெரும்பான்மையில் சிறிது குறைவு ஏற்படப் போகிறது. எனினும், இடதுசாரிகள் கூறுவது போல் தி.மு.கவானது காங்கிரஸ் அரசுடன் உறவை முறித்தால் அக்கட்சியின் 35

ஓரளவு வலுவான மூன்றாவது அணி உருவாகும். இதனால் தி.மு.க, அ.தி.மு.க ஆகிய இரு அணிகளுக்கும் வெற்றி வாய்ப்பில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை இந்த அணி ஏற்படுத்துமென நம்பலாம்.

இதேவேளை, ஆந்திர அரசியலில் புதிய திருப்பமாக நடிகர் சிரஞ்சீவி புதிய கட்சி தொடங்கியுள்ளார். தமிழகத்தில் ரஜனிபோல் தெலுங்கு திரையுலகில் கோலோச்சும் சுப்பர் ஸ்டார் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது கட்சியில் தெலுங்குதேசம் கட்சி முக்கியஸ்தர்கள் பலர் இணைந்துள்ளனர்.

70களில் ராமராவின் நடிப்பு கவர்ச்சி, தெலுங்கு தேசம் கட்சிக்கு வித்திட்டது. தென்னிந்திய மாநிலங்களில் தமிழகத்திலும் ஆந்திராவிலும் சினிமா கவர்ச்சி பெருமளவு வாக்குகளாக மாறிய அதிசயம் 60களிலும் 70களிலும் நடந்தது. தமிழகத்தில் எம்.ஜி.ஆரும் ஆந்திராவில் என்.டி. ஆரும் (N.T.ராமராவ்) இவ்வாறு சாதித்துக் காட்டினர். ராமராவின் தெலுங்கு தேசம் கட்சி இன்று மருமகன் சந்திரபாபு நாயுடுவிடம் உள்ளது. சிரஞ்சீவி கட்சி






போதாது. அறுதிப்பெரும்பான்மையை எட்ட அக்கட்சி காங்கிரஸ், பா.ம.க, கம்யூனிஸ்ட் ஆகிய தோழமை கட்சிகளில் தங்கி இருக்கிறது. முதலில் பா.ம.கவும் இப்போது கம்யூனிஸ்ட்களும் வெளியேறிவிட்டதால் தற்போது காங்கிரஸ் கட்சியின் ஆதரவு மட்டுமே எஞ்சியுள்ளது. காங்கிரஸ் கட்சியின் 35 எம்.எல்.ஏக்களின் ஆதரவு இருந்தால் தி.மு.க. ஆட்சி தாக்குப்பிடிப்பதில் சிக்கல் ஏதுமில்லை.

ஆனால், பா.ம.க, கம்யூனிஸ்ட்கள் என ஒவ்வொன்றாக நண்பர்களை தி.மு.க இழந்து காங்கிரஸில் மட்டும் தங்கி இருப்பதால் காங்கிரஸ் இட்ட தாளத்துக்கு ஆடவேண்டியிருக்கும். குறிப்பாக அமைச்சரவையில் காங்கிரஸுக்கு பங்குதரவேண்டுமென தமிழக காங்கிரஸார் நெடுநாளாக கலைஞரை நெருக்கி வருகின்றனர்.

முன்னர் பா.ம.கவும், கம்யூனிஸ்ட்களும் ஆளும் கூட்டணியில் இருந்ததால் காங்கிரஸுக்கு மட்டும் பதவி வழங்குவதில் சிக்கல் இருக்கிறது என தி.மு.க. காரணம் கற்பித்தது. இப்போது இவர்கள் வெளியேறி காங்கிரஸின் உதவியுடன்தான் ஆட்சி நடக்கிறது, எனவே அமைச்சர் பதவி வழங்க வேண்டும் என்பது காங்கிரஸாரின் வாதம். எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போல பா.ம.க. தலைவர் ''காங்கிரஸுக்கு அமைச்சரவையில் இடமளிக்க வேண்டும்'' என் பகிரங்கமாகக் கூறி காங்கிரஸ் கட்சிக்கு உசுப்பேற்றிவிட்டுள்ளார். கலைஞர் மீதுள்ள கோபத்தால் அவருக்கும் காங்கிரஸுக்கும் சிண்டுமுடிந்துவிடும் பாலு இடதுசாரிகளைக் கடிந்து பேசவில்லை. அதாவது அவர்களுடன் நல்லுறவு பேணவே தி.மு.க. விரும்புகிறது. மாநிலமட்டத்தில் கம்யூனிஸ்ட்களுடன் தி.மு.க. உறவு கொள்வதை காங்கிரஸ் கட்சியும் எதிர்க்கவில்லை.

பக்கத்து வீடு

ஆனால், காங்கிரஸ் மீதுள்ள கோபத்தை கம்யூனிஸ்ட்கள் தி.மு.க. மீது காட்டப் புறப்பட்டுள்ளனர். இதனால் தமிழக கம்யூனிஸ்ட் கட்சியினர் பகிரங்கமாக தி.மு.கவை தாக்கிப் பேசத்தொடங்கினர். ஆரம்பத்தில் பொறுத்துக் கொண்டாலும் தொடர்ந்து அவ்வாறு இருக்க தி.மு.கவினரால் முடியவில்லை. ஆற்காடு வீராசாமி கம்யூனிஸ்ட்களை காட்டமாக தாக்கி அறிக்கை ஒன்றைக் கூட விடுத்திருந்தார். பதிலுக்கு தி.மு.கவானது பாரதிய ஜனதாவுடன் ஒரு காலத்தில் சேர்ந்திருந்த கட்சி தானே என இடதுசாரித் தலைவர் ஒருவர் கூறியுள்ளார். அவ்வாறான தி.மு.கவுடன் கம்யூனிஸ்ட்கள் ஏன் மீண்டும் அணி சேர்ந்தனர் என தி.மு.க தரப்பு பதிலிறுத்தது. இவ்வாறு பொறுப்பற்ற வசைபாடலை இடதுசாரிகள் கருணாநிதி மீது குவிப்பது நியாயமல்ல என்பதை பலரும் உணருகின்றனர்.

இடதுசாரிகளை பொறுத்தவரை அணுசக்தி ஒப்பந்தத்தை செயற்படுத்த விடாது மன்மோகன் அரசை வீழ்த்த முடியாதுபோன ஆத்திரத்தில் துவண்டு போயுள்ளனர். அந்த ஆத்திரத்தில் உறுப்பினர் ஆதரவை இழக்கும். அதற்கு பதிலாக கம்யூனிஸ்ட்களின் ஆதரவு கிடைத்தாலும் இவர்களிடம் 15 உறுப்பினர்களே உள்ளனர். தி.மு.கவின் 94 பேருடன் சேர்த்தால் 109 உறுப்பினர்களே அரசின் பக்கம் இருப்பர். இது சட்டசபையின் பெரும்பான்மைக்கு தேவையான 117ஐ விட 8 குறைவாகும். எனவே கம்யூனிஸ்ட்கள் சொல்வதுபோல் கலைஞர் காங்கிரஸை உதறினால் உடனடியாக அவரது அரசு கவிழும். இதைத்தான் ராமதாஸும், ஜெயலலிதாவும் ஆவலாக எதிர்பார்த்தபடி உள்ளனர்.

எனினும், கலைஞர் உறுதியாக காங்கிரஸுடன் உறவை தொடர்ந்து வருகிறார். அடுத்த ஆண்டு லோக்சபா தேர்தலில் தி.மு.க அணியில் கம்யூனிஸ்ட்கள் அனேகமாக போட்டியிடமாட்டார்கள் என தெரிகிறது. அ.தி.மு.க அணியில் இவர்கள் சேர்வதற்கும் வாய்ப்பில்லை. காரணம், அ.தி.மு.க


**எஸ்.சுரேந்திரஜித்**

அனேகமாக பாரதிய ஜனதாவுடன் கூட்டணி வைக்கவே இடமுள்ளது. ஒருவேளை அம்மாவின் அகங்காரத்தினால் பி.ஜே.பி எடுத்தெறியப்பட்டால் அ.தி.மு.க அணியில் இடதுசாரிகள் சேரலாம். மற்றப்படி கம்யூனிஸ்ட்கள் தனித்தவில் தான். அல்லது அ.தி.மு.க, தி.மு.க ஆகிய இரு அணிகளிலும் சேர விருப்பமின்றி உள்ள விஜய்காந்துடன் இடதுசாரிகள் கூட்டணி வைக்கலாம். அவ்வாறு நடந்தால் தமிழகத்தில் தொடங்கினால் சினிமா கவர்ச்சிக்கு ஆட்பட்ட மக்கள் அவரை ஆதரிப்பர் என்பதால் தெலுங்கு தேசம் கட்சிக்குத்தான் இழப்பு ஏற்படும். ஏற்கனவே, அக்கட்சியின் பல தலைவர்கள் புதிய கட்சிக்கு தாவியுள்ளனர். சிரஞ்சீவி கட்சி தொடங்குவதால் ஆளும் காங்கிரஸ் கட்சிக்கே லாபமாகும். அதாவது நாயுடுவின் வாக்குகளை சிரஞ்சீவி கணிசமான அளவு உடைப்பாராயின் காங்கிரஸுக்கு வெற்றிபெற இலகுவாகும். காங்கிரஸ் கட்சிதான் சிரஞ்சீவியை தூண்டிவிட்டதாகவும் கூறப்படுகிறது. அடுத்த ஆண்டு ஆந்திர சட்டசபை தேர்தலுடன் சிரஞ்சீவியின் அரசியல் பிரவேசம் அமைந்திருப்பதால் அது முக்கியத்துவம் பெறுகிறது.

இதேவேளை சிரஞ்சீவி கட்சி தொடங்கியது குறித்து ஜெயலலிதாவிடம் செய்தியாளர் கேட்டதற்கு அவர் சொன்ன பதில் விஜய்காந்தின் சீற்றத்தை தூண்டிவிட்டுள்ளது.

''தமிழகத்தை பிடித்த வியாதி ஆந்திரத்தையும் தொற்றிக்கொண்டு விட்டது'' என அம்மா கூறியிருந்தார். 'தமிழக வியாதி' என அவர் சொன்னது விஜய்காந்த் தான் என்பது தெளிவு. இதுகுறித்து ''நாங்கள் வியாதிக்காரர் என்றால் ஜெயலலிதா பெருவியாதிக்காரர்'' என விஜயகாந்த் பதிலடி தந்துள்ளார். சினிமாவால் வளர்ந்து, உயர்ந்து விட்ட அம்மா இப்போதுதான் பிறப்பிலேயே அரசியல் சாணக்கியத்துடன் பிறந்தது போல் பேசுவது வேடிக்கைதான். கண்ணாடி வீட்டுக்குள்ளிருந்து கல்லெறியும் வேலையை அம்மா தொடர்வது எதிரிகளுக்கு நல்ல வாய்ப்புத்தான். *

# மீண்டும் வான்புலிகள்




மீண்டும் புலி விமானங்கள் தெற்கில் கிலி கிளப்பியிருக்கின்றன.

கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் மீதான தாக்குதல் தொடக்கம் கடந்த ஏப்ரல் 27ஆம் திகதி - சரியாக நான்கு மாதங்களுக்கு முன்னர் - வெலிஓயா படைநிலைகள் மீதான தாக்குதல் வரை நான்கு தடவைகள் விடுதலைப் புலிகளின் விமானப் படையணி நடத்திய வெற்றிகர அதிரடிகளை அடுத்துத் தெற்கில் சற்றுக் கலக்கம் ஏற்பட்டிருந்தது என்பது தெரிந்ததுதான்.

எனினும், அதன் பின்னர் அங்கு, இங்கு எனப் பல நாடுகளுக்கும் ஓடித்திரிந்து, வழமை போல பலகோடி ரூபாக்களைக் கொட்டி, பல்வேறு 'ராடர்'களை வாங்கிப் பொருத்தி, இலங்கையின் வான்வழிப் பாதுகாப்பை உறுதிசெய்துவிட்டோம் என்று இலங்கையின் பாதுகாப்பு உயர்பீடம் மார்தட்டியமையைப் பார்த்து தென்னிலங்கை சற்று ஆசுவாசப்படுத்திக் கொண்டு ஆறுதல் அடைந்தது.

ஆனால், அந்த வான்வழிப் பாதுகாப்பு வலையமைப்பு எவ்வளவு ஓட்டையானது என்பது, கடந்த செவ்வாய்க்கிழமை திருகோணமலையில் அதிரடித் தாக்குதல் நடத்திய புலிகளின் விமானத்தை அரசுப் படைகள் கோட்டை விட்டதன் மூலம் புலனாகிவிட்டது.

புலிகளின் விமானங்களால் கொழும்பு அரசுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதான பிரச்சினை உருவான கையோடே புலிகளின் விமானப் பறப்புகள் பற்றிய தகவல்களை முற்கூட்டியே பெற்றுக் கொள்வதற்காக 'இந்திரா' ரக ராடர்களை - உடனடியாகவே - புதுடில்லி, இலங்கைக்கு வழங்கி உதவியது.

அதைப் பெற்றுக்கொண்ட இலங்கை, ஆனாலும் அந்த 'இந்திரா' ரக ராடர்கள் இரு பரிமாணங்கள் கொண்டவை எனக் குறிப்பிட்டு, புலிகளின் விமானங்களின் பறப்புகளைத் துல்லியமாகக் கண்டறிய அந்த வகை 'ராடர்' போதுமானதல்ல என்று குறையும் பட்டுக்கொண்டது.

இந்தியாவின் 'ராடர்' உதவியை பெற்றுக்கொண்டே, அதேசமயம் இது விடயத்தில் இந்தியாவுக்குக் கழுத்தறுக்கும் காய்நகர்த்தல் ஒன்றையும் கொழும்பில் பாதுகாப்பு உயர் பீடம் மேற்கொண்டது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசு ஆட்சிப்பீடம் ஏறிய நாள் முதலே அது இந்தியாவையும் மேவி, இப்பிராந்தியத்தில் இந்தியாவின் இராஜதந்திர எதிரியான சீனாவுடன் அதிகம் கைகோத்து வருகின்றது என்பது வெளிப்படையாக - அம்பலமாக - தெரியும் விடயம்தான்.

இந்தியாவிடம் இருபரிமாண 'ராடர்'களை வாங்கிப் பொருத்திக்கொண்ட இலங்கை அதேசமயம் சீனாவுடனான தனது ஸ்திர உறவைப் பயன்படுத்தி, அதனிடமிருந்து முப்பரிமாண ராடரைப் பெற்றுக்கொள்ளவும் நடவடிக்கை எடுத்தது.

அத்தகைய 'ராடர்' மையங்களை இலங்கையின் வடமுனைப் பிரதேசங்களில் அமைத்துக் கொள்வது தனது வான் பிராந்தியத்தை அந்நிய சக்திகள் நோட்டம் விட்டுக்கண்காணிக்கும் பேராபத்தைத் தனக்கு ஏற்படுத்தும் எனக் கருதும் இந்தியா, அதுகுறித்த தனது சிரத்தையையும் சீற்றத்தையும் தனக்கே உரித்தான இராஜதந்திர வழிகளில் கொழும்புக்குத் தெரியப்படுத்தியது.

வழமைபோல, அதைத் தலையாட்டி உள்வாங்கிக்கொண்டே - 'நீ சொல்வதைச் சொல்லு, நான் செய்வதைச் செய்கிறேன்!' என்ற இறுமாப்புப் போக்கோடு -- இவ்விடயத்தையும் கையாண்டது இலங்கைப் பாதுகாப்புத் தரப்பு என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

இந்தியாவின் பூர்வாங்க ஆட்சேபனையை உதாசீனப்படுத்திவிட்டு சீனாவின் முப்பரிமாண ராடர்கள் பொருத்தும் நடவடிக்கைகள் இங்கு, ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டன என்பதுதான் இப்போது உள்வீட்டுத் தகவலாகும்.

இந்தியாவின் இருபரிமாண 'இந்திரா' ராடர்கள் திருகோணமலை துறைமுகம் மற்றும் கடற்படைத்தளப் பிரதேசங்களில் பொருத்தப்பட்டுள்ளன.

போதாக்குறைக்கு சீனாவின் 'ராடர்' வசதிகளும் உண்டு.

இவற்றுக்கெல்லாம் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டுத்தான் புலிகளின் விமானம் திரும்பவும் வந்து தாக்குதல் நடத்திவிட்டுச் சென்றிருக்கின்றது - அதுவும் மிக உயர் பாதுகாப்புப் பிரதேசமான திருகோணமலைக் கடற்படைத் தலைமையகம் மீது.

தாக்குதலுக்குள்ளான இந்த மையம் இலங்கையின் யுத்த நடவடிக்கைகளில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று.

இங்குதான் கடற்படையின் கிழக்குக் கட்டளைத் தலைமைப்பீடம் உள்ளது. வடக்கு யுத்தமுனைக்கான பிரதான விநியோக - வழங்கல் - மத்திய நிலையமும் இதுவே.

அருகில் சீனக்குடாவில் விமானப் படைத்தளம் அமைந்துள்ளது.

திருகோணமலைத் துறைமுக முனையின் உச்சியில் அமைக்கப்பட்டிருக்கும் கண்காணிப்பு மையம் மூலம் கிழக்கு முனையில் பலநூறு கடல்மைல் தூரம் வரையான கடற்பிரதேசத்தை தடுப்பு ஏதுமின்றித் துல்லியமாகக் கண்காணிக்கும் இயற்கையான வாய்ப்பு வசதிகளும் உள்ளன.

அத்தகைய கூட்டுத்தளமே இம்முறை புலிகளின் இலகுரக விமானத்தின் தாக்குதல் இலக்காகியிருக்கின்றது.

இவ்வளவு உயர் கண்காணிப்பு வசதிகொண்ட தளம் மீது புலிகளின் விமானத்தின் தாக்குதலும், தப்பிச்செல்லலும் மீண்டும் ஒருமுறை எவ்வாறு சாத்தியமாகின என்பது குறித்து இலங்கை அரசின் பாதுகாப்பு வட்டாரங்கள் மட்டுமன்றி, கொழும்பில் உள்ள பல வெளிநாட்டுத் தூதரகங்களின் பாதுகாப்பு மற்றும் உளவுப் பிரிவுகளும் புருவத்தை உயர்த்துகின்றன.

புலிகளின் தாக்குதல் விமானம் நெருங்கியிருக்கின்றமை பற்றிய எச்சரிக்கைத் தகவலை விமானப்படை மூன்று நிமிடங்களுக்கு முன்னரே தமக்குத் தந்தது என்று திருகோணமலைக் கடற்படை மையம் தெரிவித்துள்ளது.

**வி.சிவராம்**

இந்தத் தகவலை வைத்து பாதுகாப்பு ஆய்வாளர்கள் சாத்தியப்பாடான சில ஊகங்களை வெளியிடுகின்றனர்.

வன்னியில் கிளிநொச்சி, இரணைமடுத் தள ஓடுபாதையில் இருந்தோ அல்லது முல்லைத்தீவில் புலிகளின் மைய நிலப்பகுதியில் உள்ள பிற ஓடுபாதை தளத்தில் இருந்தோ புலிகளின் விமானம் தனது தாக்குதல் பயணத்துக்கான பறப்பை ஆரம்பித்து, தனது வழமையான உயரத்தில் பறந்து வந்திருந்தால் குறைந்தபட்சம் பதினைந்து நிமிடங்களுக்கு முன்னராவது விமானப்படையின் 'ராடர்' திரைகளில் அது சிக்கியிருக்கும். ஆனால், மூன்று நிமிடநேர முன்னெச்சரிக்கை அறிவிப்புக் காலத்தையே கடற்படைக்கு, விமானப்படை வழங்கியிருப்பதால் அந்தளவு தூரத்துக்கு திருகோணமலைக் கடற்படைத் தளத்தைப் புலிகளின் விமானம் நெருங்கும் வரை அதுகுறித்து விமானப்படையால் அறியமுடியவில்லை என்பது நிச்சயம்.

எனவே, திருகோணமலைக் கடற்படைத் தளத்திலிருந்து சற்றுத் தொலைவுவரும் வரை - 'ராடரில்' சிக்காதவகையில் - கடலை அண்டிய பிரதேசத்தில் கடல்மட்டத்துக்கு சற்று உயரத்தில் - இந்த விமானம் பயணித்திருக்கலாம் என்றும் -

அப்படி கடல்மட்டத்துக்கு சில மீற்றர் உயரத்தில் 'ரிஸ்க்' எடுத்துப் பறக்கும் விமானம், வான்வழி ரோந்துக் கண்காணிப்பில் தப்பும் வாய்ப்பு உள்ளது என்றும் -

சிலசமயங்களில், அது வேகமாகக் கடலில் வழுக்கி வரும் ஒரு படகு போல கூட கடற்படை ராடர்களில் அடையாளம் காணப்பட்டிருக்கலாம் என்றும் - கூறப்படுகின்றது.

திருகோணமலைக் கடற்படைத்தளம் மற்றும் துறைமுகத்தை நெருங்கியதும் விமானம் தனது உயரத்தை அதிகரிக்க, அப்போதுதான் விமானப்படை 'ராடரில்' சிக்க, அதுபற்றிய எச்சரிக்கையை விமானப்படை விடுத்திருக்கலாம் என்று ஊகிக்கப்படுகின்றது.

இதன் காரணத்தாலேயே புலிகளின் விமானம் திடீர்த் தாக்குதல் நடத்துவதற்கு மூன்று நிமிடங்களுக்கு முன்னர்தான் அதுகுறித்து விமானப் படையால் எச்சரிக்க முடிந்தது என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

அப்படி மூன்று நிமிடங்களுக்கு முன்னர் எச்சரித்திருந்தாலும் கூட, அவ்வாறான இலகுரக விமானம் ஒன்றை வழிமறித்துச் சுட்டுவீழ்த்துவதற்கு அத்தகைய குறுகியகால அவகாசமே போதுமானது என்றும் -

ஆனால், அப்படியிருந்தும், திருகோணமலைக் கடற்படைத்தளம் மற்றும் துறைமுகத்தில் இருந்த - உயர் தரத்திலான - விமான எதிர்ப்புப் பொறிமுறை ஏற்பாடுகள் இந்த விமானத்தை எங்ஙனம் கோட்டைவிட்டன என்பது புரியவில்லை என்றும் -

சில இராணுவ விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர்.

புலிகளின் விமானம் தாக்குதல் நடத்துவதற்கு வந்த சமயம் அது எழுப்பிய ஒலி, நிலம் அதிர்வது போன்ற உணர்வைத் தங்களுக்கு ஏற்படுத்தியதாக திருகோணமலைக் கடற்படைத் தளச் சுற்றாடலில் வசிக்கும் நகரவாசிகள் சிலர் கருத்துத் தெரிவித்திருக்கின்றனர்.

அதுவும், புலிகளின் விமானம், திருமலைத் தளத்தில் உள்ள உயர் விமான எதிர்ப்புப் பொறிமுறைக்கு 'டிமிக்கி' கொடுத்துவிட்டுத் தப்பிப் போனமையும், இத்தாக்குதலுக்கு புலிகள் வழமையாகப் பயன்படுத்தும் இலகுரக விமானத்தைத்தான் பயன்படுத்தினரா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும் சில ஆய்வாளர்கள் குறிப்பிட்டார்கள்.

இந்தத் தாக்குதல் குறித்து விசாரிப்பதற்காகக் கடற்படையும், விமானப்படையும் தனித்தனி விசாரணைக் குழுக்களை நியமித்திருக்கின்றன. அவைமூலம் ஏதேனும் தெரியவருமா என்பதை அறியக் காத்திருக்கவேண்டும்.

புலிகளின் ஒரு விமானம் - அதுவும் இலக்குகளைத் துல்லியமாகத் தாக்கும் கருவி வசதிகளைக் கொண்டிராத விமானம் - ஒரே ஒரு தடவை வந்து இரண்டு குண்டுகளை வீசிவிட்டுச்

(24ஆம் பக்கம் பார்க்க)


## Sales Executive

We are looking to a young, dynamic and a self motivated individual with a passion to achieve sales objectives and targets in the region of Jaffna. Ideal candidate we are looking for should be below 35 years of age with 4-5 years of experience in selling FMCG products in a reputed company. Also should possess very good G.C.E (A/L) results with credits in Mathematics and English at G.C.E (O/L). In addition to an excellent working environment the selected candidates will receive an attractive remuneration package with other benefits. Please apply with your complete CV and contact details of two non-related referees with position applied for marked on the left hand corner of the envelop or the subject line of the e-mail, within 10 day's of this advertisement to;

Senior Manager - Human Resources,
HEMAS MANUFACTURING (PVT) LTD
36, Bristol Street, Colombo 01.
E-mail: careers.consumer@hemas.com
website: www.hemas.com

HEMAS
Enriching Lives

(Online applications preferred on; www.topjobs.lk/hemas)

Hemas Holdings PLC is a leading public quoted conglomerate in Sri Lanka with interest in FMCG, Pharmaceuticals, Leisure, Freight, Travel, and Power Generation & Hospitals

Hemas Manufacturing (Pvt) Ltd as a part of the Hemas Group, manufactures & markets a wide range of FMCG Brands such as Baby Cheramy, Clogard, Kumarika, Dandex, Pro Sport, Diva & many others. Our manufacturing facilities are ISO Certified & we have a strong R&D set up closely networked with Suppliers & R&D labs abroad.

சுடர் ஒளி
ஒகஸ்ட் 31 - செப். 06, 2008
85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14 டெலிபோன்: 0114734401—6
பக்ஸ்: 0114734404
E-mail: editorial@sudaroli.com

# யுத்தமும் இடம்பெயர்வும்

தொடரும் இராணுவ நடவடிக்கைகள், ஆட்லறித் தாக்குதல்கள், விமானக்குண்டு வீச்சுகள் காரணமாக வன்னியில் இடம்பெயர்வோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துவருகிறது. மேலும் மூவாயிரம் குடும்பங்கள் இடம்பெயரும் அவலநிலைமை உருவாகி இருப்பதாக ஐ.நா.முகவர் அமைப்புக்கள் தெரிவிக்கின்றன.

ஜூன் மாதத்துக்குப் பின்னர் மட்டும் 18 ஆயிரத்து 970 குடும்பங்களைச் சேர்ந்த 74 ஆயிரத்து 119 பேர் வன்னியில் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களுடன் சேர்ந்து கிளிநொச்சியில் உள்ள இடம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 34 ஆயிரத்தை தாண்டிவிட்டது என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இடம்பெயர்ந்த அகதிகளில் ஆயிரக்கணக்கானோர் வெட்டவெளிகளில் மரநிழல்களிலும் புல்புதர்களிலும் தங்கியுள்ளனர். இவர்களை தங்கவைக்க ஏழு ஆயிரம் தற்காலிக கொட்டில்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றன என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஆனால், இவை வன்னி வந்துசேரும் அறிகுறி எதுவும் இதுவரை இல்லை.

அகதிகளின் பத்து சதவீதமான அடிப்படைத் தேவைகளையாவது பூர்த்திசெய்ய முடியாத நிலைமை வன்னியில் காணப்படுகிறது. இது மிகவும் வேதனை தரும் நிகழ்வு ஆகும்.

ஐ.நா.முகவர் அமைப்புகள், செஞ்சிலுவை சர்வதேசக்குழு, சர்வதேச மன்னிப்புச்சபை, அரச சார்பற்ற தொண்டு அமைப்புகள் இந்த அகதிகளுக்கு உதவுவதற்கு தயாராக இருக்கின்றன. ஆனால், இந்த நிறுவனங்கள் சுயமாக செயற்படுவதற்கு அரசாங்கம் விதிக்கும் நிபந்தனைகள் முட்டுக்கட்டையாக இருப்பதே இன்றைய அவலநிலைக்கு முக்கிய காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. அரசாங்கம் பெரும்போரை வன்னியில் தொடுத்துள்ள அதேசமயம் இப்போரினால் அல்லலுறும் மக்களுக்கான மனிதாபிமான உதவிகளுக்கும் முட்டுக்கட்டை போடுவது மகா பயங்கரமான ஒரு நடவடிக்கை ஆகும். ஆகவே உதவி வழங்கும் தொண்டு நிறுவனங்கள் மீதான முட்டுக்கட்டைகள் நீக்கப்படவேண்டும். இடம்பெயர்ந்தவர்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்திசெய்யப்படவேண்டும்.

அந்நிய நாடு ஒன்றை ஆக்கிரமிப்பது போன்று அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது.

இடம்பெயர்ந்த அகதிகளில் கணிசமான எண்ணிக்கையினர் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் இடம்பெயர்ந்துள்ளனர். தொடர்ந்து இடம்பெயரவும் அவர்கள் ஆயத்தமாக இருக்கின்றனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. மழைகாலம் நெருங்கிவருவதால் இவர்களது நிலைமை மேலும் மோசம் அடையும் என்று முல்லைத்தீவு அரசாங்க அதிபர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மழைகாலம் ஆரம்பித்துவிட்டால் வன்னிப் பகுதி வெள்ளக்காடாகிவிடும்.

இடம்பெயர்ந்த மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வன்னிக்கு வெளியே இருந்து வரும் உதவிகளுக்காக காத்திருப்பதாக சமீபத்தில் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் கூட்டிய மாநாடு ஒன்றில் அரச அதிகாரிகளும், நிவாரணப் பணியாளர்களும் தெரிவித்துள்ளனர். தொண்டு நிறுவனங்கள் மீதான கெடுபிடிகளை அரசு நீக்கினால் மட்டுமே அகதிகளுக்குத் தேவையான மனிதாபிமான உதவிகள் வன்னியை சென்றடைய முடியும்.

அரசாங்கம் விதித்துள்ள பொருளாதாரத் தடை காரணமாக வன்னிப்பகுதியில் உணவுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. குழந்தைகளுக்கு பால்மா கிடையாது. மருந்துப் பொருள்கள் இல்லை. மண்ணெண்ணெய் உட்பட எரிபொருள்களுக்குத் தட்டுப்பாடு. இப்படியான நிலையில் இடம்பெயர்ந்த அகதிகளின் நிலைமை எப்படி இருக்கும்?

ஆகவே, தொண்டு நிறுவனங்கள் மீதான கெடுபிடிகளை அரசு தளர்த்தி இடம்பெயர்ந்த மக்களின் அடிப்படைத் தேவைகளையாவது பூர்த்திசெய்யவேண்டும். யுத்தம் மூலமும், இடம்பெயர்ந்த அகதிகளை நிர்க்கதியில் விடுவது மூலமும், பெரும் அழிப்பு நடவடிக்கை ஒன்று இடம்பெற்று வரும் இந்தவேளையில் சர்வதேச சமூகம் வாளாவிருப்பது, வேதனை தருகிறது. *



# ஒதுங்கும் ஒஸ்லோ...!

## அதிரடி அரங்கு

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான நான்காம்கட்ட ஈழப்போர் முழு அளவில் வெடித்திருப்பதை அடுத்து, இரு தரப்புகளுக்கும் இடையில் இதுவரை சமரச முயற்சிகளில் ஈடுபட்டு வந்த அனுசரணையாளர்களான நோர்வேயின் பங்குபணி ஓரளவுக்கு தேவையற்றதாகிப் புறக்கணிக்கப்படும் சூழ்நிலை ஏற்பட்டது. இப்போது அந்தப் பொறுப்பிலிருந்து ஒஸ்லோ முற்றாக ஒதுங்கிக்கொள்ளும் சூழல் உருவாகி வருவதாக விடயமறிந்த வட்டாரங்கள் கோடிகாட்டுகின்றன.

சுமார் பத்தாண்டுகளுக்கு முன்னர் - 1990களின் இறுதியில் - தொடக்கத்தில் சத்தம் சந்தடியின்றி ஆரம்பமான இந்த அனுசரணைப்பணி, இப்போது அதேபோல சத்தம் சந்தடியின்றி அடங்கி முடிவுக்கும் வருகின்றது.

அப்போது, அதிகாரத்தில் இருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினதும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனினதும் இணக்கத்தின் பேரில் சமரசப் பணிக்கு இங்கு ஒஸ்லோ அழைக்கப்பட்டு அதன் நடவடிக்கைகள் ஆரம்பமாகின.

இப்போது, அதிகாரத்தில் இருக்கும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினதும் அவரது அரசினதும் முழு அதிருப்தியைச் சந்தித்த நிலையில் -

விடுதலைப்புலிகள் தரப்பின் ஒரு தலைப்பட்சமான ஆதரவும் இசைவும் இருந்தாலும் அதனால் பயனில்லை என்ற கட்டத்தில் -

இருதரப்புகள் மீதும் வலிந்து சமரச நடவடிக்கைத் திட்டம் எதையும் திணிக்க இயலாத தனது கையாலாகாத்தனத்துடன் -

இவ்விவகாரத்தை முழுமையாகக் கைகழுவி, அனுசரணைப் பொறுப்பிலிருந்து ஒதுங்கவேண்டிய சூழல் ஒஸ்லோவுக்கு ஏற்பட்டுவிட்டது.

இந்த ஆண்டு ஜனவரியோடு இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தநிறுத்தம் உத்தியோகபூர்வமாக முறிவடைந்து, முழுமையான - பிரகடனப்படுத்தப்பட்ட - போர் கட்டவிழத் தொடங்கியபோதே, நோர்வேயின் அனுசரணைப் பணி முடிவுக்கு வந்துவிட்டது என்று பலரும் கணிப்பிட்டனர்.

எனினும், நோர்வேயின் சமரசப் பங்களிப்பு இன்னும் முடியவேயில்லை என்ற சாரப்பட இருதரப்புகளினாலும் பெயருக்கேனும் சில கோடிகாட்டல்கள் வெளிப்படுத்தப்பட்டமையும் -

இருதரப்புகளும் தமது கொரே யுத்தத்துக்கு மத்தியில் மீண்டும் பேச்சுமேசைக்குத் திரும்பலாம் என்ற சற்றேனும் எதிர்பார்ப்பு ஆரம்பத்தில் சிறிதுகாலம் நிலவியமையும் -

இவ்விடயத்தில் சிறிதளவேனும் நம்பிக்கையோடு ஒஸ்லோவைக் காத்திருக்க வைத்திருந்தன.

யுத்தத்தில் புலிகளின் கை மீண்டும் ஓங்கும்போது -

அல்லது கொழும்பில் ஆட்சி அதிகாரத்தில் கணிசமான பங்கு ஐ.தே கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கிடைக்கும்போது -

மீண்டும் சமரசப் பங்களிப்புக்குத் தாங்கள் அழைக்கப்படலாம் என்ற எதிர்பார்ப்பு ஒஸ்லோவுக்கும் அண்மைக்காலம் வரை இருந்துதான் வந்தது. ஆனால், அது இப்போது முற்றாகத் தகர்ந்துவிட்டது என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்துக்குள் அதிக ஈடுபாடும் தலையீடும் காட்டும் புதுடில்லியின் புதிய அணுகுமுறை ஒஸ்லோவை இப்பிரச்சினையில் இருந்து முற்றாக ஓரங்கட்டவைக்கும் கட்டாயத்தை ஏற்படுத்தியிருக்கின்றதாம்.

அண்மையில் 'சார்க்' மாநாட்டுக்குக் கொழும்புக்கு வந்த இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான உயர் குழுவினர், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்த சமயம், அமைதிப் பேச்சுகள் தொடர்பாக வலியுறுத்திக் கூறிய சில விடயங்கள் பற்றிய தகவல்கள் இப்போது சில ஆங்கில, சிங்களப் பத்திரிகைகளில் மெல்லக் கசியத் தொடங்கியிருக்கின்றன.

''அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக, அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்துக்கு அப்பால் - அதிலும் மேம்பட்ட - ஒரு தீர்வுத் திட்டத்துக்கு தயாராகுங்கள். அதன் அடிப்படையில் புலிகளுடன் பேச்சு நடத்த நாங்கள் ஏற்பாடு செய்கிறோம்.'' - என்று இலங்கைத் தரப்பை, புதுடில்லி அப்போது திட்டவட்டமாகவும் தெளிவாகவும் வலியுறுத்தியதாக செய்திகள் வெளியாகின. அதனைப் பலரும் அந்தக் கட்டத்தில் நம்பவில்லை.

ஆனால், ஒருபுறம் பேச்சுக்குச் செல்லுமாறு புலிகளுக்கு அழுத்தம் அல்லது செய்தி ஒன்றைக் கொடுத்தவாறே, மறுபுறம் கொழும்புக்கும் இந்தச் செய்தியை புதுடில்லி கொடுத்திருக்கின்றது என்ற தகவல் இப்போதுதான் சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் இருந்து மெல்லக் கசிகின்றது.

அதுவும், இதுவரை இந்த விவகாரங்களில் அனுசரணைத் தரப்பாக செயற்பட்ட ஒஸ்லோவை முற்றாக வெட்டிவிட்டு இவ்விடயங்களை முன்னெடுக்கும்படி புதுடில்லி அழுத்தம் கொடுப்பதுதான் கவனிக்கத்தக்க அம்சமாகும்.

பௌத்த - சிங்களப் பேரினவாதிகளின் கைகளில் சிக்கி, அவர்களின் கருத்து நிலைப்பாட்டு ஆக்கிரமிப்புக்குள் முற்றாக மடங்கிக் கிடக்கும் கொழும்புக்கு இவ்விடயத்தில் ஒஸ்லோவை வெட்டுவது கரும்பு தின்பது போல இனிப்பானதுதான்.

ஆனால், எந்த சமரச முயற்சிக்கும் ஒஸ்லோவை ஒதுக்கிவிட்டு பிற தரப்பை நம்பிச்செல்லும் நிலையில் புலிகளின் தலைமை இல்லை என்று கூறப்படுகின்றது.

எனினும், ஒஸ்லோவை விட்டுவிட்டு, சமரசமுயற்சிக்கு வாருங்கள் என புலிகளுக்கு தகவல் கொடுக்கும் திட்டத்தைக் கூட புதுடில்லி, ஒஸ்லோ தளத்தைப் பயன்படுத்தித்தான் புலிகளுக்குக் கொடுத்திருக்கின்றது என்பதுதான் விந்தையான விடயம்.

மேற்குநாடுகள் பலவற்றில் விடுதலைப் புலிகள் அமைப்பு தடைசெய்யப்பட்டிருப்பதால் அங்கெல்லாம் பிரசித்தமாக செயற்பட முடியாத நிலைமை புலிகளுக்கு உண்டு. அதுவும் பிரிட்டன் போன்ற ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் இன்னும் கெடுபிடி அதிகம்.

என்றாலும் சுவிஸ், நோர்வே போன்ற நாடுகள் புலிகளின் அரசியல் செயற்பாட்டுக்கு வெளிப்படையாகவே தாராளமாக இடமளித்து வழிவிட்டிருக்கின்றன.

அதுவும், அமைதிப் பேச்சுக்காலத்தில் அவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட புலிகளின் பல தரப்புகள் இப்போது பாதுகாப்புக் கருதியும், தங்களின் சாதாரண செயற்பாட்டுக்கு வாய்ப்பான மையம் என்று கருதியும் இப்போது நோர்வேயில்தான் 'டேரா' போட்டிருக்கின்றன.

அத்தரப்புகளை நோர்வேயில் சந்தித்து அவற்றின் ஊடாகவே நோர்வேயை வெட்டிவிட புதுடில்லி முயன்றிருப்பதுதான் ஆச்சரியமான விடயம்.

'சார்க்' மாநாட்டுக்கு மன்மோகன்சிங் அணி கொழும்பு புறப்படுவதற்கு முன்னர், இந்திய இராஜதந்திர மட்டத்தின் மூத்த அதிகாரி ஒருவர் ஒஸ்லோ சென்றிருக்கிறார். அங்கு புலிகள் ஆதரவுப் பிரமுகர்கள் பலருடன் பல்வேறு மட்டத்தில் பேச்சுகளில் அவர் ஈடுபட்டார் என்று தகவல்.

'கொழும்பு அரசை பேச்சுமேசைக்கு புதுடில்லி எப்படியும் கூட்டிவரும். புலிகள் நோர்வேயின் பங்களிப்பை விட்டுவிட்டு அந்த அமைதிப் பேச்சுக்கு வரவேண்டும்' - என்ற சாரப்பட அவரின் கோரிக்கையும் - ஒருவகையில் அழுத்தமும் - அமைந்தன.

நோர்வேயைப் புறமொதுக்கிவிட்டு வரும் எந்த அமைதி எத்தனங்களுக்கும் புலிகளின் தலைமை இணங்காது என்பதை நோர்வேயில் உள்ள சம்பந்தப்பட்ட புலி ஆதரவாளர்கள் மேற்படி இந்திய இராஜதந்திரிகளுக்கு விளக்கியபோதும் அவர் விடாப்பிடியாக தமது வலியுறுத்தலைத் தொடர்ந்தார் என்றும் தெரிகிறது.

எப்படியானாலும், இதுகுறித்து புலிகளின் தலைமைக்குத் தெரியப்படுத்தி பதில் வாங்கித் தருவார்கள் எனக்கூறி, அந்த இந்திய அதிகாரிகளை சமாளித்து அனுப்பினார்களாம் மேற்படி புலிகள் ஆதரவுப் பிரமுகர்கள்.

ஒருபுறம் நோர்வேயில் புலிகள் ஆதரவுப் பிரமுகர்களுடன் ஒரு தொடர்பாடலை வைத்தபடிதான், மறுபுறத்தில் கொழும்பை பேச்சு மேசைக்குச் செல்லுமாறு கூறும் வலியுறுத்தலை சார்க் சமயத்தில் ஜனாதிபதி மஹிந்தருக்கு புதுடில்லி அரசுத் தலைமை கொடுத்திருக்கின்றது.

அதேசமயம் நோர்வேயில் இந்திய அதிகாரிக்கும், புலி ஆதரவுப் பிரமுகர்களுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்புகள் மற்றும் அவற்றின் உள்ளார்ந்தங்களை 'முகர்ந்து' உணர்ந்து கொண்ட ஒஸ்லோ அதனால் வெறுத்துப் போன தாகவும் கேள்வி.

வழமைபோல, இத்தகைய விடயங்களை மென்போக்கில் கையாண்டு, இணக்கத் தீர்வு காணும் தனது எத்தனப்போக்கில் நேரடியாகவே புதுடில்லியுடன் இது குறித்துப் பேச விரும்பிய ஒஸ்லோ, அதற்காக இந்தச் சமாச்சாரங்களை இந்தியத் தரப்பில் கையாளும் இந்தியத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணனை ஒஸ்லோவுக்கு வருகை தருமாறு அழைப்பு விடுத்ததாகவும் -

எனினும், தமது நெருக்கடியான நிகழ்ச்சிநிரல் திட்டங்களுக்கு மத்தியில் ஒஸ்லோவுக்கு இப்போது வருகை தருவதற்கு நேரம் ஒதுக்க முடியாதுள்ளது எனத் தெரிவித்து நாராயணன் அந்த அழைப்பைக் காய் வெட்டிவிட்டார் எனவும் -

சில வட்டாரங்களில் செய்திகள் கசிந்திருக்கின்றன.

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் தான் முழு மூச்சில் அனுசரணைப் பணியாற்றிய சமயத்தில், அது தொடர்பான சகல விடயங்களையும் அவ்வப்போது - தவறாது - புதுடில்லிக்கு நோர்வே தெரியப்படுத்தியே வந்துள்ளது. இந்தப் பிராந்தியத்தில் இந்தியாவின் முக்கியத்துவத்தை உணர்ந்து, அங்கீகரித்து, அதற்கு மரியாதை கொடுக்கும் விதத்தில், இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அனுசரணைப் பணி தொடர்பான தனது செயற்பாட்டை இந்தியாவுக்கு இதுவரை வெளிப்படையாகவே ஒஸ்லோ தெரிவித்து வந்தது என்பது பகிரங்கமான விடயம்தான்.

ஆனால், அப்படிச் செயற்பட்ட தன்னை இப்போது இந்தியா 'வெட்டி ஓட' எத்தனிக்கின்றது என்றும் -

கொழும்பு உட்பட்ட தரப்புகள் அதற்கு ஒத்து சைந்து காரியமாற்றுகின்றன என்றும் -

கருதுகின்ற நோர்வே அதனால் இப்போது நன்கு வெறுத்துப் போய் இருக்கின்றதாம்.

அதன் காரணமாக இலங்கை விவகாரத்தில் சம்பந்தப்படுவதை முற்றாகக் கைவிட்டு, ஒதுங்கிப் போய்விடலாம் என்ற வெறுப்பு நிலைக்கு ஒஸ்லோ வந்து விட்டது என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

• ஒஸ்லோவில் - அந்த அரசின் 'விருந்தினர்களாக' தங்கி இருந்து கொண்டு - காரியங்கள் பண்ணும் சிலரின் கைங்கரியமும் ஒஸ்லோவை இந்த வெறுப்பு நிலைக்குத் தள்ளியமைக்குக் காரணம் என்று கூறி அலுத்துக்கொள்கின்றன அந்த வட்டாரங்கள்.

எது, எப்படியோ இலங்கை விடயத்தில் அனுசரணைப் பணி என்ற தனது தசாப்த கால பங்களிப்பு முற்றுப்பெற்று விட்டது என்பதை ஒஸ்லோ முடிவு கட்டும் நிலைமை வந்து விட்டது என்பது மட்டும் இப்போதைக்கு உண்மை. *

# ஒபாமாவுக்கு வலு சேர்க்கும் பிடெனின் தெரிவு!

ரஜீவன்

புஷ் நிர்வாகத்தினால் பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் பயன்படுத்தப்படும் வழிமுறைகளை கடுமையாக விமர்சித்து வரும் செனட்டர் ஜோ பிடெனை தனது துணை ஜனாதிபதி வேட்பாளராக பராக் ஒபாமா தெரிவு செய்துள்ளார்.

65 வயது தொழிலாள வர்க்கத்தைச் சேர்ந்த ஜோ பிடென், ஐரிஷ் கத்தோலிக்கர். 1972 இலிருந்து டெலாவயரின் செனட்டராக பதவி வகிப்பவர். செனட்டின் வெளி விவகார



குழுவின் தலைவராகவும் பணியாற்றியவர். ஈராக் ஆக்கிரமிப்புக்கு ஆதரவளித்தவர். அதே போன்று கொசோவோ விவ காரத்தில் இராணுவரீதியாக அமெரிக்கா சேர்பியாவுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதை ஆதரித்தவர்.

எனினும், பிடென் பின்னர் ஈராக் குறித்த தனது முன்னைய கொள்கைகளை கைவிட்டார்.

மேலும் புஷ் நிர்வாகத்தினால் பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தத்தில் பயன் படுத்தப்படும் கொள்கைகளை கடுமையாக விமர்சித்து வருகின்றார்.

குவாண்டனாமோ முகாமை மூடவேண்டும் என தொடர்ச்சியாக குரல் கொடுத்து வருபவர் பிடென்.

ஈராக் விவகாரத்துக்கு தீர்வுகாண்பதற்கு சாத்தியமான அனைத்து இராஜதந்திர வழிமுறைகளையும் பயன்படுத்துமாறு ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ்ஷிடம் பலமாக வாதாடி தோற்றுப்போன பின்னரே பிடென் ஈராக் ஆக்கிரமிப்புக்கான தனது ஆதரவை வழங்கினார் என தெரிவிக்கப்படுகின்றது. எனினும், பின்னர் செனட்டில் புஷ் நிர்வாகத்தை மிகக் கடுமையாக விமர்சிப்பவராக மாறிய பிடென், ஈராக்கில் அமெரிக்கப் படைகள் நீண்டகாலம் நிலைகொண்டிருப்பதால் ஏற்படக்கூடிய பாதிப்பு குறித்து சுட்டிக்காட்டி வருகின்றார்.

2006 இல் பிடெனால் முன்வைக்கப்பட்டதே ஈராக்குக்கான சமஷ்டி ஆட்சி முறையிலான யோசனை.

மூன்று பிராந்திய அரசாங்கங்களை (குர்திஷ், சுனி, ஷியா) கொண்ட சமஷ்டி முறைமை மற்றும் எண்ணெய் எல்லை பாதுகாப்பு போன்றவற்றை நிர்வகிப்பதற்கு என மத்திய அரசாங்கம் ஆகியவை ஈராக்கில் உருவாக்கப்பட வேண்டுமென்கிறார் பிடென்.

பிடெனுக்கு ஈராக்குடன் வேறு தனிப்பட்ட தொடர்புகளும் உள்ளன. அவரது மகன் அமெரிக்காவின் தேசிய காவல் படையில் பணிபுரிகிறார். விரைவில் ஈராக்கில் பணி புரிவதற்கு அனுப்பப்படுவார்.

எனினும், பிடென் தனது மகன் அங்கு செல்வது தனக்கு விருப்பமில்லை என குறிப்பிட்டுள்ளார். அதேபோன்று, 15 வருடத்துக்கு பின்னர் எனது பேரப்பிள்ளைகளும் ஈராக்கிற்கு செல்வது எனக்கு விருப்பமில்லை. இதனால் ஈராக் விவகாரத்தை எவ்வாறு கையாள்கிறோம் என்பது முக்கியம் என்கிறார் பிடென்.

பிடென் பயங்கரவாதத்திற்கு எதிரான போர் குறித்தும் தொடர்ச்சியாக கேள்விகள் எழுப்பி வருபவர்.

2008 ஏப்பிரலில் அமெரிக்காவின் வெளிவிவகார கொள்கையை தீர்மானிக்கும் முக்கிய விடயமாக பயங்கரவாதம் இருப்பதாகக் கூறி புஷ் நிர்வாகத்தை அவர் கண்டித்தார்.

"பயங்கரவாதம் என்பது ஒரு வழிமுறை. பல அமைப்புகளும் நாடுகளும் பல்வேறு நோக்கங்களுக்காக அதனை பயன்படுத்துகின்றன. எம்மால் எதிரியை இனங்காண முடியாவிட்டால், அல்லது நாம் மேற்கொண்டுள்ள யுத்தம் எத்தகையது என தெளிவாக கையாள முடியாவிட்டால், அதில் நாங்கள் வெல்வது கடினம்." என ஏ.பி.சிக்கு அவர் தெரிவித்துள்ளார்.

அடிப்படை உரிமைகள் மீதான புஷ் நிர்வாகத்தின் அக்கறையின்மை குறித்து கவலைப்படுபவர்களுக்கு பிடென் ஒரு ஆறுதலான தெளிவு.

ஜூன் 2005இல் பிடென், குவாண்டனாமோவை மூடிவிடுமாறு வேண்டுகோள் விடுத்தார்.

பயங்கரவாத அமைப்புகள் தமது பிரசாரத்துக்கு பயன்படுத்துவதற்கு குவாண்டனாமோ உதவியாக அமைந்துள்ளது என ஏ.பி.சிக்கு அவர் தெரிவித்தார்.

அமெரிக்காவின் இராணுவ ஆணைக் குழு சட்டத்தை கடுமையாக எதிர்த்ததுடன் குவாண்டனாமோவை மூடும் சட்டமூலத்தை மற்றுமொரு செனட்டருடன் இணைந்து ஆதரித்தவர் பிடென்.

மேலும் வெளிநாடுகளில் அமெரிக்கா பயங்கரவாத சந்தேக நபர்களை தடுத்து வைப்பதை தடை செய்யக் கோரும் நீதியுடன் கூடிய தேசிய பாதுகாப்பு சட்டமூலமும் பிடெனால் கொண்டுவரப்பட்டதே.

செப்டம்பர் 11 இற்கு முன்னர் காணப்பட்ட சட்டங்களின் வலுவில் தனக்குள்ள நம்பிக்கையை பிடென் அடிக்கடி வலியுறுத்தி வருவதுடன் அமெரிக்க சட்டமா அதிபர் கொஞ்ச லெஸுடன் வாதாடியும் வருபவர்.

சட்டத்தின் ஆட்சிக்கு கட்டுப்பட்ட நேசபற்றுதி கொண்ட நாடு என்ற அமெரிக்காவின் அந்தஸ்தை சர்வதேச அரங்கில் மீண்டும் ஏற்படுத்தப் போவதாக உறுதியளித்துவரும் பராக் ஒபாமாவுக்கு செனட்டர் பிடெனின் தெரிவு வலு சேர்ப்பதாக அமையும்.

மேலும் ஈராக் விவகாரத்துக்கு தீர்வு காண்பதே தனது முன்னுரிமை என ஒபாமா கருதும் பட்சத்தில் பிடென் அதற்கு உதவியாக இருப்பார்.

புஷ் நிர்வாகம் அமெரிக்காவின் தீர்ப்பு மீதான நம்பிக்கையை அழித்துவிட்டது. உலகில் அதன் தார்மீக தன்மையையும் அழித்துவிட்டது என கவலைப்படும் செனட்டர் பிடெனை ஒபாமா துணை ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்துள்ளமை செப்டம்பர் 11 இற்கு பின்னராக உலகம் குறித்து ஒபாமா கொண்டுள்ள அவநம்பிக்கையையும் புலப்படுத்துகிறது.

அமெரிக்காவின் கொள்கையில் பாரிய மாற்றங்களை மேற்கொள்வது குறித்து பிடென் எதிர்வரும் நாட்களில் கருத்து வெளியிடுவார் என்ற எதிர்பார்ப்பு காணப்படுகின்றது.

அவரை பொறுத்தவரை இது புஷ் நிர்வாகம் விட்டுச் செல்லும் இடிபாடுகளை திருத்துவதாக காணப்படுகின்றது.

பிடென் தமது வெளிவிவகார கொள்கைகளுக்கு அப்பால், உள்நாட்டில் ஒரு தலைசிறந்த தாராளவாதியாகவும் கணிக்கப்படுகின்றார்.

அமெரிக்காவின் 'நேஷன் ஜேர்னல்' 2007 இல் ஒபாமா மற்றும் ரோபிற்கு அடுத்ததாக மூன்றாவது தலைசிறந்த தாராளவாத செனட்டராக பிடெனை தெரிவு செய்துள்ளது.

சிவில் உரிமைகள் குறித்த அவரது கொள்கைகளுக்காகவே பிடென் தெரிவு செய்யப்பட்டார்.

பிடெனின் இணையதளத்தில், 21 ஆம் நூற்றாண்டின் பாகுபாடுகளை முடிவுகட்டுவதற்கான அவரது திட்டம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் நீதித்துறைகளில் காணப்படும் பாகு பாடுகளை முடிவுக்கு கொண்டுவருவது குறித்து அவர் தெரிவித்துள்ளார். ✱


STUDY IN UK & USA
SINGAPORE - POLAND
WITHIN 3 WEEKS
MINIMUM O/L
ALL PAYMENTS AFTER THE VISA
100% VISA
BBA - BA - MBBS - B.COM - BSc & MSc, Etc....
STUDY MEDICINE IN BELARUS
MEDICINE கிடைக்கவில்லை என்று கவலைப்பட வேண்டாம். உங்களுக்கு A/L உண்டா? அப்படியானால் இலகுவாக MBBS பட்டம் பெற்றுவரலாம். அதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து கொடுப்பதோடு மாணவிகளுக்கு விசேடமாக பாதுகாப்பான முறையில் தங்கி கல்வி கற்பதற்கு சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.
UK, USA, POLAND, MALASIYA, SINGAPORE போன்ற நாடுகளுக்கும் சென்று உயர்கல்வி கற்க அனைத்து ஏற்பாடுகளும் செய்து தரப்படும். மாணவர்களுக்கு வெளிநாடு செல்வதற்காக அனைத்து செலவுகளும் 3,70,000/- மாத்திரமே என்பது குறிப்பிடத்தக்கது.
தமிழ் மொழிமூல அழைப்புக்கு - 077 12 50 789.
BBC BRITISH BUSINESS COLLEGE
Of INTERNATIONAL LEARNING RESOURCES
NO : 07, 2nd Floor, W.A. Silva Mawatha Wellawatte, Colombo 06.
0114 594 104, 077 1250789, E-Mail : bbcilr2010@gmail.com.



A LIFE - TIME CHANCE
STUDY MEDICINE
IN EASTERN EUROPE (BELARUS)




பெலாரசுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ள 06 ஆவது மாணவர் அணி




பொறியியல் (IT) ஏனைய கற்கைகளும் உண்டு எந்தவொரு கற்கை நெறிக்கும் குறைந்தபட்ட தேவை ஜி.சி.ஈ. (சா/த) ஆகும்.
இன்றே விண்ணப்பித்து 20 நாள்களில் விமானத்தில் புறப்படுங்கள்
வங்கி அறிக்கைகள், விசா நேர் காணல், அனுசரணையாளர்கள் -தேவை யில்லை.
விசா 100% உத்தரவாதம்
2008 அனுமதிக்கான இறுதிநாள் - ஓகஸ்ட் 25 ஆம் திகதி, உ/த மாணவர்கள் அதிபரின் கடிதத்துடன் விண்ணப்பிக்கலாம்.

கடந்த 2 ஆண்டுகளில் சென்றுள்ள 200 மாணவர்களின் விபரப் பட்டியல் எமது அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
சிறிலங்கா மருத்துவ சபையினாலும் உலகில் வேறு 70 இற்கு மேற்பட்ட நாடுகளிலும் அங்கீகரிக்கப்பட்டது.
மருத்துவ கலாநிதி - MD
(ஆங்கில மூலம் 6 வருடம்)
அனுமதிபெற தொடர்புகளுக்கு:
0773017883 (ஆங்கிலம் - தமிழ்)

PATHE ACADEMY
PEOPLE'S ACADEMY FOR TERTIARY AND HIGHER EDUCATION
Head Office
37, School Lane, Colombo - 03.
Tel : 2502012
Overseas Student Placement Department
111 - 1/2, Maya Avenue, Kirulapona, Colombo - 06.
Tel : 2586418
www.patheacademy.org

# வன்னியை மட்டுமல்ல நாட்டையே உலுப்பப்போகும்...



வடக்கை மீட்கும் படையினரின் மனிதாபிமான இராணுவ நடவடிக்கை 19 மாதங்களைப் பூர்த்தி செய்து கிளிநொச்சியை நோக்கி இராணுவம் நகர்ந்து கொண்டிருக்கும் நிலையில் - எதிர்வரும் நாள்களில் தீவிரமான மோதலையும் இரத்தக்களறியையும் நாடு எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என இராணுவ ஆய்வாளர்கள் எதிர்வு கூறுகின்றனர்.


இராணுவ ஆய்வாளர்களின் கருத்தை நோக்கு மிடத்து அடுத்து வரும் நாள்கள் வன்னியில் மட்டு மல்ல நாடு முழுவதும் போர் முனைகள் திறக்கப் படப்போகின்றன என்ற ஊகமே வெளிப்படுகின்றது.

மன்னாரில், வெலிஓயாவில், முகமாலையில் என படையினரால் திறக்கப்பட்ட களமுனைகளில் மன்னார், வெலிஓயா முனைகள் ஊடாகப் படையினர் கணிசமான இடங்களை கைப்பற்றி கிளிநொச்சியை நோக்கிய நகர்வை ஆரம்பித்துள்ளனர்.

''நாங்கள் கிளிநொச்சியை நெருங்கி விட்டோம். எமது எதிர்கால இலக்குகள் கடினமாகக் காணப்படும் என்றாலும் அதனை எம்மால் எதிர்கொள்ள முடியும்'' என்று இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத்பொன்சேகா வன்னிக் களமுனைக்கு விஜயம் செய்து நிலைமைகளை அவதானித்து விட்டு கருத்து வெளியிட்டுள்ளார்.

''கிளிநொச்சிக்கான கதவுகள் தற்போது படை

# அருகருகே, நெருக்கமாக இடம்பெறப்போகும் மோதல்



யினரால் திறக்கப்பட்டுள்ளன. எமது அடுத்த இலக்கு கிளிநொச்சிதான். சில காலங்களுக்குள் கிளிநொசசியை படையினர் மீட்டு விடுவார்கள். விடுதலைப்புலிகளின் நிலைகளை அழித்த வண்ணம் படையினர் உற்சாகத்துடன் முன்னேறி வருகிறார்கள். வெகுவிரைவில் வடக்கு மீட்கப்பட்டது என்ற செய்தி நாட்டுமக்களுக்கும் கிடைக்கும்'' என்று சரத்பொன்சேகா மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கிளிநொச்சியை எப்படியாவது மீட்க வேண்டும் என்ற திடசங்கற்பத்துடன் படையினர் தமது நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

படையினர் நினைத்தவாறு சிலசமயம் கிளிநொச்சி படையினரால் மீட்கப்படலாம். ஆனால் மீட்கப்பட்ட கிளிநொச்சியை படையினரால் தக்கவைக்க முடியுமா என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது.

யாழ்ப்பாணம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த சமயம், படையினர் ஆனையிறவு, பரந்தன், கிளிநொச்சி ஆகிய பகுதிகளை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.

95 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் படையினரால் மீட்கப்பட்ட போது, விடுதலைப்புலிகள் தமது படைவளங்கள் எல்லாவற்றையும் தரைவழித் தொடர்புகள் அற்ற நிலையில் கடல் வழியாக வன்னிக்கு மாற்றியிருந்தனர்.

வன்னியில் தங்களை ஸ்திரப்படுத்தி, பலப் படுத்திக் கொண்டு முல்லைத்தீவு, பூநகரி முகாம்களை மீட்டதுடன், கிளிநொச்சி, பரந்தனில் இருந்து படையினரை விரட்டி ஆனையிறவையும் மீட்டிருந்தனர்.

மறுபுறத்தில் மாங்குளம் ஊடாக ஒட்டிசுட்டான் வரை முன்னேறிய படையினரையும் வவுனியா வரை விரட்டியிருந்தனர்.

பழைய காலத்தை மீட்டுப் பார்க்கும் போது, வன்னியை அதாவது கிளிநொச்சியை படையினர் மீட்டாலும் அதை தக்க வைக்க முடியுமா என்ற கேள்வியே எழுகின்றது என்று நோக்கர்கள் கூறுகின்றனர்.

வன்னியின் களநிலைமை குறித்து வெளிவந்து கொண்டிருக்கும் தகவல்கள், கடந்த காலங்களை போன்ற விடுதலைப்புலிகளின் தந்திரோபாய பின்நகர்வா என்று ஊகிக்க வேண்டியுள்ளது என்று கூறுகின்றனர் நோக்கர்கள்.

''இலங்கைப் படைகளைப் பொறுத்த வரை அவர்களின் நடவடிக்கை எல்லாம் வெளிப்படை யானது. ஆனால் விடுதலைப்புலிகளின் நடவடிக்கையாக இருந்தாலும், செயற்பாடாக இருந்தாலும் அவை எல்லாம் இரகசியமானவை. அவர்களின் செயற்பாடுகளின் பின்தான் அவற்றின் விவரங்கள் தெரியவரும்.

கிளிநொச்சி வரை படையினர் வந்தாலும், அதை யிட்டுக் கவலைப்படாமல் தமது செயற்பாடுகளையே அவர்கள் முன்னெடுப்பர்.

தமது படைவீரர்களுக்கும் வளங்களுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையிலேயே அவர்களின் அணுகுமுறை அமையும். அந்த அணுகுமுறை எத்தகையது என்பது குறித்து எவராலும் ஆருடமோ எதிர்வோ கூறமுடியாது'' என்று ஓர் ஆய்வாளர் குறிப்பிடுகின்றார்.

எதுவாக இருந்தாலும் அடுத்து வரும் நாள்கள் வன்னிக்கு மட்டுமல்ல. நாட்டுக்கே கனத்த காலம் என்பது மட்டும் வெளிப்படை.

ஆய்வாளர்களின் கருத்துப்படி, நாடு முழுவதும் வெடிக்கப் போகும் இரத்தக்களரியால் பாதிக்கப்படப் போகிறவர்கள் பொதுமக்களே!

சிங்கள மக்களாயினும் சரி, தமிழ் மக்களாயினும் சரி, முஸ்லிம் மக்களாயினும் சரி பாதிக்கப்படப்போவது அப்பாவி பொது மக்கள்தான்.

மேடைகளில் ஏறி தொண்டைகிழியக் கத்தி தமது ஆட்சிப்பலத்தையும் ஆட்சிக் கதிரையையும் பாதுகாக்க முனைந்து நிற்கும் அரசியல் வாதிகள் எவரும் பாதிக்கப்படப் போவதில்லை. தமது பாதுகாப்பை உறுதி செய்து உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ அவர்கள் தங்கி விடுவார்கள்.

அரசியல் வாதிகளை நம்பியிருக்கும் பொதுமக்கள் 'அம்போ' என வீதியில் நிற்க வேண்டியதுதான்.

* * *

வன்னியில் தொடரும் நடவடிக்கைகளுக்கு மத்தியில் விடுதலைப்புலிகள் நாட்டைக் காக்கும் பணிக்காக தீவிர பயிற்சிகளை ஆரம்பித்துள்ளனர்.

போர்க்கட்டுமானப் பயிற்சிகள் எங்கும் தீவிரமாக நடைபெறுகின்றன. வர்த்தகர்கள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உறுப்பினர்கள், கூட்டுறவாளர்கள் என பல்துறைகளையும் சேர்ந்தவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

முதல் கட்டமாக ஆயிரம் பேருக்கான பயிற்சிகள் இடம் பெற்றுள்ளன.

அரசியல் துறையின் மேற்பார்வையில் இந்தப் பயிற்சிகள் தீவிரமாக முன்னெடுக்கப்படுகின்றன.

## அகதிகளின் பேரவலம் தொடர்கதையாகிறது

பெரும் எண்ணிக்கையானவர்கள் நிலம் மீட்கும் போரில் இணைந்து கொண்டிருக்கின்றார்கள்.

மறுபுறத்தில் சொந்த விருப்பத்தின் பேரில் இயக்கத்தில் இருந்து விடுபட்டுச் சென்றவர்களை மீள இணையுமாறு அரசியல்துறை அழைப்பு விடுத்துள்ளது.

இந்த அழைப்பை ஏற்று பெரும் எண்ணிக்கை யானவர்கள் மீளவும் படைகளில் இணைந்து கொண் டிருக்கிறார்கள். அவர்களுக்கு சிறு பயிற்சி அளித்து, களமுனைக்கு அனுப்பும் பணிகளும் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

படையினரின் பெரும் எடுப்பிலான நடவடிக்கைக்கு முகம் கொடுத்து, அதை முறியடிக்க வன்னி தயாராகி விட்டது என்பதையே விடுதலைப்புலிகளின் இத்தகைய செயற்பாடுகள் வெளிப்படுத்துகின்றன.

விடுதலைப்புலிகளின் யுத்த தயாரிப்பும் படையினரின் முன்னேற்ற நடவடிக்கையும் வன்னியில் பெரும் போர் ஒன்றுக்கான களம் திறக்கப்படப் போகின்றது என்று, கூறி நிற்கின்றன.

மிக நெருக்கமான சூழலில் இடம் பெறும் மோதலில் ஈடுபடும் நிலையை நோக்கி இரு தரப்புக்களும் நகர்ந்து கொண்டுள்ளன என ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி பிரிகேடியர் விமல் பொட்டேஜ் கருத்து வெளியிட்டுள்ளார்.

இதன் காரணமாக இரு தரப்புக்களுக்கும் பெரும் உயிர்ச்சேதம் ஏற்படக்கூடும் என்று அவர் எதிர்வு கூறுகின்றார்.

இரு தரப்புக்களும் தமது தரப்பின் உயிரிழப்பைக் குறைக்கும் அணுகு முறையைக் கடைப்பிடித்தாலும், அருகருகே, நெருக்கமாக இடம் பெறப் போகும் மோதல் நிச்சயம் பேரிழப்பைத்தான் ஏற்படுத்தப் போகின்றது.

வன்னி களமுனை நன்கு பரீட்சகமான விடுதலைப் புலிகள், படையினருக்கு பெரும் இழப்புக்களை ஏற்படுத்தவே முனைவர் என்று நோக்கர்கள் கூறுகின்றனர்.

எதுவாக இருந்தாலும் வன்னிக்கள முனை அடுத்து வரும் நாள்களில், வாரங்களில் அதிரத்தான் போகின்றது. அசத்துபவர்கள் யார் என்பதே சகல மட்டங்களிலும் எழும் கேள்வியாகும்.

* * *

வன்னியில் இராணுவ வடவடிக்கைகள் ஒருபுறம் தொடர, மறு புறத்தில் அந்த நடவடிக்கை காரணமாக தினமும் மக்கள் இடம் பெயர்ந்து கொண்டிருக்கும் அவலம் மோசமான நிலையை அடைந்துள்ளது என தகவல்கள் கூறுகின்றன.

மரங்களுக்குக் கீழ் வாழ்ந்துவரும் மக்களைக் குடியமர்த்த சிறு கொட்டில்கள் அமைக்க அரசசார்பற்ற அமைப்புக்கள் ஏற்பாடு செய்துள்ளன.

அந்தக் கொட்டில்களுக்குத் தேவையான தறப் பாள்களை தெற்கில் இருந்து எடுத்து வருவதில் பெரும் சிக்கல்நிலை தோன்றியுள்ளது.

கொழும்பில் உள்ள சர்வதேச தொண்டு நிறுவனங் கள் தேவையான அளவு தறப்பாள்களை வன்னிக்கு அனுப்புகின்றன. ஆனால் அவை ஓமந்தைச் சோதனை நிலையத்தில் முடக்கப்பட்டுள்ளன.

கொழும்பில் இருந்து அனுப்பப்பட்ட தறப்பாள்கள் ஓமந்தையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள விடயத்தை வன்னியில் இயங்கும் தொண்டு அமைப்புக்கள் தமது தலைமையகத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளன.

போதியளவு தறப்பாள்கள் வந்து சேராததால் அகதிகளை மீள் குடியமர்த்த முடியவில்லை என்று அந்த அமைப்புக்கள் கூறுகின்றன.


வன்னியில் போதியளவு உணவுப் பொருள்கள் இருப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. ஆனால் அங்கு விளையும் அரிசியைத் தவிர வேறு பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகச் செய்திகள் கூறுகின்றன.

**யாழவன்**

தினமும் 20 லொறிகளில் உணவுப் பொருள்களை வன்னிக்கு அனுப்புவதாக அரசு கூறிய போதும், அவசர அத்தியாவசியப் பொருள்கள் அந்தலொறிகளில் வருவதில்லை எனக் கூறப்படுகின்றது.

உரமும், அரிசியும் தான் அவற்றில் வருகின்றன. மக்களுக்கு உடனடித் தேவையான கோதுமை மா, சீனி, பருப்பு போன்றவை உட்பட மிளகாய மல்லி போன்ற உப-உணவுப்பொருள்கள் போதுமான அளவு வந்து சேரவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.


போதிய உணவின்றி, தங்க இடமின்றி, கல்வி வசதியின்றி பேரவலத்தில் சிக்கித் தவிக்கிறார்கள் அந்த மக்கள். எப்போது விடிவு வரும் என்ற ஏக்கத்துடன் காலத்தைக் கழிக்கும் அந்த மக்களின் பேரவலம் தொடர் கதையாகிவிட்டது.




[illegible]


மதன்

# டாக்டர் 'சிம்ப்'!



"மனிதனுக்கு லேசாகத் தலைவலி ஏற்பட்டாலோ, வயிறு சரியில்லை அல்லது காய்ச்சல் என்றாலோ உடனே 'நான் நோய் வாய்ப்பட்டு இருக்கிறேன்' என்கிற உணர்வு அவனுக்கு வருகிறது. அவனாகவே 'பார்மஸி' சென்று மருந்து வாங்கிக்கொள்கிறான்.

அப்படியும் குணமாகவில்லை என்றால் டாக்டரிடம் போகிறான். 'நோய் வாய்ப்பட்டிருக்கிறோம்' என்கிற இந்த உணர்வு, மனிதனைத் தவிர வேறெந்த விலங்கினத்துக்கும் கிடையாது!"

- இந்த முக்கியமான வேற்றுமையைச் சுட்டிக் காட்டியவர் ஹென்றி பெர்க்ஸன் என்னும் புகழ்பெற்ற தத்துவப் பேராசிரியர். எளிமையான - ஆனால், வலுவான இந்த வாதம் எல்லோரையும் திகைக்க வைத்தது.

மனிதன் 'தனித்தன்மை' படைத்தவன் என்று பிடிவாதமாகச் சொல்லிக்கொண்டிருந்தவர்கள் 'அதானே!' என்று மகிழ்ச்சியுடன் ஆரவாரம் செய்தனர். இந்த மகிழ்ச்சி பல ஆண்டுகள் நீடித்தது உண்மை.

ஆனால், அண்மைக்காலத்தில் சிம்பன்ஸிகளைப் பற்றிக் கண்டுபிடிக்கப்பட்ட உரு புதிய தகவல் - அவர்கள் யாருமே எதிர்பாராத ஒன்று!

ஆபிரிக்க நாடுகளில் சிம்பன்ஸிகளை ஆராய்ச்சி செய்த ஜேன் கூடாலும் பிறகு டோஷிஸாடா நிஷிடா என்பவரும் 'சிம்பன்ஸிகள் மருந்து சாப்பிடுகின்றன!' என்கிற உண்மையை உலகுக்குத் தெரியப்படுத்தினார்கள்.

ஒவ்வொரு நாள் காலையிலும் மாலையிலும் எல்லா சிம்பன்ஸிகளும் குறிப்பிட்ட சில செடிகளின் இலைகளை





மெனக்கெட்டுப் போய்ப் பறித்துத் தின்கின்றன.

அந்த இலைகளைச் சாப்பிடும்போது 'சிம்ப்'களின் முகம் அஷ்டகோணலாகிப் போவதையும் ஜேன் கூடால் கவனித்தார். உடனே, அந்த இலைகளைப் பறித்துக்கொண்டு வந்து சோதனைக் கூடத்திற்கு அனுப்பினார்.

அவை 'ஆஸ்பிலியா' என்கிற மருத்துவச் செடியின் இலைகள்! அந்த இலைகளுக்கு 'ஆன்ட்டிபயாடிக்' தன்மை உண்டு என்றும் வயிற்றிலுள்ள பூச்சிகளை அழித்து, ஜீரண சக்தியைச் சீராக்கும் தன்மை உடையது என்றும் சோதனைக் கூடத்தில் கண்டுபிடித்துச் சொன்னார்கள்!

"'சிம்ப்'கள் தினமும் கொஞ்சம் அந்த இலைகளைச் சாப்பிடுகின்றன. உடல்நிலை சரியில்லாவிட்டால், இலைகளின் அளவை 'சிம்ப்'கள் அதிகப்படுத்துகின்றன!' என்றார் கூடால்.

இத்தனைக்கும், கசப்பான இலை அது. சாப்பிடும்போது 'சிம்ப்'களின் முகச்சுளிப்புக்கு அதுதான் காரணம்! 'சிம்ப்' குட்டிகளைத் தாய் இழுத்து வைத்து (அந்தக் காலத்தில் பாட்டிகள், குழந்தைகளுக்குப் பலவந்தமாக விளக்கெண் ணெய் கொடுத்தது போல!) இலைகளைச் சாப்பிடவைத்தன.

அந்த இலைகளைத் தவிர, மருத்துவக் குணமுள்ள பலவிதமான மூலிகைகளை சிம்ப்கள் நோய்வாய்ப்பட்டிருக்கும்போது விழுங்குவதும் பிற்பாடு தெரியவந்தது, பாட்டி வைத்தியம்!

'சிம்ப்'களுக்கு இலைகளில் மருந்துகள் இருப்பது எப்படித் தெரியவந்தது என்பது பற்றி யூகங்கள்தான் செய்யமுடிந்தது! ஒருவேளை, பாட்டி வைத்தியம் மாதிரியே பரம்பரையாக வந்திருக்கக்கூடும்!

ஒருவேளை, சிம்பன்ஸிகளும் மனிதனைப் போல மொழியைக் கண்டுபிடித்திருந்தால், 'டாக்டர் சிம்ப்' பிரிஸ்கிரிப்ஷன் கூட எழுதுவாரோ! தொடர்ந்து ஆராய்ச்சிகள் நடக்கின்றன.

சரி, பொதுவாகவே உயிரினங்களுக்குத் 'தான் யார்?' என்று தெரியுமா? முகம் பார்க்கும் கண்ணாடியில் தெரியும் உருவம் தன்னுடையதுதான் என்பதை விலங்கினங்கள் புரிந்துகொள்கின்றனவா? பெரும்பாலான விலங்கினங்களுக்கு இந்த 'அறிவு' கிடையாதுதான்!

ஒரு நாயின் முன்பு கண்ணாடி ஒன்றை வைத்தால், நாய்க்குப் புரிவதில்லை. அது வேறொரு நாய் என்று நினைத்துக் கொஞ்ச நேரம் குரைத்துவிட்டு, பிறகு அந்த 'மற்ற நாயால்' ஆபத்து எதுவும் இல்லை என்று தெரிந்தவுடன், ஒருவிதக் குழப்பத்துடன் அந்த இமேஜை அலட்சியப்படுத்திவிடும்.

ஆனால், கண்ணாடியில் தெரிவது தன்னுடைய பிரதிபலிப்பு என்பதை ஒராங்குட்டானும் சிம்பன்ஸியும் மட்டுமே புரிந்துகொள்கின்றன (கொரில்லாவுக்குப் புரிவது இல்லை!). இதை நிரூபிக்க, சிம்பன்ஸியிடம் ஒரு எளிமையான சோதனை செய்தார்கள்...

தூங்கிக்கொண்டிருந்த சிம்பன்ஸியின் முதுகில் சிவப்பு வண்ணத்தால் பட்டையாக ஒரு கோடு போட்டார்கள். 'சிம்ப்' எழுந்தவுடன் அதன் முதுகைச் சற்றுத் திருப்பிக் கண்ணாடியைப் பார்க்க வைத்தார்கள்.

சிம்பன்ஸி கண்ணாடியில் தெரிந்த சிவப்புக் கோட்டைப் பார்த்துவிட்டுத் தன் முதுகிலுள்ள கோட்டை விரலால் துடைத்து அழிக்கப் பார்த்தது (இரண்டு வயதுவரை மனிதக் குழந்தைக்கும் கண்ணாடி இமேஜ் புரிவதில்லை!)

மனிதன், ஒராங் குட்டான், சிம்பன்ஸியைத் தவிர, கண்ணாடியில் தெரியும் இமேஜைப் புரிந்துகொள்கிற இன்னொரு உயிரினம் - டொல்பின் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மொழி? மனிதனின் 'ஸ்பெஷாலிட்டி'யாக மொழியை எடுத்துக்கொள்ளலாம்தான். ஆனால், பல லட்சக்கணக்கான ஆண்டுகளாக மொழி என்பதே இல்லாமல்தான் மனிதர்கள் வாழ்ந்தார்கள். பல்வேறு விதமான ஒலிகளை வாயால் எழுப்பியே, தங்கள் எண்ணங்களை மற்றவருக்குத் தெரியப்படுத்தினார்கள். இதையேதான் 'சிம்ப்'களும் செய்கின்றன. நாள்தோறும் 'லொட லொட'வென்று அவை பேசிக்கொள்கின்றன. அது என்ன மொழி என்று யாருக்குத் தெரியும்?

"விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள், டெக்னொலஜி போன்ற திறமைகளை மனிதன் வளர்த்துக்கொண்ட ஒரே காரணத்தால், நாம் 'தனிப்பிறவிகள்' என்று சொல்வது சரியான வாதம் அல்ல..." என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

எல்லாக் கண்டுபிடிப்புகளும் விஞ்ஞான வளர்ச்சியும் திடீரென (சுமார் பத்தாயிரம் ஆண்டுகளில்) வந்தவைதான் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்!

பல லட்சக்கணக்கான ஆண்டுகளாக மனிதன் மிருகங்களைப் போலத்தான் காடுகளில் அலைந்துகொண்டிருந்தான். அந்த மனிதர்கள், நம் முன்னோர்களே என்பதையும் நாம் புரிந்துகொள்ளவேண்டும்!

உண்மையில், Apes என்கிற குரங்கு வகைகளில் மனித இனமும் ஒன்று என்பதே உண்மை. வேண்டுமானால், மனிதனை ஒரு 'டீலக்ஸ் மொடல் குரங்கு' என்று சொல்லலாம்!

சராசரி மனிதனின் எடையுள்ள சிம்பன்ஸியின் மூளையைவிட, மனித மூளை மூன்று மடங்கு பெரியது. ஆம்! நாம் 'சிம்ப்'களைவிட படுஸ்மார்ட் ஆனவர்கள்தான். அதே சமயம் இந்தச் சிறப்பு அம்சங்கள் எல்லாம் உயிரினங்களுக்கும் பொருந்தும்.

பாம்பை விட மீனுக்கு மூளை அதிகம். மீனை விட பறவைக்கு மூளை அதிகம். பறவையை விட குரங்குக்கு மூளை அதிகம். குரங்கைவிட மனிதனுக்குமூளை அதிகம்.

மனிதனின் மூளையானது வளர்ச்சி அடைந்ததைத் தொடர்ந்து அவனுடைய மூளையின் கார்டெக்ஸ் பகுதியும் (Cerebral Cortex) மற்றும் பக்கவாட்டு லோபுகளும் (Frontal Lobes) பலமடங்கு வளர்ந்தன. எதிர்காலத்தைப் பற்றித் தீவிரமாகச் சிந்தித்து முடிவுக்கு வர உதவுவது நெற்றிக்கு உள்ளே இருக்கும் பக்கவாட்டு லோபுகள்தான் (Frontal Lobes)!

'இந்த ஆச்சரியமான மூளை வளர்ச்சி திடீரென்று - முப்பது இலட்சம் ஆண்டுகளில் மனிதனுக்கு மட்டும் ஏன் ஏற்பட்டது?' என்கிற கேள்விக்கு இன்னமும் பதில் கிடைக்கவில்லை!

ஆனால், சிம்பன்ஸி இயற்கை தனக்குத் தந்திருக்கும் மூளை வளர்ச்சியைக் கச்சிதமாக, முழுமையாகப் பயன்படுத்துகிறது.

மனிதன் ஏன் அப்படிச் செய்யவில்லை?

ஆயிரக்கணக்கான வருடங்களாகத் தொடர்ந்து மனிதன் நிகழ்த்திக் காட்டிய அழிவுச் செயல்களைத்தானே 'வரலாறு' என்று பெயரிட்டு அழைக்கிறோம்.

ஏன் இப்படி?... (தொடரும்)

# நான் கண்ட பாரதி

5



எஸ். டி.சிவநாயகம்

இலங்கைத் தமிழ்ப் பத்திரிகை உலகில் தன்னிகரற்ற ஜாம்பவானாக மதிக்கப்படுபவர் 'சுதந்திரன்', 'தினபதி', 'சிந்தாமணி', 'சூடாமணி' போன்ற பத்திரிகைகளின் ஸ்தாபக ஆசிரியராக மிளிர்ந்த அமரர் எஸ்.டி.சிவநாயகம் அவர்கள்.

ஈழத்துத் தமிழ் ஊடக உலகுக்குக் காத்திரமான பல பத்திரிகையாளர்களை வழிகாட்டி, உருவாக்கிவிட்ட பெருமைக்குரியவர் சிவநாயகம்.

27ஆண்டுகளுக்கு முன்னர் - பாரதியார் நூற்றாண்டு சமயத்தில் - தமது 'சிந்தாமணி' வார இதழில் 'நான் கண்ட பாரதி' என்ற தலைப்பில் தொடராக அவர் வரைந்த கட்டுரைகள் பரபரப்பாகப் பேசப்பட்டவை. மகாகவி பாரதியை புதிய கோணத்தில் தமிழ் உலகம் தரிசிக்கச் செய்தவர் சிவநாயகம்.

அக்கட்டுரைத் தொடரை மறுபிரசுரம் செய்வதன் மூலம் பெருமையடைகிறது 'சுடர் ஒளி'.

இக்கட்டுரைத் தொடருக்குள் புகமுன் வாசகர்களுக்கு ஒரு நினைவூட்டல். இத்தொடர் 27 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டது. இத்தொடரில் எஸ்.டி.சிவநாயகம் அவர்கள் கோடிகாட்டிச் செல்லும் பாத்திரங்கள் சில அச்சமயம் நம் மத்தியில் வாழ்ந்தவர்கள். அவர்கள் இப்போது இக்கட்டுரை மறுபிரசுரமாகும் சமயத்தில் நம்மத்தியில் இல்லாமல் மறைந்திருக்கலாம்.

எனவே, 27ஆண்டுகளுக்கு முற்பட்ட பின்புலத்திலே உங்கள் நினைவுகளைச் சுழலவிட்டபடி இந்தத் தொடருக்குள் நுழையுங்கள்!

- ஆசிரியர் -

கவிஞர்களுக்குப் பஞ்சம் இல்லாத நாடு தமிழ்நாடு.

இலக்கியத்தை மட்டுமின்றி இலக்கணத்தையும், வைத்தியம், ஜோதிடம் மற்றும் உள கலைகளையும் பாட்டிலே படைத்து வைத்திருக்கும் நாடு தமிழ்நாடு.

இழவு வீட்டில் கூட எதுகை மோனையுடன் ஒப்பாரிவைத்து பாட்டில் அழுவது பழந்தமிழ் மரபு.

பாரதியினாலேயே ஏற்றிப் போற்றப்பட்ட கம்பன், வள்ளுவன், இளங்கோ தொடக்கம் ஔவை, ஒட்டக்கூத்தன், புகழேந்தி, காளமேகம், ஐயங் கொண்டான், படிக்காசர், இரட்டையர்கள் வரை - இப்படி எத்தனையோ புலவர்கள் -

இவர்களைத் தவிர சேக்கிழார், வில்லிபுத்தூரர், கச்சியப்பர், அருணகிரி போன்ற பக்திக் கவிஞர்கள் இன்னும் பலர் -

இவர்களைத் தொடர்ந்து திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளை முதல் அருணாலக் கவிராயர் வரை மேலும் பலர் -

# தேச பக்தி மார்க்கத்துக்கு மதம் மாறிய பாரதி

இவ்வளவு கவிஞர்கள் தமிழ் பாடிவிட்டுப் போன பின்னர், திடீரென்று பாரதிக்கு ஏற்றமும் புகழும் வருவதற்கு பாரதியிடம் காணப்பட்ட தனிச்சிறப்பு ஏதாவது உண்டா?

இந்த வினாவிற்கு விடை கூறுவதற்கு முன்பு பாரதியிடம் ஆழ்ந்த கவித்துவம் இருந்ததா என்பதை நிர்ணயிக்கவேண்டும்.

எந்த ஒரு விஷயத்திலும் சாதாரண மனிதனுடைய பார்வை வேறு; கவிஞனுடைய பார்வை வேறு. சாதாரண மனிதன் ஒரு விஷயத்தை எடுத்துச் சொல்லும் பாங்குவேறு; கவிஞன் எடுத்துச் சொல்லும் பாங்கு வேறு.

ஒருவர், ஒரு சிறந்த கவிஞரா, அல்லரா என்பதைத் தீர்மானிப்பதற்கு ஒரு பெரிய காவியம் முழுவதையும் படித்துக்கொண்டிருக்கவேண்டிய அவசியம் இல்லை. நான்கு வரிகளைப் பார்த்தாலே கவிதா விலாசம் அதில் உண்டா, இல்லையா என்பதைக்கண்டு கொள்ளலாம்.


ஒரு சாதாரணமான பேர் வழியைப் பார்த்து, தமிழ்நாட்டில் எத்தனை நதிகள் பாய்கின்றன என்று கேட்டால், அவன் மதுரைக்காரனாக இருந்தால், முதலில் வைகை என்று ஆரம்பிப்பான். தஞ்சாவூர்க்காரனாக இருந்தால் காவிரி என்று ஆரம்பிப்பான். அப்படியோ, இப்படியோ, எப்படியோ ஆரம்பித்து -

வைகை
காவிரி
பாலாறு
பொருநை
தென்பெண்ணை

என்று அடுக்கிக்கொண்டே போவார்கள். அவர்கள் கூறுவதில் விவரம் இருக்குமே தவிர ஒரு சுவை இருக்காது.

தமிழ்நாட்டின் நதிகளைப் பாரதியார் எப்படிக் கூறிவிட்டார் என்பதைப் பார்த்தால் புள்ளிவிவரம் எது, கவிதை எது என்பது பளிச்சென்று புலப்பட்டுவிடுகிறது.

பாரதியார் எப்படிச் சொல்லுகிறார் என்று பார்ப்போமா?



இந்தியாவிற்கு வருகைதந்த வேல்ஸ் இளவரசரும் அவரது மனைவியும்

*காவிரி, தென்பெண்ணை பாலாறு - தமிழ்*
*கண்டதோர் வையை பொருநை நதி - என*
*மேவிய ஆறு, பலவோடத் - திரு*
*மேனி செழித்த தமிழ்நாடு.*

ஆகா, என்ன அழகாக அந்த நதிகளை வரிசைப்படுத்தி விட்டார். அதிலும் வைகைக்குக் கொடுத்திருக்கும் அடைமொழியைப் பார்த்தீர்களா? தமிழ் கண்ட வையையாம். தமிழ் வளர்ந்தது மதுரையிலேதான். அந்த மதுரையைச் சுற்றி ஓடுவதால் வையையும் தமிழைக்கண்டு விட்டதாம். இவ்வளவோடு நிற்கவில்லை அவர் கூற்று. இத்தனை ஆறுகளும் பாய்ந்து ஓடி ஒரு திருமேனியைச் செழிக்கச் செய்கின்றனவாம். தெய்வவிக்ரகத்தின் உருவைத்தான் 'திருமேனி' என்ற சிறப்புச் சொல்லால் குறிப்பிடுவது வழக்கம். இங்கே ஐந்துநதிகள் தொட்டுச் செழிக்கச்செய்யும் திருமேனி எது தெரியுமா? தமிழ் நாடு என்ற ஒரு மேனிதான்!

தமிழ்நாட்டுக்கு எத்தகைய மகத்துவம்!

இந்த நான்கு வரிகளே போதுமே பாரதியை ஒரு கவிஞன்தான் என்று ஒப்புக்கொள்வதற்கு. இதற்கு மேல் என்ன வேண்டிக் கிடக்கிறது?

பாரதி ஒரு கவிஞன்தான் என்பதை ஒப்புக் கொள்வோம். ஆனால், பாரதி கம்பனையும், கூத்தனையும், வள்ளுவனையும், இளங்கோவையும் விடப் பெரிய கவிஞன் ஆவானா என்று கேட்டால் அது ஆராய்ச்சிக்கு உரிய விஷயமாகி விடுகிறது. நிச்சயமாக கல்வியில் பெரியவனான கம்பனை விட விஸ்தாரமான கவிதாசக்தி கொண்டு விளங்கியவன் பாரதி என்பதை ஒப்புக்கொள்ள முடியாது. ஆயினும், பாரதியும் ஒரு மகாகவிதான் என்று ஏற்றுக் கொள்வதில் இடர்ப்பாடு எதுவும் இருக்க நியாயம் இல்லை.

பாரதிக்கு முன்பு தோன்றிய கவிஞர்கள் பெரும்பாலும் கடவுள் கதைகளை வைத்துப் பாட்டியற்றினார்கள். அல்லது சக்கரவர்த்திகளையும், மன்னர்களையும், அவர் தம் ராணிகளையும், குறுநில வேந்தர்களையும், வள்ளல்களையும், செல்வர்களையும் செல்வர்களால் அனுப்பப்பட்ட பரத்தையர்களையும் பாடினார்கள்.

அவர்களைப் போலவே பாரதியாரும் ஆரம்பத்தில் - அதாவது 39 ஆண்டுகளே வாழ்ந்தவர், 24 ஆவது பராயம்வரை - விநாயகர் நான்மணி மாலை என்றும், தோத்திரப்பாடல்கள் என்றும், வேதாந்தப் பாடல்கள் என்றும் பாடினார். பின்னர் சக்திப் பாடல்களும், பக்திப் பாடல்களும் எழுதினார். அதைத் தொடர்ந்து கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம் என்பனவும் பிறந்தன.

இவ்வ எல்லாம் பாரதியாரின் தனித்துவத்துக்கு எடுத்துக் காட்டுகள் ஆகும் என்று கொள்ள முடியாதவை.


அப்படியானால் பாரதியாரின் தனித்துவம் எங்கே தோன்றுகிறது?

பாரதநாடு சுதந்திர நாடாக விளங்கிய காலத்தில் பலவிதமான சமயங் களும், மதங்களும், மார்க்கங்களும் நாட்டில் நடைமுறையில் இருந்தன. அவற்றை வைத்து கவிஞர்கள் இராமபக்தி, கிருஷ்ண பக்தி, ஈசுரபக்தி, முருகபக்தி, தேவிபக்தி ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் பாட்டல்களையும், பிரபந்தங்களையும், காவி யங்களையும் பாடினார்கள்.

பாரதியாரோ, தேச பக்தி என்று ஒரு புதுவித பக்தியைப் பாடி ஒரு புதிய மார்க்கத்தையே தோற்றுவித்தார். ஒவ்வொரு சமயத் தலைவர்களின் பேராலே ஒவ்வொரு மார்க்கம் உலகில் தோன்றியது போல தமிழ்நாட்டில் தேசபக்தி என்ற ஒருமார்க்கம் பாரதியாராலே தோற்றுவிக்கப்பட்டது.

அதனால், பாரதியார் தேசபக்தி மார்க்கத்தின் ஸ்தாபகரானார். இதுவே அவருடைய சிறப்பு அம்சம் என்பதே என் கருத்தாகும்.

நாடு பிரிட்டிஷாருக்கு அடிமைப்பட்டிருந்த காலம் அது. அந்தக் காலத்தில் பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்துக்குத் துதி பாடி பிழைப்போர் நிறைய இருந்தார்கள். பாரதியாரும் இந்தச் சுழற்சியில் சிக்குண்டவரானார்.



பாரதியார்

1906ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் இளவரசரான பிரின்ஸ் ஒப்வேல்ஸ் இந்தியா வந்தபோது அவரையும், பிரிட்டிஷார் நடத்தி வரும் நல்லாட்சியையும் பாராட்டி நல்வரவுகூறி வாழ்த்துப் பாடினார் பாரதியார்.

*என்று தணியுமிந்த*
*சுதந்திர தாகம்?*
*என்று மடியு மெங்கள்*
*அடிமையின் மோகம்?*

என்றும் -

*பார்ப்பானை ஐயரென்ற*
*காலமும் போச்சே - வெள்ளைப்*
*பரங்கியைத் துரை என்ற*
*காலமும் போச்சே*

என்றும் -

*அன்னியர் தமக்கடிமை*
*அல்லவே - நான்*
*அன்னியர் தமக்கடிமை*
*அல்லவே*

என்றும் -

*சொந்த நாட்டிற்*
*பரர்க் கடிமை செய்தே*
*துஞ்சிடோம் - இனி*
*அஞ்சிடோம்*

என்றும் -

*ஆயிரம் உண்டிங்கு ஜாதி*
*- எனில்*
*அன்னியர் வந்து*
*புகலென்ன நீதி?*

என்றும் -

இரண்டு வருடங்களுக்குப் பின்னர் சுதந்திர முழக்கம் செய்த பாரதியார்தான் 1906ஆம் ஆண்டில் வேல்ஸ் இளவரசருக்கு வரவேற்புப் பாடினார் என்றால் ஆச்சரியமாக இல்லையா? அதுவும் எப்படி வாழ்த்தினார்...!?

*வருக செல்வ!*
*வாழ்கமன் நீயே!*
*வடமேற் றிசைக் கண*
*மாபெருந் தொலையினோர்*
*பொற் சிறு தீவகப்*
*புரவலன் பயந்த*
*நற்றவப் புதல்வ!*
*நல்வர வுனதே*

- எஸ்.டி.சிவநாயகம் -

*மேதகு நீயும் நின்*
*காதலங் கிளியும்*
*வந்தினிது வாழ்ந்தீர்! என்*
*மனம் மகிழ்ந் ததுவே.*

- இப்படி பிரிட்டிஷ் முடியரசின் சின்னமாக வந்த வேல்ஸ் இளவரசரை ஏற்றிப் போற்றிய பாரதியார், பின் மனநிலையில் முற்றும் மாறுபட்டவரானார்.

1908 ஆம் ஆண்டில் அவர் வெளியிட்ட "ஸ்வதேச கீதங்கள்" என்ற நூலின் மற்றொரு பதிப்புக்கு அவரே மீண்டும் ஒரு ஸமர்ப்பணம் எழுதியிருந்தார். அதில் என்ன கூறினார்?

"ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு விசுவ ரூபம் காட்டி ஆத்தும நிலை விளக்கிய தொப்ப, எனக்கு பாரததேவியின் சம்பூரண ரூபத்தைக் காட்டி, ஸ்வதேச பக்தியுற உபதேசம் புரிந்தருளிய குருவின் சரணமலர்களுக்கு இச்சிறு நூலைச் சமர்ப்பிக்கின்றேன்"

இதில் அவர் குறிப்பிட்ட குருவும் சிஸ்டர் நிவேதிதாதேவியாகத்தான் இருக்கவேண்டும். ஆனால் தெளிவில்லை.

இதைத்தொடர்ந்து 1909 ஆம் ஆண்டில் அவர் மற்றொரு கவிதை நூலினை வெளியிட்

(27 ஆம் பக்கம் பார்க்க)

# நள்ளிரவில் 3D ஒரு நாடகம்



## முன்கதைச் சுருக்கம்

சிக்காக்கோ நகரின் ஒதுக்குப் புறமான ஓரிடத்தில் நியூமூன் வைத்தியசாலை அமைந்திருக்கிறது. கொஞ்சம் தொலைவில் நர்சுகளின் விடுதி இருக்கிறது. மர்ம மனிதனொருவன் நள்ளிரவில் இந்த விடுதிக்குள் நுழைகிறான். பல திகில் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. நர்சுகள் உட்பட ஒரு ரோந்து பொலிஸ்காரன், பிரதேச பொலிஸ் அதிகாரி எனப் பலர் அவனால் கொலை செய்யப்படுகின்றனர்.

ஏன்? என்ன காரணம்?

சிறைச்சாலை அதிகாரியின் அழகிய இளம் மனைவியுடன் றோபோ என அழைக்கப்படும் மர்மமனிதன் உறவுகொள்வதை அதிகாரி கண்டுவிடுகிறான். ஆத்திரமடைந்த அவன் ரகசியமாக தன் மனைவியை கொன்று விடுகிறான். பிணத்தை பெட்டியில் அடைத்து சிறைக்கைதியான றோபோவையே கொண்டுசெல்ல வைக்கிறான். குற்றத்தை றோபோ மீதே சுமத்த வைக்கிறான். பொலிஸாரினால் கடுமையாகத் தாக்கப்பட்ட றோபோ வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்படுகிறான்.

அங்கே என்ன நடைபெறுகின்றது...?

ஜீனா துடித்துப் பதறி பாய்ந்து ஓடினாள். திருமதி கிளின்டன் சடலமாகக் கிடக்கும் கட்டிலைச் சுற்றி கதறிக் கொண்டு ஓடினாள்.

அவள் என்னதான் கதறினாலும் தொண்டைக்குழிக்குள்ளிலிருந்து ஈனஷ்வரமாகவென்றாலும் சத்தம் வெளி வரவில்லை.

அந்த அளவிற்கு பயத்தினால் அவள் உடல் முழுவதுமாக விறைத்து வெளிறிவிட்டது.

திருமதி கிளின்டனின் நிர்வாண உடலில் நெளிந்து வளைந்து, தலைநிமிர்ந்து சதைப்பாகங்களிலும் சளுக் சளுக்'கென தனது பற்களை பதித்துவிட்ட அந்த ஆபிரிக்க கருநாகம்-

ஜீனாவின் காலடியில் அல்லவா நெளிகிறது. ஜீனா ஓடினால் பின்னால் விரட்டுகிறது. சறு சறு'வென தரையில் வேகமாக நெளிகிறது.

ஜீனா சட்'டென வெறுமையாகக் கிடந்த ஒரு மேசையின் மேல் ஏறி நின்று கொண்டு பட பட'வென தனது கால்களை மேலும் கீழுமாக உதறி உதறி பார்த்தாள்.

பாம்பு கீழே இல்லை. டாக்டர் வில்லியத்தின் கரத்தில் இருந்தது. அதன் கழுத்தை தூக்கிப் பிடித்துக் கொண்டிருந்தான். அவனுடைய மஞ்சள் நிறமான பெரிய பற்கள் இளித்துக் கொண்டிருந்தன. தந்திரம் கொண்டதாகத் தோன்றும் கொடூரமான கண்களும் சிரிப்பதைப் போலவே ஜொலிக்கின்றன. அவனுடைய தொண்டைக் குழிக்குள்ளிருந்து ஒருவித கெக்கலிடும் சப்தம் வெளிவருகின்றது. இவனென்ன ஒரு டாக்டரா, இல்லை சூனியக்காரனா என்று பெண்கள் இருவருமே திகிலடைந்து போனார்கள்.

மேசையின் மேலிருந்து சட்'டென கீழே குதித்த ஜீனா ஓடிப்போய் வெல வெலத்துப் போய் சுவரோடு சாய்ந்து நின்றுகொண்டிருந்த அமுராவை கட்டிப் பிடித்துக் கொண்டாள்.

கிளின்டன் ஒன்றுமே இங்கே இடம் பெறவில்லை என்பதைப்போல கல்லூளி மங்கனாக நின்று கொண்டிருந்தான்.

அவன் சொன்னான்:-

''இளம் பெண்களே அச்சப்படாதீர்கள். நீங்கள் ஏதோ தவறான விசயம் நடந்துவிட்டதாக பயப்படுகிறீர்கள். அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. என் மனைவியை இந்த கருநாகம் கொத்திவிட்டது. ஆனால் அவள் உயிர்போவதற்கு முன்னரே அதே பாம்பின் மூலம் உடலில் ஏறியுள்ள விஷத்தை உரிஞ்சி எடுத்துவிட முடியும். அது எனக்குத் தெரியும். அதனால் உடனே பாம்பை பிடித்துவிட்டேன். அதுதான் இது'' என்று மிகவும் அமைதியாகச் சொன்னான்.

''அடேயங்கப்பா என்னா புழுகு புழுகுறான். அண்டப் புழுகனாக இருக்கானே'' என்று மனதிற்குள்ளாகவே முணு முணுத்துக் கொண்டு ஜீனாவும், அமுராவும் ஒருவரையொருவர் பார்த்து விழித்துக் கொண்டார்கள்.

எமகாதகர்கள் இருவர் வீசிவிட்ட வலையில் நன்றாக மாட்டிக் கொண்டோம் என்பது மட்டும் இருவருக்கும் விளங்கிவிட்டது. அதில் உருண்டு பிரண்டு மேலும் மேலும் சிக்கலில் மாட்டிக் கொள்ளக் கூடாது. நாசூக்காக சமாளித்துவிட வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டார்கள்.

''வெல்டன் சேர்! யு ஹேவ் டன் ஏ குட் ஜொப்'' என்றார்கள் இருவரும் ஒரே கோரசில். அப்படிச் சொன்னதும் கிளின்டன் மகிழ்ந்து போனான்.

ஆனால், டாக்டர் வில்லியமோ அவர்களை சந்தேகக் கண்களோடு பார்த்தான்.

'ஏண்டி சிறுக்கிகளே! எனக்கு உங்களைத் தெரியாதா வெல்டன்! என்றா பாட்டுப் பாடுகிறீர்கள். விசயம் வெளியானால் இதே பாம்பு உங்களின் அவயங்களில் எங்கெல்லாமோ கொத்திக் குதறிவிடும் கவனம்! கவனம்!' என்று மனதிற்குள் கர்ஜ்ஜித்தான்.



எழுதுவது கே. வி.

பெண்கள் இருவரும் அவனைப் பார்த்தார்கள். பாவம் வயதானவர். கொஞ்சம் சபலப் புத்தி. மற்றும்படி ஒன்றுமில்லை என்றுதான் இவ்வளவு காலமும் நினைத்து கொஞ்சம் அஜெஸ்ட் பண்ணிப் போனார்கள். அவன் செய்த பலவற்றை நினைத்தார்கள். இவன் ஓர் அப்பாவி டாக்டர் அல்ல' பெண்களுக்காகவும், பணத்துக்காகவும் என்ன கண்றாவியையும், பாதகச் செயலையும் செய்யக் கூடியவன் என்பதையும் உணர்ந்தார்கள்.

''இதோ பாருங்கள்! சும்மா வெல்டன் கில்டன் என்று பிதற்றிக் கொண்டிராமல் இந்த அறையில் நடைபெற்ற கருநாக சிகிச்சையை கண்டீர்கள்தானே! அதையெல்லாம் இந்த அறைக்குள்ளே முடித்துவிட வேண்டும். ஒரு கனவு போல நினைத்து மறந்துவிட வேண்டும். வெளியில் மூச்சுவிடக் கூடாது. அந்த விசயம் எப்படியாவது என் காதுக்குள் புகுந்து விடும். அப்புறம் கருநாக சிகிச்சை உங்கள் மேலே நடக்கும். அவ்வளவுதான். கவனம்! கவனம்!''

டாக்டர் அமைதியாகச் சொன்னான். அதில் அழுத்தம் இருந்தது. கண்டிப்பு இருந்தது.

இச்சம்பவம் இடம்பெற்று ஒரு வருடம் ஆகிறது. அதன் டாக்டர் வில்லியமின் பிரத்தியேக சிகிச்சை அறையில்




பாரதூரமான சிகிச்சைகள் எதுவும் இடம்பெறவில்லை. அமுராவும், ஜீனாவும் கப்சிப்'பென்று இருந்துவிட்டார்கள் எவரும் அந்த பிரச்சினையை கிளப்பவும் இல்லை. அதனால் அந்த அறைக்குள் இடம் பெற்ற பாதகச் செயல் எதுவித முணுமுணுப்புமின்றி மண்மூடிப் போயிற்று.

அதே கிளின்டன் இப்போது றோபோ போன்றதொரு அதிசயக்கத்தக்கவொரு வலிமையான மனிதனை சங்கிலியால் பிணைதது்க் கொண்டு வந்ததுடன் அவனுடைய வீரியம் மிக்க ஆண்மையையும் அடியோடு பிடுங்கி எறிந்துவிட்டான்.

றோபோ கட்டிலில் சவம்போல் கிடந்தான். அவனுடைய உடல் இயக்கம் முழுவதும் மின்சக்தி மூலமே இடம்பெற்றுக் கொண்டிருந்தது. மூச்சு இழையோடுவது முதல் திரவ ஆகாரம் வரை அனைத்துமே வயர்களினால் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

ஆகா! டாக்டர் வில்லியம் எவ்வளவு பெரிய புண்ணியவான்! ஓர் உயிரை காப்பாற்றுவதற்கு எவ்வளவு பெரும் கடினமான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார். இவரைப் போன்ற டாக்டர்கள் உலகில் இன்னும் கொஞ்சம் பேர் இருந்தால் மனித உயிர்களுக்கு சாவே இல்லை' என்று றோபோவை பார்த்த பலரும் அங்கலாய்த்தார்கள்.

அம்மாதிரியான உணர்வினை ஏற்படுத்தக் கூடிய முறையில் றோபோ கிடத்தப்பட்டிருந்தான்.

அவன் பக்கத்தில் ஜீனாவும், அமுராவும் இருத்தப்பட்டிருந்தார்கள்.

அவன் சவம்போலவே கிடந்தான்.

அந்த அறையில் அவனுடன் தனிமையில் இருக்க அவர்கள் அஞ்சினார்கள்.

டாக்டர் வில்லியம் சொல்வான்.

''இதோ பார் அமுரா, ஜீனா நீங்கள் கவலைப்படத்தேவையில்லை. ஆகக் கூடிப்போனால் ஒரு கிழமைதான். அவன் சுகமாகிவிடுவான். அதன் பிறகு அவனை சிறைச்சாலைக்கு கொண்டு போய் விடுவார்கள். அப்புறம் என்ன உங்களுக்கு ஜாலிதான். ஒரு கிழமைக்கு டபள் சம்பளத்தோடு உங்களுக்கு அதுமட்டுமில்லை எக்ஸ்ரா ஒரு தொகை கிடைக்கும் என்ஜோய்.''

நெஞ்சுக்குள் திகிலடித்தாலும் ஜீனாவும் அமுராவும் அந்த சமாச்சாரத்தைக் கேட்டு ஆனந்தமடைந்தவர்களாக கலகல வென சிரித்து பாசாங்கு செய்தார்கள்.

இந்த என்ஜோய் விசயத்தைச் சொல்லிவிட்டு டாக்டர் வில்லியம் அறையை விட்டு அகன்றதும் அவர்கள் கண்கள் றோபோவின் மீது பதியும்.

அவன் சவம்போலவே கிடப்பான்.

மூச்சு மட்டும் இழையோடும். கண்கள் இறுக்கமாக மூடிக் கிடக்கும்.

கண்களை மூடிக் கொண்டிருக்கிறானா? இல்லை இமைகள் இறுகி பார்வையை இழந்துவிட்டனவா? அவனுடைய செவிகள் ஏன் இப்படி சிலிர்த்துக் கொண்டிருக்கின்றன?

ஐயோ கடவுளே! இங்கே பேசுவதையெல்லாம் அவனுடைய செவிகள் கேட்டுக் கொண்டிருக்கின்றனவா? அவைகள் ஏதோ ஒரு மிருகத்தின் செவிகளைப் போல புடைத்து சிலிர்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்தால் நிச்சயமாக இங்கே பேசப்படுவனவற்றுக்கெல்லாம் அவதானத்தை செலுத்திக் கொண்டிருக்கிறான் என்றே தோன்றுகிறது.

மூன்றாம் நாள் இரவு:

அறைக்குள் மங்கலான வெளிச்சம் படர்ந்துவிட்டிருக்கிறது.

றோபோவின் மூச்சு வேகமாக வெளிவருகிறது. அமுரா அருகில் போய் குனிந்து அவன் முகத்தை உற்றுப்பார்த்தாள். ஒரு பட்சியின் சிற'கென றோபோவின் கண்ணிமைகள் திறந்தன.

(தொடரும்)

# பித்தன் பதில்கள்



ஜமீல்,
காத்தான்குடி.

**கேள்வி:** 'முன் அனுபவம்' - பிளஸ் பொயிண்டா...?

**பதில்:** சில சமயங்களில் இல்லை. காதல் பிஸ்னஸில் முன் அனுபவம் மைனஸ் பொயிண்ட்...!

சிவம்,
வெள்ளவத்தை.

**கேள்வி:** எனது சம்பளநாளில் மனைவி எள் என்றவுடன் எண்ணெயாய் நிற்கின்றாளே...!

**பதில்:** உமது 'செக்'குத்தானே காரணம்...?

ஐங்கரன்,
கொட்டகலை.

**கேள்வி:** காதலித்துத் திருமணம் செய்பவர்களும் விவாகரத்துச் செய்கிறார்களே...!



**பதில்:** மின்னுவதெல்லாம் பெ(ரன்/ண்) அல்ல என்பது காலம் பிந்தித்தான் புரிவதால்!

கமல்,
கொழும்பு.

**கேள்வி:** 'சோப்' விளம்பரத்துக்கு புடைவை தோய்க்கும் ஆணின் படத்தைப் போட்டால் என்ன...?

**பதில்:** வீட்டில் நடப்பதை விளம்பரம் செய்யலாமா?

ஆர்.சுரேஷ்,
வவுனியா.

**கேள்வி:** என் வீட்டு நாய் பெண்களைக் கண்டால் மட்டும் குலைக்காமல் வாலை ஆட்டிக் குழைகிறதே... ஏன்?





**பதில்:** எஜமான் எவ்வழி, நாய்கள் அவ்வழி.

நஜீப்,
சாய்ந்தமருது.

**கேள்வி:** சின்ன வீடு வைத்திருக்காத கணவனை எப்படி அழைக்கலாம்...?

**பதில்:** 'கன'வான்!

இராமர்,
தெஹிவளை.

**கேள்வி:** மனைவியால் 'கதி' கலங்கும் உம் போன்ற கணவன்மார் தப்பிக்க கதி எதுவோ?

**பதில்:** சரணாகதி. இல்லையேல் அதோகதி!

ரேகா,
வத்தளை.

**கேள்வி:** காதலிக்கும் போது என்னைப் 'புதுக்கவிதை' என்று வர்ணிக்கும் என்னவர், திருமணத்தின் பின் என்னை எப்படி அழைப் பார்...?



**பதில்:** தி.மு. - கவிதை! தி.பி. - கழுதை!

சம்சுதீன்,
மருதானை.

**கேள்வி:** வைவ் (wife) விற்கும் வைப்புக்கும் என்ன வித்தியாசம்.

**பதில்:** லைவ்விற்கு ஒன்று. லயிப்புக்கு மற்றது.

சுலோ,
யாழ்ப்பாணம்.

**கேள்வி:** கவிழ்க்கும் கலை யாரிடம் படிக்கலாம்?

**பதில்:** அரசியல் என்றால் கார்ள்மாக்ஸிடம்; காதலில் என்றால் வாத்ஸாயனரிடம்.

குமரேசன்,
வவுனியா.

**கேள்வி:** பேய்க்குப் பேன் பார்த்த அனுபவம் உண்டா?

**பதில்:** வீட்டில் உண்டே...!

ராஜேஷ்,
நீர்கொழும்பு.

**கேள்வி:** பித்தரே...! நீர் பெண் பித்தரா?

**பதில்:** ஆம். பென் பித்தர்.

ராகவன்,
இரத்தோட்டை.

**கேள்வி:** நைன்ரிகளை நம்பி நைன்ரீன்களுடன் கூட அனுப்பலாமா?

**பதில்:** சிலசமயம் நண்டைச் சுட்டு நரியைக் காவலுக்கு வைத்த கதை மாதிரி விவகாரம் கந்தலாகிவிடும். கவனம்...!

விமல்,
மாளிகாவத்தை.

**கேள்வி:** தர்ம துவீபம், அதர்ம துவீபம் ஆனது எங்ஙனம்?

**பதில்:** புத்தரின் மக்கள் பித்தர்களாக மாறியமையால்!

நடேஸ்,
நுகேகொடை.

**கேள்வி:** காதலிக்குக் 'கண்டோஸ்' வாங்கிக் கொடுக்கலாமா?

**பதில்:** தாராளமாக. ஆனால், பின்னர் மாங்காய் வாங்கிக் கொடுக்கும் நிலைமை வராவிட்டால் சரி!

நவநீதன்,
இறக்கக்கண்டி.

**கேள்வி:** திருமணம் ஒரு பேய்க்காட்டா...!

**பதில்:** பேய்க்காட்டு அல்ல. பேய்க்கட்டு. பேயைக் கட்டுதல்.

சுமன்,
மன்னார்.

**கேள்வி:** இக்கால நடிகைகளின் நடிப்பில் நவரசம் இருக்கின்றதா?

**பதில்:** நவரசம் இல்லை. அதை விஞ்சிய விரசம் மூட்டும் நிறைய உண்டு.

விஜயன்,
மாங்குளம்.

**கேள்வி:** இல்லை என்று சொல்லாத ஈகையாளன் யார்?

**பதில்:** இறைவனிடம் கையேந்துங்கள். அவன் இல்லை என்று சொல்லுவதில்லை.

வி.அருள்,
நிலாவெளி.

**கேள்வி:** 'ஓர் உறையில் ஒரு வாள்' என்ற பழமொழியைக் கூறி என் மைத்துனி மீதுபாய்ந்து தான் கிளம்புகிறாளே எனது மனைவி...!



**பதில்:** மிஸ்டர் அருள்! வாளுக்குச் சொன்னது ஆளுக்கும் பொருந்தும். வெளியில் வாள் வீசமுயலாதீர்!

சுந்தர்,
மாளிகைக்காடு.

**கேள்வி:** மாநகரசபைத் தேர்தலன்று கையில் மை வைத்தீர்களோ?

**பதில்:** நான் போக முன்னர் யாரோ மகா பித்தன் எனக்காக தன் கையில் மை பூசி, என் காதில் பூச்சுற்றிவிட்டுச் சென்று விட்டான்!

நஜீமா,
இரத்மலானை.

**கேள்வி:** கல்யாணத்துக்கு முன்னர் காதலனுக்கு விருந்து கொடுக்கலாமா பித்தரே...?

**பதில்:** 'வயிற்றுப் பசி' தீர்ப்பதில் தப்பில்லை தங்கையே!

சோமாஸ்,
மன்னார்.

**கேள்வி:** மேய்ச்சல் மாட்டைக் கட்டிவைத்துத் திருத்தமுடியுமா?



**பதில்:** தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் ... (partly illegible) — தொட்டில் பல திகட்டியதும் எட்டிப் பாய முயலுமே!

நகுலன்,
யாழ்ப்பாணம்.

**கேள்வி:** கடைசி வரை எங்களை மறவாதவர் யாரோ பித்தரே...?

**பதில்:** உங்களை நம்பிக் கடன் கொடுத்தவர்

குகன்,
கொக்குவில்.

**கேள்வி:** குமரிப் பெண்ணின் உள்ளத்தில் குடியிருக்க நான் என்ன செய்ய வேண்டும்?

**பதில்:** முதலில் அந்தக் குமரிப் பெண்ணின் உள்ளம் காலியாக இருக்கின்றதா என்பதை அறிந்துகொள்ளும்!

தாஹிர்,
மருதானை.


**கேள்வி:** திருமணம் செய்யப்போகும் பெண்ணுக்கு சமையல்செய்யத் தெரிந்திருப்பது அவசியமா?

**பதில்:** வருகின்றவனும் சமையல் செய்வான். மையலுக்கு வையல்சொல்லத் தெரிந்திருப்பதுதான் அவசியம்.

# சீனாவை வளர்க்கும் விநாயகர்!

குண்டூசி முதல் கம்ப்யூட்டர் வரை அனைத்துப் பொருட்களையும் தயாரித்து விற்று... உலக மார்க்கெட்டில் தனது முத்திரையைப் பதித்திருக்கும் சீனா, தற்போது தனது பார்வையை இந்தியாவின் பக்கம் திருப்பியுள்ளது.

நான்கு வருடங்களுக்கு முன்பு, சீனாவிலிருந்து இரண்டு குழுக்கள் மும்பை வந்தன. மும்பையை சுற்றியிருக்கும் கிராமங்களை சுற்றிப் பார்த்து, அங்குள்ள மக்களின் பழக்க வழக்கங்களை இக்குழுக்



கள் ஆய்வு செய்தன.

அங்குள்ள மக்கள் பெரும்பாலும் எந்தெந்தப் பொருட்களை அதிகமாக பயன் படுத்துகின்றனர் என்ற ஆய்வறிக்கையை இக்குழுக்கள் தயார் செய்தன.

பெரும்பான்மையான வீடுகளில் விநாயகர் சிலையை வைத்து பூஜை செய்வதை சீனர்கள் கண்டனர். பின்னர் சீனாவுக்குச் சென்று விநாயகர் சிலைகளை தயாரித்து விற்பனை செய்தனர். தற்போதெல்லாம் சீனாவில் பெரும்பாலான வீடுகளில் விநாயகர் சிலைகளைக் காணலாம்.

பலவித உலோகங்கள், பிளாஸ்டிக் மற்றும் பைபர் போன்றவைகளால் விநாயகர் சிலைகள் உருவாக்கப்படுகின்றன. இந்த சிலைகள் அழகாகவும், பார்த்தவுடன் மனதை கவரும் வண்ணத்திலும்... மலிவான விலையிலும் இருப்பதால் மிகவும் எளிதாகவே மார்க்கெட்டை பிடித்துவிட்டன.

மேலும் எல்க்ட்ரோனிக் பொருட்களாலும் நவீன விநாயகர் சிலைகள் சீனாவில் உருவாக்கப்பட்டு வரு கின்றன. அவையும் இந்திய மக்களை வெகுவாக கவர்ந்துள்ளன. இதனால் இந்தியாவில் விநாயகர் சிலைகளை உருவாக்கி விற்பவர்களின் வாழ்க்கை கேள்விக்குறியாகி உள்ளது.



சீனக் குழுவினர் இந்தியாவில் உள்ள மேற்கு வங்காளத்திற்கும் சென்றனர். அங்கே துர்கா பூஜை பிரபலம். இதை பார்த்த சீனக் குழுவினர் துர்கா சிலைகளையும் அதிகமாக உருவாக்கினர். இன்றைக்கு மேற்கு வங்காளத்தில் விற்பனையாகும் பெரும்பாலான துர்கா சிலைகள் சீனாவில் தயாரானவையே.

இந்திய மக்கள் நூற்றுக்கணக்கான தெய்வங்களை வணங்குவதையும், உருவ வழிபாட்டில் ஈடுபடுவதையும் புரிந்து கொண்ட சீனர்கள், இந்திய மார்க்கெட்டை ஆக்கிரமிக்கும் விதத்தில் தங்களுடைய தயாரிப்புகளை உருவாக்கினர்.

இந்தியாவில் 'அலிகால்' நகரம் பூட்டுக்கு பிரபலமான நகரம். அதையும் குறிவைத்து சீனர்கள் ஆக்கிரமித்த காரணத்தால் இன்றைக்கு அலிகார் நகரமே கிட்டத்தட்ட பூட்டுபோட வேண்டிய நிலையில் உள்ளது.

அதுமட்டுமா... இந்திய பெண்களுக்கு அழகு சாதனப்பொருட்கள் மீதும், ஆபரணங்கள் மற்றும் பாத்திர பண்டங்கள் மீதும் உள்ள ஆர்வத்தையும், ஆசையையும் புரிந்து கொண்ட சீனர்கள், அதையும் விட்டு வைக்கவில்லை. இன்றைக்கு சந்தையில் கிடக்கும் பெரும்பாலான அழகு சாதனப் பொருட்கள் மற்றும் நகைகள் சீனத் தயாரிப்புகளே...!

கேரளாவில் தளபாடங்கள், எலெக்ட்ரோனிக் பொருட்கள் தயாரிப்பும் பிரசித்தி பெற்றவை. அதையும் சீனா விட்டுவைக்கவில்லை. பர்னிச்சர் மற்றும் எலக்ட்ரோனிக் பொருட்களையும் தயாரித்து உலக சந்தையை ஆக்கிரமித்துள்ளது.

இப்படி சீனா அனைத்து வகையான பொருட்களையும் தயாரித்து ஆக்கிரமித்துள்ளது. இன்றைக்கு பரிசுப் பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள், களிமண் சிற்பங்கள், கடவுள் சிலைகள், எல்க்டரோனிக் பொருட்கள், ஸ்டேஷனரி பொருட்கள், பெயின்ட் போன்ற வர்ணம் தொடர்பான பொருட்கள் என எல்லாமே சீனாவின் கைவசமாகிவிட்டன.

இப்போது சீனா 70 சதவீதம் பொம்மைகளை இந்தியாவில் இறக்குமதி செய்துவருகிறது. இந்த சதவீதம் இன்னும் சில மாதங்களில் 95 சதவீதமாக உயரும் என்று கூறுகின்றனர், உலக சந்தை ஆய்வாளர்கள். இன்றைக்கு எலக்ரோனிக் பொருட்கள் முழுக்க முழுக்க சீனாதான் என்ற நிலை.

சீனாவிலிருந்து இந்தியாவுக்கு வரும் அனைத்துக் கப்பல்களும் நூற்றுக்கணக்கான கண்டெய்னர்களில் இந்தப் பொருட்களைத்தான் ஏற்றிவருகின்றன.

# வேலி

## விஞ்ஞானச் சிறுகதை

இலவச ரேசன் சாமான்களோடு வீடு திரும்பும்போது வாசலில் யார் அது? கையில் அட்டைப் பெட்டியை வைத்துக்கொண்டு மணிப்பொத்தானை முயன்றுகொண்டிருந் தார். என்னைப் பார்த்ததும், ''மன்னிக்கவும் இந்த வீட்டு நம்பர் 47682தானே?''

''ஆம்''

''மணியடித்தேன். யாரும் திறக்க வில்லையே?''

''மணி வேலை செய்யவில்லை. மின் வாரியத்துக்குச் சொல்லியிருக்கிறேன். கதவு திறந்துதான் இருக்கும். நீங்க யாரு?'' இந்த முகத்தை எங்கோ பார்த்திருக்கிறேன்?

''இங்கே ஷண்முகம் என்று...''

''நான்தான் ஷண்முகம்.''

என்னை மேலும் கீழும் பார்த்தார். பரிச்சயமுள்ள முகம். எங்கே பார்த்திருக்கிறேன்? ஓ! இவர் தொலைக்காட்சியில் அடிக்கடி வருவாரே!

''ஏய் ஷண்முகம்! என்னைத் தெரியலை?'' மறுபடி என் நினைவுப் பாதையில் அந்தத் தாடி வைத்த உக்கிரமான முகம் விளையாடியது. ''நான்தாண்டா மனோகர்!''

''ஓ, மனோகர்! நீங்க... நீங்க... அந்த மனோகரா? டாக்டர் மனோகர்?''

''ஆமாம். நீன்னே சொல்லு! அரசாங்கப் பள்ளியில் எட்டாவது வரை படிச்சமே. ஞாபகம் இல்லை?''

ஞாபகம் வந்துவிட்டது. டாக்டர் மனோகர்! இவன் பெரிய ஆளல்லவா? இங்கே எப்படி? இவனை நான் எதிர்பார்க்கவே இல்லை, அதனால்தான் நினைவுகள் தடுமாறின.

''நீங்க வந்து ...நீங்க வந்து...''

''இத பார் 'நீங்க' எல்லாம் வேண்டாம், டாக்டரும் வேண்டாம். பழைய சினேகிதனா வந்திருக்கேன். உள்ள போகலாமா?''

''மன்னிக்கணும்'' என்று கதவைத் திறந்தேன்.

''மதி, மதி'' என்று கூப்பிட்டேன். எதிர்பார்க்கவே இல்லை! எத்தனை வருஷம் ஆச்சு! மதி புதியவனைப் பார்த்துச் சற்றுத் தயங்கினாள்.

''மதி இது யார் தெரியுமா? என் பள்ளித் தோழன். நாமெல்லாம் தொலைக்காட்சியில் அடிக்கடி பார்க்கிறோமே, சாட்சாத் அதே டாக்டர் மனோகர்!''

மதி சட்டென்று தன் நீலச்சட்டையைச் சரிப்படுத்திக் கொண்டாள். அவள் கண்களில் இவர் எப்படி இங்கே என்ற கேள்வி தோன்ற, ''வணக்கம்மா, சௌக்கியமா?'' என்றான் மனோகர்.

'என்றான்' என்றுதான் சொல்லத் தோன்றுகிறது இப்போது என் வயதுதான்.

''வாங்க வாங்க'' என்று மதி வரவேற்றாள்.

உள்ளே வந்ததும் ''கதவைச் சாத்திரலாமா?'' என்றான்.

''தாப்பா கிடையாது''

மதி ரேசன் சாமான்களை வாங்கிக் கொண்டு ''எண்ணெய் தரலியா?'' என்றாள்.

''அடுத்தவாரம் தாரானாம். உக்காரப்பா, மனோகர். நீ தலைநகரிலல்லவா இருக்கிறதா நினைச்சுக்கிட்டு இருக்கேன்.''

''நேத்தி வரைக்கும் அங்கேதான் இருந்தேன்.''

''ஏதாவது வேலை விஷயமா வந்திருக்கியா?''

''இல்லை.'' என்று அட்டைப் பெட்டியை ஜாக்கிரதையாக மேசைமேல் வைத்தான்.

எனக்கு இப்போது கூட நம்பிக்கையில்லாமல்தான் இருந்தது. மனோகராவது எங்கள் வீட்டுக்கு வருவதாவது! அரசாங்கத்தின் மிகப் பெரிய விஞ்ஞானி காரில் அல்லவா வரவேண்டும்!

''என்ன யோசிக்கிறே?''

''கடைசியா உன்னை எங்கப் பார்த்தம்னு யோசிக்கிறேன்...தலைவர் கூட ஏதோ கட்டடத்தைத் திறந்து வைக்கிறப்போ... மதி, அது என்னிக்கு?''

''முந்தாநாள்தாங்க.''

''அதெல்லாம் விடு ஷண்முகம். நீ எப்படி இருக்கே?''

''உயிரோடத்தான் இருக்கேன். அரசாங்க உடை, அரசாங்க உணவு, அரசாங்க வீடு'' என்று சிரித்தேன்.

''மூச்சுக்காத்து கூட அவங்களதுதான்'' என்றாள் மதி.

''எல்லோருக்குமே பெரும்பாலும் அப்படித்தானேம்மா? எப்ப கல்யாணம் ஆச்சு உங்களுக்கு?''

''பதினெட்டுல, தலைவர் பிறந்தநாள் சலுகை கொடுத்தப்ப. ரொம்பக் கஷ்டப்பட்டு அனுமதி கிடைச்சுது.''


''பிள்ளைங்க படிக்கிறாங்களா?''

''பிள்ளைங்க இல்லை''

''ஓ, மன்னிக்கணும்.''

''ஒருத்தன் இருந்தான், யுத்தத்தில் போயிட்டான்'' என்ற மதி. சுவரில் இருந்த புகைப்படத்தைப் பார்த்தாள்.

''அடடா! பேர் என்ன?''



''அழகு.''

''அழகாத்தான் இருக்கான். எத்தனை வயசில?''

''பதினைஞ்சு. அழைச்சிட்டுப் போயிட்டாங்க.''

''இன்னொன்னு கேக்கலியா?''

''மனுப்போட்டிருக்கோம், அனுமதி கிடைக்கிறதுக்குள்ள வயசாயிடும் போல இருக்கு. நீ சொல்லப்பா! மதி, டீ கொண்டு வா, என் பால்ய சினேகிதனுக்கு.''

அவள் போன திசையைப் பார்த்து, ''பாவம், கண்ணில தண்ணி தளும்புது.''

''என்ன செய்ய? ஒளிச்சு வெச்சுப் பார்த்தோம். கண்டுபிடிச்சுட்டாங்க. உன் கதை என்ன சொல்லுப்பா? ரொம்பப் பெரிய ஆளு! ஞாப கம் வெச்சுக்கிட்டு என்னை வந்து பார்த்த திலேயே பரிபூரண சந்தோஷம்.''

''என் கதை என்ன?'' என்று இழுத்தான்.

''எத்தனை குழந்தைகள் ? மனைவியை அழைச்சிட்டு வரலியா?''

''கல்யாணம் பண்ணிக்கலை. வாழ்நாள் பூரா ஆராய்ச்சிதான்.''

''தொலைக்காட்சில பார்க்கறதுக்கும் நேரல பார்க்கறதுக்கும் வித்தியாசம்தான் இருக்கு. போனமாசம்தான் 'அரசொலியில்' உன்னைப் பத்தி பெரிய கட்டுரை வந்திருந்ததே. நாட்டுக்கே பெருமை தரக்கூடிய விதமா என்ன என்னவோ கண்டுபிடிச்சிருக்கேன்னு.''

''ப்ச்...''

''எனக்கு ஒண்ணும் புரியாது. விடுமுறையில வந்திருக்கியா?''

''இல்லை''

''எங்கே தங்கியிருக்கே?''

''இங்கதான் ஒரு ராத்திரி தங்கறதா உத்தேசம். உனக்கு ஒன்றும் சிரமம் இல்லியே?''

''சேச்சே! நீ இத்தனை ஆயிரம் வீடுகளுக்கு நடுவில என் வீட்டு நம்பரைத் தேடிக்கிட்டு வந்ததே எனக்குப் பெருமை. அண்டை அசல்ல சொன்னா நம்பமாட்டாங்க!''

''சொல்லவேண்டாம், ஷண்முகம், இங்கிருந்து வேலி எத்தனை தூரம் உள்ளது?''

''ஒரு கிலோமீட்டர்ல இருக்குது. ஏன்?''

''கேட்டேன். நீ என்ன தொழில் செய்றே?''

''தொழிற்சாலை எண்பத்தெட்டிலே டர்னர்.''

''சம்பளம் தராங்களா?''

''சம்பளமா?'' என்றேன் ஆச்சரியத்துடன்.

''ஓ நீங்களெல்லாம் அந்த வர்க்கமா! இந்தப் பெட்டியை ஜாக்கிரதையா அலமாரில வை'' என்றான்.

''இது என்னது?''

''அப்புறம் சொல்றேன். டீ ரொம்ப நல்லா இருக்கும்மா. நீங்க போட்டதா?''

''இல்லைங்க, வண்டியில கொண்டு கொடுத்தாங்க. பால்தான் கிடையாதே.''

''ஓ, ஆமாம் நான்...''

''உங்களுக்கெல்லாம் எப்படி?''

''என்னம்மா?''

''உங்க வீடெல்லாம் இப்படித்தான் இருக்குமா?''

''என் வீடும் இந்த மாதிரித்தாம்மா. தலைவர் வீடு கூட இதேதான். ஏதோ தேவைக்கு ஏற்பட்ட சில சலுகைங்க உண்டு. புத்தகம் வெச்சுக்கலாம். அலுவலக வேலையாப் போனா கார் உண்டு.''

''சம்பளம்?''

''உண்டு. அதை வெச்சுக்கிட்டு என்ன செய்யற? விலைக்கு வாங்கக்கூடிய பொருளே கொஞ்சம்தானே? ஷண்முகம். என்ன பார்க்கிறே?''

''பழைய நினைவுகளெல்லாம் மனசில மிதக்குது. எட்டாவதிலேயே உன்னைத் தனிப்படுத்திப் பயிற்சி எல்லாம் கொடுத்தாங்க. வாத்தியாரையே மடக்கிடுவியே! அப்பவே அரசொலியில் இவன் போட்டோ வந்திருச்சு மதி. ரொம்பக் கெட்டிக்காரன்!''

''உங்க முகம் தொலைக்காட்சியில வர்றப்பல்லாம் 'இவன் என் கூடப் படிச்சான், என்கூடப் படிச்சான்'னு சொல்லிக்கிட்டே இருப்பாரு. 'படிச்சிங்க! அவர் எங்க போயிட்டார், நீங்க எங்க இருக்கிங்க?'ன்னு கேப்பேன். எட்டாவதிலேயே பரீட்சை வெச்சு நிறுத்திட்டு ஆயுள்பூரா டர்னர்தான்.''

''அதனால என்னம்மா? அதுக்காக நீங்க வருத்தப்படக்கூடாது. என்னை மாதிரி ஆளுங்க உங்கமாதிரி சிக்கல் இல்லாத வாழ்க்கை மேல பொறாமைப்படறோம். ஏதோ தேசத்தக்கு உபயோகமா ஷண்முகம் செய்துகிட்டுத்தான் இருக்கான்''

''என்ன கடையறேன், அது எங்க போவுது எதுவுமே தெரியாது. எட்டுமணி நேரம் மெசினோட ஐக்கியம். அவ்வளவுதான். நீ புதுசா என்னல்லாம் கண்டுபிடிச்சப்பா மனோகர்?''

''அதெல்லாம் சொன்னாப் புரியாதுங்க உங்களுக்கு.''

''ஏங்க நீ தலைவரோட பேசியிருக்கிங்களா?''

''ஆமாம்மா.''

''தொட்டுப் பாத்திருக்கிங்களா? அவரு எப்படி இருப்பாரு?''

''அவரும் நம்மைப் போல மனுசர்தாம்மா'' என்று சிரித்தான்.

'இல்லை மிசின்கறாங்க. அவர் மார்ல நேர வெச்சு ஒத்தன் சுட்டானாம். ஒண்ணுமே ஆகலியாம்.''

''அதெல்லாம் புரளிங்க. நம்பாதிங்க.''

''வீட்டில என்ன பேசிக்கிட்டாலும் அவருக்குத் தெரியுமாம். தொலைக்காட்சிப் பெட்டி வழியா அரசாங்கத்துக்குச் செய்தி போகவும் செய்யுதாமே?''

''அதெல்லாம் சில வீடுகள்ளதாம்மா வெச்சிருப்பாங்க.''

''உங்க வீட்ல அப்படிங்களா?''

''ஆமாம்.''

''நாமள்ளாம் பூச்சிம்மா'' என்றேன்.

''என்னவோ! கொஞ்சம் மாத்தினாங்கன்னா பரவாயில்லைங்க. அதே டீ, அதே துணி, அதே பேச்சு, கிழமைகளுக்கு எல்லாம் மூஞ்சியே இல்லைங்க. ஒருமுறை தற்கொலை பண்ணிக்கப் பார்த்தம், முடியலைங்க. அதுக்காகச் சிறைக்குப் போயி மனப்பாடம் எல்லாம் தந்து மறுபடியும் பரீட்சை வைச்சிட்டுத்தான் அனுப்பிச்சாங்க. அழகுபோன பிறபாடு ஒரு மாதிரி இருந்திச்சு.''

மனோகர் அடிக்கடி சன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டிரந்தான்.

''தொலைக்காட்சி எப்பப் போடுவாங்க?''

''ஆச்சு, இன்னும் பத்து நிமிஷத்தில உசிரு வந்துரும்.''

''இன்னிக்கு இது வேணாமே, அணைச்சுரலாம்.''

''அணைக்கிறதெல்லாம் எங்க கையிலயா இருக்குது? அது பாட்டுக்கு ஓடிக்கிட்டே இருக்கும். காட்டிக்கிட்டே இருக்கும். நாங்க ரெண்டு பேரும் பார்க்கிறதே இல்லை. இந்தவாரம் ரேசன்ல என்னகொடுக்கிறாங்கன்னு திங்கக்கிழமை அறிவிப்பாங்க பாரு. அப்ப பாப்பம். நியூஸ் பாப்பம், தலைவர் பேசினா நிச்சயம் பாப்பம். பாக்கலைன்னா அரசாங்கத்துக்குச் தெரிஞ்சு போயிருமாமே!''

''இந்த மாதிரி கட்டுக்கதைங்கள்ளாம் நிறையவே உலாத்துது போல இருக்கு. அரசாங்கத்தில இருந்து பரிசோதனைக்கு எப்ப வருவாங்க?''

''திங்கள்தான் வருவாங்க. வந்து போயிட்டாங்க.''

மதி அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். ''ஏங்க நான் உங்களை ஒண்ணு கேக்கலாமா?''

''கேளுங்க.''

''நீங்க ஏதாவது சிக்கல்ல மாட்டிக்கிட்டிருக்கிங்களா?''

''ஏய் மதி!''

''நீங்க நடந்துக்கற விதத்தைப் பார்த்தா ஒரு மாதிரி பயந்தா மாதிரி இருக்கே. அதனால...''

மனோகர் பதில் சொல்லலாமா வேண்டாமா என்று தயங்கினாற் போலத்தான் இருந்தது. ''அப்புறம் சொல்றேன், நீங்க பயப்பட ஒண்ணும் இல்லை.''

''இந்த அட்டைப் பெட்டிக்குள்ள என்ன?''

''மன்னிச்சுக்க மனோகர். என் பெண் சாதி ஒரு மாதிரி பட பட'ன்னு கேட்டுருவா!''

''அதனால என்ன? அவங்களை எனக்குப் பிடிச்சிருக்கு. மதி, கொஞ்சம் வேகவைச்சது எதாவது இருந்தா கொண்டுட்டு வாங்க.''

''வேக வைச்சதா? எதுக்குங்க?''

''பொட்டிக்குள்ள என்னன்னு கேட்டிங்களே. அதுக்கு ஆகாரம் போடணும்.''

''பாம்பா?'' என்றாள் பயந்து.

''இல்லைம்மா பயப்படாதிங்க'' என்று சிரித்தான்.

''வேகவைச்சதுன்னா இவருக்கு பாக்டரில கொடுத்த கூழ்தான் இருக்குது.''

''அது போதும். கொண்டு வாங்க.''

மதி உள்ளே செல்ல, மனோகர் அந்தப் பெட்டியின் மூடியைத் திறந்து அதனுள் நோக்கி, ''சாப்பிடறியா கண்ணு? உன்னை மறந்தே போயிட்டேன் பார்த்தியா! அகோர பசி இவ னுக்கு. ச்! ச்! ச்!'' என்று கொஞ்சினான்.

எனக்குத் தயக்கமாக இருந்தது. ''பொட்டிக்குள்ள என்ன ஏதாவது எலி வளர்க்கிறாயா?''

''இல்லை என் குழந்தை.''

நான் ஆச்சரியததுடன் அவன் அருகில் சென்றபோது, மனோகர் பெட்டியைத் திறந்து காட்டினான். அட்டைப் பெட்டிக்குள் கொஞ்சம் கொஞ்சம் பஞ்சுமெத்தை போல இருந்தது. அதில் சுமார் ஒரு முஷ்டிப் பரிமாணத்திற்கு ஒரு வஸ்து இருந்தது.

வஸ்து என்றுதான் சொல்லவேண்டும். பழுப்புப் பச்சை நிறத்தில் இருந்தது. தனக்குத் தானே சுருட்டிக்கொண்டாற்போலவும் உருண்டை போலவும் நீண்ட சதுரம் போலவும் என்ன வடிவு என்று சொல்லமுடியவில்லை...

''இது என்ன மனோகர்? எங்கேயாவது தோட்டத்தில் புடிச்சியா? இந்த மாதிரி பார்த்ததே இல்லையே?''

''இல்லை. செய்தேன்.''

''என்னது...!''

''ஆமாம் ஷண்முகம். இத பாரு. இதான் உலகத்திலேயே முதல் தடவையா செயற்கை முறையில் சிருஷ்டிக்கப்பட்ட முதல் உயிர்! நெளியுது பாரு. ஷண்முகம் அந்த வார்த் தையை உபயோகிக்கத் தயக்கமா இருக்குது. ஆனா அதான் சரியான வார்த்தை. நான் இந்த உயிரை சிருஷ்டிச்சேன்.''

மதி உள்ளே வரும்போது தொலைக்காட்சி சலனிக்கத் துவங்கிவிட்டது. மதிதான் ஆர்வத் துடன், ''பாத்திங்களா பாத்திங்களா...இவரு போட்டோ காட்டறாங்க!''

(மிகுதி அடுத்த வாரம் தொடரும்)

# ஒரு பாடலுக்கு ஆடமாட்டேன்



மீனாட்சி

ஒரு பாடலுக்கு ஆடமாட்டேன் என்றார் மீனாட்சி. 'கருப்பசாமி குத்தகைக்காரர்' படத்தில் அறிமுகம் ஆனவர் இவர். நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

"நான் கொல்கத்தாவில் பிறந்தேன். மும்பையில் வளர்ந்தேன். மாடலிங் துறையில் இருந்த நான் 'கருப்பசாமி குத்தகைக்காரர்' மூலம் நடிகையானேன். முதல்படமே கிராமத்து பெண் வேடம். இப்போது 'பெருமாள்', 'ராஜாதிராஜா', பள்ளிகொண்டபுரம்', "4 TTT" ஆகிய படங்களில் நவநாகரீக பெண், கிராமத்துப் பெண் என மாறுபட்ட வேடங்கள் ஏற்றிருக்கிறேன். கவர்ச்சி வேடங்களிலும் நடிப்பை வெளிப்படுத்தக்கூடிய கனமான வேடங்களிலும் நடிப்பேன். ஆனால், நீச்சல் உடை அணியமாட்டேன். ஒரு பாடலுக்கு ஆடும் எண்ணம் இல்லை. ரஜினி, கமல் படமென்றால் நடிப்பேன். சினிமாவில் நான் 10 வருடம் இருப்பேன். ரசிகர்கள் ஏற்றுக்கொண்டால் தொடர்ந்து நடிப்பேன். 30வயதுக்குப் பிறகுதான் திருமணம். எனக்கு காதலன் கிடையாது. இனிமேல்தான் காதலில் விழவேண்டும்" - இவ்வாறு மீனாட்சி கூறினார்.



மதுமிதா - தெலுங்கு நடிகர் சிவபாலாஜி திருமண நிச்சயதார்த்தம் ஹைதராபாத்தில் நடந்தது. சிவபாலாஜிக்கு மோதிரம் அணிவிக்கிறார் மதுமிதா.

# 'தாம்தூம்' சரோஜாவுக்கு ப

விரலளவு வன்முறை தெரிந்தாலும் வெட்டிவிடத் தயங்குவதில்லை தணிக்கைக் குழு.

ஆபாசமா? அளவுக்கு மீறிய அடிதடியா? எடு கத்தரிக்கோலை என்றுதான் சமீபகாலமாக நடந்துகொள்கிறது தணிக்கைக்குழு. இதன் மிகவும் கூரான கத்திரிக்கோலுக்கு சமீபத்தில் பலியான படம் 'சத்யம்' ஆபாசம் என்று பாடல் காட்சியிலும், வன்முறை என்று அக்ஷன் காட்சியிலும் கத்திரித் தழும்பு வாங்கியது இந்தப் படம்.

ரித்திக்கின் 'நாயகன்' படத்துக்கு 'ஏ' சான்றிதழ் வழங்கிருக்கும் சென்சார், 'சரோஜா' மற்றும் 'தாம்தூம்' படங்களுக்கு அனைவரும் பார்க்கத்தகுந்த 'யு' சான்றிதழ் அளித்து ஆச்சரியப்படுத்தியுள்ளது.

சரோஜாவில் அக்ஷன் காட்சிகள் அதிகம். 'தாம்தூமில்' வரும் ரஷ்ய போர்ஷனில் போர்க்களம் அளவுக்கு சண்டைக்காட்சிகள் உண்டு.

இருந்தும் நல்ல படங்கள் என்பதால் சென்சாரிலிருந்து சிராய்ப்புகள் இன்றி தப்பித்திருக்கின்றன இவ்விரு படங்களும்.

ஒகஸ்ட் 29, 30 ஆம் திகதிகளில் 'தாம்தூம்', 'சரோஜா' ஆகிய படங்கள் வெளியாகின.



'கந்தசாமி' படத்தில் விக்ரம், ஷ்ரேயா.



'மகனே என் மருமகனே' படத்தில் விவேக்.

# விக்ரம் 98841 11111

பத்திரிகையாளர்களுக்கே போன் நம்பர் தராமல் பதுக்கிவைக்கும் நடிகர்கள் மத்தியில், விக்ரமின் அதிரடி முடிவு, எட்டாவது அதிசயம்!

அப்படி என்ன செய்துவிட்டார் விக்ரம்?

பிரைவஸி என்ற பெயரில் நடிகர்கள் ராணுவ ரகசியமாக பாதுகாக்கும் செல்போன் நம்பரை பகிரங்கமாக அறிவித்துள்ளார். அதுமட்டுமா, ரசிகர்கள் எப்போது வேண்டுமானாலும் தனது எண்ணுக்கு எஸ்.எம்.எஸ். அனுப்பலாம் என அனுமதியும் கொடுத்துள்ளார்.

ரசிகர்களுடன் நெருக்கமான தொடர்பு வைத்துக் கொள்வதற்கென்றே சிலமாதங்களுக்கு முன்பு இணையதளம் ஒன்றைத் தொடங்கினார் விக்ரம். இருபத்துநான்கு மணிநேரமும் ரசிகர்கள் இதனைப் பயன்படுத்திக்கொள்ளலாம். அவ்வப்போது விக்ரமுடன் பேசவும் செய்யலாம். போட்டி, பரிசு எல்லாம் உண்டு.

இதன் அடுத்த கட்டமான சீயான் தனது ரசிகர்களுக்கு அளித்திருக்கும் சிறப்பு ஏற்பாடுதான் இந்த எஸ்.எம்.எஸ். நல்ல கேள்விகளுடன் வரும் செய்திகளுக்கு விக்ரமே பதிலளிப்பாராம். படப்பிடிப்பில் பிஸியாக இருப்பதால் தொலைபேசி அழைப்புகளுக்கு பதில்கூறமுடியாது. அதனால்தான் எஸ்.எம்.எஸ். செய்திகளுக்கு மட்டுமே அனுமதி என விளக்கமும் அளித்துள்ளார் விக்ரம்.



'பந்தயக்கோழி' படத்தில் சுரேன், பூஜா.



'அவள் பெயர் தமிழரசி' படத்தில்...



# ஒக்ரோபர் 24 இல் ஏகன்

அஜித்தின் 'ஏகன்' வெளியாகும் திகதியை இறுதிசெய்துள்ளது ஐங்கரன் இன்ரநெஷனல் நிறுவனம்.

ராஜுசுந்தரம் இயக்கத்தில் அஜித் நடிக்கும் ஏகனை ஐங்கரன் நிறுவனம் தயாரிக்கிறது. ஹிந்தியில் வெளியான 'மெய்ன் ஹூன்னா' படத்தின் ரீ மேக்கே 'ஏகன்'.

ஹிந்தியில் ஷாருக்கான் நடித்த ராணுவவீரன் வேடத்தில் அஜித் நடிக்கிறார். கல்லூரி பேராசிரியராக சுஷ்மிதா சென் வேடத்தில் நயன்தாரா. அஜித்தின் தம்பியாக நவ்தீப், அவரது அம்மாவாக சுஹாசினி, கல்லூரி முதல்வராக ஜெயராம் நடித்துள்ளனர்.

தாடியுடன் அதிரடி காட்சிகளிலும் தாடி இல்லாமல் கலகலப்பான காதல் மற்றும் சென்டிமெண்ட் காட்சிகளிலும் நடித்துள்ளார் அஜித். 'பில்லா'வின் வெற்றிக்குப் பிறகு வெளிவரும் படம் என்பதால் 'ஏகனு'க்கு எல்லா தரப்பிலும் எதிர்பார்ப்பு.

பெரும்பாலான காட்சிகள் எடுக்கப்பட்ட நிலையில் படத்தை தீபாவளிக்கு மூன்றுநாள் முன்பு அதாவது ஒக்ரோபர் 24 ஆம் திகதி வெளியிட முடிவுசெய்துள்ளது தயாரிப்பாளர் தரப்பு.

அடுத்தமாதம் இறுதியில் இசையை வெளியிடவும் திட்டமிட்டுள்ளனர்.

'ரசிக்கும் சீமானே' படத்தில் ஸ்ரீகாந்த், நவ்யா நாயர்





'பூவா தலையா' படத்தில் கிருஷ்ணகுமார், உதயா.



'அந்தோணி யார்' படத்தில் சியாம்.

'குரு என் ஆளு' படத்தில் மாதவன், மம்தா மோகன்தாஸ்.



# முதலிடத்தில் சத்யம்

கமலின் 'தசாவதாரம், ரஜனியின் 'குசேலன்' இரண்டையும் சென்னை பாக்ஸ் ஆபிஸில் முந்தியது விஷாலின் 'சத்யம்'.

எட்டுவாரங்கள் தொடர்ந்து சென்னை பாக்ஸ் ஆபிஸில் முதலிடத்தில் இருந்தது கமலின் 'தசாவதாரம்'. 'சுப்ரமணியபுரம்' வெளியான பிறகும் 'தசாவதாரம்' முதலிடத்தைத் தக்க வைத்துக்கொண்டது.

'தசாவதாரத்தை' இரண்டாமிடத்துக்கு கீழிறக்கியது ரஜனியின் 'குசேலன்'. பொதுவாக ரஜினி படம் தொடர்ந்து பத்துவாரங்களாவது முதலிடத்தில் இருக்கும். இந்தமுறை மூன்றாவது வாரத்திலேயே முதலிடம் மிஸ்ஸிங். சென்றவாரம் வெளியான 'சத்யம்' படம், 'தசாவதாரம்', 'குசேலன்' இரண்டையும் பின்னுக்குத் தள்ளி முதலிடத்தை பிடித்துள்ளது.

தசாவதாரத்தின் சென்றவார இறுதி வசூல் 6.63 லட்சம். இரண்டாம் இடம்பிடித்த குசேலனின் வசூல் 34 லட்சங்கள். முதலிடத்தில் இருக்கும் சத்யத்தின் நான்குநாள் வசூல் 39.17 லட்சங்கள்.

சென்னை பாக்ஸ் ஆபிஸில் முதலிடத்தைப் பிடித்ததைப் போலவே லண்டனிலும் குசேலனைப் பின்னுக்குத் தள்ளியுள்ளது சத்யம். முதல் நான்கு நாள்களில் சத்யத்தின் வசூல் 11.09 லட்சங்கள்.

'துரை' படத்தில் அர்ஜுன்.



# போஸ்ட் புரொடக்சனில் துரை


அர்ஜுன் - கீரத் நடிக்கும் துரையின் படப்பிடிப்பு முடிந்து பூசணிக்காய் உடைக்கப்பட்டு விட்டது.

டப்பிங், ரீ-ரெக்கார்டிங் என்று போஸ்ட் புரொடக்ஷன் வேலைகளில் பிஸியாக இருக்கிறார் படத்தின் இயக்குநர் ஏ.வெங்கடேஷ். 'மருதமலை' படத்துக்குப் பிறகு வரும் அர்ஜுன் படம் என்பதால் படத்தை வாங்க விநியோகஸ்தர்கள் ஆர்வம்காட்டுவது சர்ப்பரைஸ்.

ரசிகர்களைக் கவர 'துரை'யில் மூன்று இரைகள் வைத்துள்ளார் ஏ.வெங்கடேஷ். கீரத், கஜாலா மற்றும் சுமா.

அரசியல் கட்சி தொண்டனாக வரும் அர்ஜுனை காதலிக்கும் பத்திரிகை நிருபராக வருகிறார் கீரத். பேனா பிடிக்கும் கதாபாத்திரத்தில் இவர் பொழிந்திருப்பது சாதாரண மழை இல்லை. கவர்ச்சி மழை. இவருக்கு சரிநிகர் போட்டியாக கஜாலா.

இவர்கள் போதாது என்று கடைசிநிமிடத்தில் களமிறக்கியது சுமாவை...சுமா மும்பை டான்சர். தமிழ்ப்படமொன்றில் ஆடுவது இதுவே முதல்முறை. அர்ஜுனுடன் ஒருகெட்ட ஆட்டம்போட்டு கணக்கை தொடங்கியிருக்கிறார். கொமடி ஏரியாவை அர்ஜுனுடன் சேர்ந்து கலகலப்பாக்குவது விவேக். 'துரை' அர்ஜுனின் இன்னொரு வெற்றிப்படமாக அமைய அதிகசாத்தியமுள்ளது.



# A9 இல் காதல் கிளி

சிறுகதை

மிருசுவில் - ச. முகுந்தன்

சில்லெனக் காற்று வீசிக்கொண்டிருந்தது. ஜன்னலைத் தாண்டிப் பெரிய பலாமரம். அதையும் தாண்டி அதன் கிளைகள். இலைகள் ஊடே நீலவானம் வெளிப்பாகக் காட்சி அளித்துக்கொண்டிருந்தது. சேவல் கூவும் சத்தம். எங்கிருந்தோ குயில் கூவும் சத்தம். அத்துடன் தென்மராட்சி என்றால் சொல்லவா வேண்டும்! பீரங்கிகளின் தாள மேளத்துடன் பொழுது விடிந்து கொண்டிருந்தது.

நிலவன் நீண்ட நேரமாகத் தூக்கமின்றிப் புரண்டு கொண்டிருந்தான். அம்மாவின் பாய் சுருட்டும் சத்தம். அதைத்தொடர்ந்து தீக்குச்சியின் சீறல். தொடர்ந்து கேற்றிலின் அழுகை. தேநீர் ஆற்றும் சத்தம். அரிப்பனின் கடகடப்பு. தேங்காய் துருவும் சத்தம். இப்படித் தொடர்ந்துசமையல் அறையில் கேட்டுக்கொண்டிருந்தன.

அம்மா பாவம்! ......எனக்காக எவ்வளவு கஷ்டப்படுகிறா..... கடையில் சாப்பிடிறன் என்றாலும் கடைச்சாப்பாடு கூடாது என்று சமைக்கிறா. கம்பஸில் என்ன படிப்பு நடக்குது ...... ஒரு நாளில் இரண்டு அல்லது மூன்று பாடம் விரிவுரை நடக்கும். சிலவேளை ஒன்று. இந்த மணித்தியாலப் படிப்புக்காக பஸ்ஸில் பெடியலோட பம்பல் அடிக்கிறதில, பஸ்ஸுக்கு காத்திருக்கிறதில என ஒரு நாளையே செலவழிக்கிறமே என மனம் புடுங்கிக்கொண்டிருந்த நிலவனுக்கு,

''என்ன தம்பி இன்றைக்கு கம்பஸ் போகல்லயோ...! ரீ...போட்டாச்சு சாந்தனும் வேளைக்கு வரச்சொன்ன தாகச் சொன்னனியே'' என்று கூற, படுக்கையில் இருந்து எழும்பி பல்கலைக்கழகம் போவதற்கு அவசர அவரமாக வெளிக்கிட்டான்.

''உன்னை வேளைக்கெல்லோ வரச்சொன்னனான். 7.10 காதல் கிளியைப் பிடிக்கனும். அத்தோட வேளைக்குப் போய் சீற் பிடித்தால் செம்மணி செக் பொயின்ட் வரையாவது இருக்கலாம்'' என்றான், சற்று பொய்க், கோபத்துடன் சாந்தன்.

''சரி சரி இன்னும் நேரம் இருக்குதுதானே அதுக்கென்ன'' என்று கூறிச் சமாளித்தான் நிலவன் . இருவரும் சைக்கிளில் கொடிகாமம் நோக்கிப் பயணமானார்கள்.

காதல் கிளி என்பது 769 இலக்கத்தை உடைய கொடிகாமத்தில் இருந்து 7.10இற்கு யாழ்ப்பாணம் நோக்கிப் பயணமாகும் பஸ். இதில் சாதாரணமாக 130இற்கும் 150இற்கும் இடைப்பட்டவர்கள் பயணம் செய்வார்கள். சாதாரணமாக பஸ்ஸுக்கு 45 இருக்கைகளே இருக்கும். இதில் 100க்கும் அதிகம் பெண்களே! குறைந்தளவே ஆண்கள் பயணம் செய்வார்கள். இவர்கள் அனைவரும் இளம்வயதினர். யாழ் பல்கலைக்கழக மாணவர்கள், தொழில் நுட்பக்கல்லூரி மாணவர்கள், யாழ்ப்பாணத்தில் வேலை செய்பவர்கள் இப்படிப் பலர். இந்த நெருக்கம், தொடர் சந்திப்புக்கள் சிலரை காதலர்கள் ஆக்கியது. இதனால் மாணவர்கள் இட்ட பெயரே 'காதல் கிளி'. சிலவேளைகளில் இந்த பஸ்ஸை தென்மராட்சி சரக்குக் கப்பல் என்பார்கள். சிலவேளைகளில் கல்லூரி வாசல், ஏ9 அன்ரனோவ் என்றும் சொல்வார்கள்.

இந்த பஸ் கொடிகாமத்தில் இருந்து ஆரம்பிக்கும். புத்தூர்சந்தி, மீசாலை, சாவகச்சேரி என மாணவர்கள் ஏறுவார்கள். தொடர்ந்து நுணாவில் பொலிஸ் ஸ்ரேசனடி, வைரவர் கோவிலடி என நீண்டு கைதடிச்சந்தி, நாவற்குழிச்சந்தி என நீளும். இதில் கைதடிச் சந்தியிலேயே அதிகமானவர்கள் ஏறுவார்கள். இதனால், கைதடிக் கிராமமே ஏறுகிறது என்பார்கள். தொடர்ந்து செம்மணி சோதனைச் சாவடி. இதில் பலரும் இறக்கப்படுவார்கள்.

ஆசனம் பிடிப்பதற்காக மாணவர்கள் தள்ளுப்பட்டு ஏறுவார்கள். தொடர்ந்து செம்மணியூடே இலுப்பையடி. கல்வியங்காடு எனப் போய், திருநெல்வேலிச் சந்தியை பஸ் அடையும். இதில் உயர்தொழில் நுட்பக்கல்லூரி மாணவர்கள் இறங்குவார்கள். தொடர்ந்து பரமேஸ்வராச்சந்தியில் பல்கலைக்கழக மாணவர்கள் இறங்குவார்கள். குறைந்தளவு மக்களுடன் காதல் கிளி யாழ்ப்பாணத்தைச் சென்றடையும்.

''டேய் மச்சான் நீ சொன்னியே இந்த பஸ்ஸில் கம்பஸுக்கு வாற யாரையோ விரும்புவதாக! யாரடா அது?'' என்றான் சாந்தன்.

''நான் வெற்றிபெற்றால் சொல்லுவன் மற்றப்படி சொல்லமாட்டேன்'' என்றான் நிலவன்.

''சரி நீ விரும்பிற ஆளைப் பற்றியாவது சொல்லன்.

''குழந்தைகளின் முகத்தைப் போன்ற முகம். கொஞ்சம் அகன்ற நெற்றி. கடும் சிவப்பு நிற நீண்ட பொட்டு. வெள்ளை படலத்தில் கருவிழி. வரிசைப்பற்கள். சிரித்தமுகம். சைகையுடன் கூடிய கதை. சாதுவான் செவ்விதழுக்கு அளவான லிப்ரிக். நீண்ட முடி. சம்போ இட்டு முழுகிய ஒற்றைப்பின்னல். அதற்கு ஓர் தொப்பி. முகம் பொலிஷ் பண்ணிய மாதிரி ஒரு பருக்கூட இல்லை. வெள்ளைமேனி. கைகால்களில் ஆங்காங்கே சிறு சிறு கரும்புள்ளிகள். கொஞ்சம் உடம்பு. ஆடை பாதி அங்கம் பாதியாக உடுப்புப் போட மாட்டா. ஒரு தடவை கறுப்பு டெனிம்போட்டது பார்த்திருக்கிறேன். மற்றும்படி பஞ்சாபி அல்லது, பாவாடை சட்டை. பஸ்ஸில் ஏறும் போது முன்னால் ஏறி முன்னுக்கு நிப்பாள். அவளின் முகத்தைப் பார்த்தால் அந்த 'மலர்ந்தும் மலராத பாதிமலர் போல ,......, 'என்ற பாடலில் குழந்தையின் முகத்தை எப்படி வர்ணிக்கிறார்களோ அதுதான் ஞாபகம் வரும்'' என்று கூறிமுடித்து விட்டுச் சிரித்தான் நிலவன்.

''சர்மியைத்தானே சொல்கிறாய்''

''ஓம்டா.....! எப்படிக் கண்டுபிடித்தாய்?''

''நீ வர்ணிக்கும்போதே எனக்கு விளங்கீற்றுது. இது சரிவரும் என்று எனக்குத் தெரியல்ல...''

''ஏன் அப்படிச் சொல்லிறாய்?''

''அவள் பெஸ்டியரில் வரேக்க ராக்கிங் என்ற போர்வையில் லவ் பண்ணிறியா? லவ்பண்ணுவியா? என்று எத்தனை பேர் கேட்டிருக்கிறாங்கள். அத்தனை பேருக்கும் மசியாதவள் உனக்கா ஓம் சொல்லப் போறாள்?''

''ஏன் நாங்களும் வந்தபோது செக்கண்டியர், தேட்டியர், பைனலியர் என எல்லாப் பெண்களும் வந்து இதே பல்லவிதானே.....! நாங்கள் அவங்களை லவ் பண்ணினமா.....?''

''எப்பவாவது அவள் உன்னைப் பார்த்திருக்கிறாளா?''

''ஓமடா பல சந்தர்ப்பங்களில் பார்த்திருக்கிறாள். ஆனால் சிரிக்கவில்ல''

''நீ அவளைப் பார்க்காதபோது அவள் உன்னைப் பார்த்திருக்கிறாளா?''

''அது எனக்குத் தெரியல்ல....!''

''சரி எப்பவாவது அவளோட கதைத்திருக்கிறியா.....?''

''ஒரு முறை செம்மணியில் இறங்கும் போது அவள் குறுக்கே நின்றாள். மறுபக்கம் நான் செல்ல அவளும் சென்றாள். அப்போது சொறி.... சொறி..... எனச் சொன்னாள். இன்னொரு தடவை, ஸ்பெசல் செய்யிற மாணவர்களை பதிவு செய்யுமாறு அறிவுப்புப் பலகையில் போட்டிருந்தது. அவள் பரமேஸ்வராச்சந்தியில் இறங்கவில்லை, யாழ்ப்பாணம் போய்க்கொண்டிருந்தாள். அவள் இருக்கையில் இருந்தாள். அவளிடம் கொப்பியைக் கொடுத்திருந்தேன். அப்போது இவ்விடயத்தை அவளிடம் கூறினேன். அவளும் என்னிடம் அதைப்பற்றிக் கதைத்தாள். மற்றம்படி வேறு ஒன்றும் கதைக்கவில்லை''

''பாக்கிறது, சிரிக்கிறது, கதைக்கிறது இதுகளை வைத்துக்கொண்டு காதலிக்கிறாள் என்று கற்பனை வளர்க்காதே! சும்மா பார்ப்பாளவை பின்னால் போய்ப் பார் அலைய வைப்பாளவை''

''உனக்கென்ன அனுபவமோ....? நான் அப்படி அலையிற அளவுக்கு என்னமோ குறைவா? கேட்டுப்பாரன்.''

''சரி நான் கேட்கிறன். ஆனால் நீ தண்ணி அடிக்கிறது சிகரெட் பத்திறது. இதுகள விடவேணும் ஓ.கே.யா? அத்தோட அவளும் உன்னைக் காதலித்தால் கடைசி வரை நீ கைவிடக்கூடாது. பெண்பாவம் சும்மாவிடாது என்று சொல்லு வார்கள். கம்பஸில் எத்தனை பேர் கதைக்கிறாங்கள்! அதில், சேர்ந்தவர்கள் என்றால் விரல்விட்டு எண்ணக் கூடியதாகத்தான் இருக்கு. அப்படி நீ இருக்கக்கூடாது.''

''கடைசிவரையும் அவளை நான் கைவிட மாட்டேன் இது சத்தியம்'' என்றான் நிலவன்.

''எனக்கு லெக்சஸ் இருக்கு மீண்டும் சந்திப்போம்'' எனக்கூறி நிலவனும் சாந்தனும் பிரிந்தனர்.

நாட்கள் மிகவும் வேகமாக ஓடிக்கொண்டிருந்தன. பஸ் பயணமும் தொடர்ந்து கொண்டே இருந்தது. பல்கலைக்கழக கல்வியும் நிலவனுக்கு இறுதிவருடத்தில் இறுதிக்காலத்தை நெருங்கிக்கொண்டிருந்தது. சாந்தன் சர்மியுடன் கதைத்த போதும் நிலவனின் காதல்விடயம் பற்றி அவனால் கதைக்கமுடியவில்லை என்ற பதிலே சாந்தனிடம் இருந்து கிடைத்தது. நிலவன் எப்படியும் சர்மியிடம் கேட்க வேண்டும் என்ற முடிவை எடுத்துக் கொண்டான். பஸ் காற்றைக் கிழித்துக் கொண்டு ஓடிக் கொண்டிருந்தது. அதன் இரைச்சலும் சத்தமாக இருந்தது. அத்தோடு ''தாழம்புச்சேல மானே உன்மேல் ......'' என்ற பாடலும் அதிகமாக இருந்தது. நிலவன் சற்றுத்திரும்பினான். ஆகா! அவன் அருகே மிகவும் நெருக்கமாக சர்மி நின்று கொண்டிருந்தாள். எப்படித் தொடங்குவது? என்னத்தை முதலில் கதைக்கிறது? இவ்வளவு சனத்துக்குள்ள அவன் மனம் துடித்துக் கொண்டிருந்தது. திடீரென பஸ் பிரேக் அடிக்கிறது. நிலவனின் முழங்கை சர்மியின் நெற்றியைப் பதம் பார்க்கிறது.

''அம்மா ....'' என்றாள் சர்மி.

''சொறி .... சொறி'' என்றான் நிலவன். சற்றுநேரத்தில் சுதாகரித்துக்கொண்ட சர்மி நிலவனுடன் கதைக்கத் தொடங்கினாள். நீண்டகால நண்பர்கள் போல திடீரென நிலவன் ''நான் உங்களிட்ட ஒன்று கேட்பன் தப்பாய் நினைக்கக் கூடாது.''

மௌனமான சர்மி சற்றுநேரத்தின் பின்பு தலையை நிமிர்த்தி நிலவனைப் பார்த்தாள்.

''அது வந்து .... நான் உங்களை மூன்று வருஷமாய் விரும்புறன் உங்களுக்கு என்னைப் பிடிக்குமா?''

மௌனமே பதிலாகத் தந்தவள் பரமேஸ்வராச்சந்தி வரவே இறங்கி தனது தோழிகளுடன் போய்க்கொண்டிருந்தாள்.

* * *

பல்கலைக்கழக நூலகம் அமைதியாக இயங்கிக் கொண்டிருந்தது. சர்மி தனிமையில் படித்துக் கொண்டிருந்தாள். நிலவன் சர்மியின் அருகே போய் அமர்ந்தான்.

''சர்மி நான் கேட்டது....?'' புத்தகத்தையே படித்தவாறு நிலவனின் வார்த்தைகளை கேட்டுக்கொண்டிருந்தாள்.

''இப்படியே இருந்தால் மௌனம் சம்மதம் என்று கொள்ளவா?''

சிவபூசைக்குள் கரடி புகுந்த மாதிரி நூலக ஊழியர் ''இங்கவாறது எல்லோரும் படிக்கிறதுக்கு, கதைக்கிறதுக்கு இல்ல. எங்கட பொறுப்பாளர் பார்த்தால் எங்களைத்தான் ஏசுவார். கதைக்கனும் என்றால் வெளியபோய் கதைச்சிட்டு வாங்க.'' நூலகத்தில் இருந்த எல்லோரும் பார்த்தனர். நிலவனுக்கு சீ என்றிருந்தது.


* * *

காதல்கிளி யாழ்ப்பாணத்தில் இருந்து கொடிகாமம் நோக்கி ஓடிக்கொண்டிருந்தது. சர்மி நிலவனைப் பார்த்துக்கொண்டு நின்றாள். தோல்வி அவமானம் எல்லாம் சேர்ந்து அவனுக்கு எரிச்சலை உண்டாக்கியது. அருகே நின்ற சாந்தனிடம் சொன்னான், ''அன்பு, பாசம், காதல் எல்லாம் எங்களிட்ட இருக்கா என்று சோதிக்கிறாளா... சொல்லிவை எல்லாம் ரொம்ப இருக்கென்று. சும்மா பார்க்கிறது..... நான் நெருங்கிப் போனால் ஓடுறது. என்ன கறுமமடா'' இவ்வார்த்தைகள் அவளுக்கு சற்றுக்கேட்டு விட்டன.

''நிலவன் நீங்க கோவிக்காதேங்க. என் மனசு பூரா நீங்கதான் இருக்கிறீங்க. பல்கலைக்கழகம் வரும்போதே வீட்டிலே கம்பஸில் யாருடனும் கதைக்கிறதில்ல என்று சொல்லித்தான் அனுப்பினாங்க. அத்தோடு ஜேர்மனியில் என்ர அத்தை மகன இருக்கிறார். சின்னனில இருந்தே வீட்டில் அவர்தான் எனக்கு

(22.ஆம். பக்கம் பார்க்க)

# நவாலியூரானின் சமூக நாடகங்கள்




செல்லத்துரை என்னும் இயற்பெயரைக் கொண்ட நவாலியூரான் சிறந்த நடிகன் மட்டுமல்ல, நாடகப் பிரதிகளை எழுதி நெறியாற்றுகை செய்வதிலும் வல்லவர். இவர் எழுதி நெறியாற்றுகை செய்த எழுபத்தைந்து நாடகங்களுக்குள், சமூக நாடகங்கள் ஏறத்தாழ 55 ஆகும். சமூகத்தில் நடைபெறும் அவலங்களையும், இழிநிலைகளையும் தனது நாடகங்கள் மூலம் வெளிப்படுத்திக் காட்டுவதில் வல்லவராக இருந்தார். எமது சமூகப்புலத்தில் தரிசித்த அவலங்களை வெறுமனே சுட்டிக் காட்டியதோடு மட்டும் இவரது பணி நின்றுவிடுவதில்லை. அதற்கான தீர்வினையும் கூற இவர் தவறுவதுமில்லை. எளிமையான கதை வசனங்களை பாத்திரங்கள் வாயிலாகக் கூறவைத்து அவை சமூகத்திடம் சென்றடைய வேண்டும் என்பதில் கவனம் செலுத்துவார். நாடகங்களுக்கிடையே பாடல்களைப் புகுத்திப் பார்வையாளர்களின் அபிமானத்தைப் பெறுவதோடு, தத்துவார்த்தரீதியான விழுமியங்களை வெளிப்படுத்தும் வகையில் பாடல்களை தானே இயற்றி அவற்றுக்கான இசையமைப்பையும் மேற்கொள்வார்.

இவரது நாடகங்கள் 1960களில் இருந்து பல இடங்களிலும் ஆற்றுகை செய்யப்பட்டன. 'சதியின் பரிசு' என்னும் நாடகம் உயிலங்குளம் வெளியரங்கில் மேடையேறியது. 'கெட்டகுமாரன்' கண்டி திரித்துவக் கல்லூரி மண்டபத்திலும் 'நினைவுச் சின்னம்' மாத்தளை பீ.எம்.எஸ். பாடசாலை மண்டபத்திலும், கண்டி புஸ்பாதான மண்டபத்திலும், 1974இல் யாழ்ப்பாணம் சுண்டிக்குளி புனித யோவான் கல்லூரி மண்டபத்திலும் மேடையேற்றப்பட்டது. 'நீங்க ஓர் இஸ்லாமியனா' கண்டி திரித்துவக் கல்லூரி மண்டபத்தில் ஆற்றுகை செய்யப்பட்டது. இதே மண்டபத்தில் 'எதிர்பாரா முடிவு' என்னும் நாடகம் கண்டி ஐக்கிய வளர்ச்சிக் கழகத்தின் நிதி சேகரிப்புக்காக மேடையேற்றப்பட்டது.

இவருடைய 'நல்லதீர்ப்பு' என்னும் நாடகம் பல இடங்களிலும் ஆற்றுகை செய்யப்பட்டது. 1960 களில் யாழ்ப்பாண மண்ணில் சாதியத்தின் கொடூரம் தாண்டவமாடி மனிதத்தன்மையை




அடியோடு சிதைத்திருந்தது. சாதிக் கொடுமையை எதிர்த்துப் பல போராட்டங்கள் வெடித்தன. விதவைகள் புறக்கணிக்கப்படும் அபத்தக் கலாசாரமும் அன்று இருந்தது. விதவைகள் தங்கள் வீட்டிலோ உறவுகளின் வீட்டிலோ நடக்கும் நல்ல காரியங்களை முன்னின்று நடத்திவைப்பதில்லை. அன்றைய சமுதாய அமைப்பு அப்படி இருந்தது. 'நல்ல தீர்ப்பு' நாடகத்தில் இக் கருவை புதியகோணத்தில் அணுகி அன்றைய சமுதாயத்தில் பெண் விடுதலைக்காகத் தொழிற்பட்டார். 'அடிமை விலங்கு' கண்டி நல்லாயன் மகளிர் கல்லூரி மண்டபத்தில் மேடை யேற்றப்பட்டது. இந்தச் சமூக நாடகம் ஒரு சீர்திருத்த நாடகமாகும். சாதி வெறி கொண்ட ஒருவரின் கொட்டத்தை அவரது சொந்த மகன் அடக்குவதாக இந்நாடகம் அமைகிறது.

'நான் நடந்த பாதையிலே', 'புதிய தொரு உலகம்' ஆகிய நாடகங்கள் கண்டி திருத்துவக் கல்லூரி மண்டபத்தில் மேடை யேற்றப்பட்டுள்ளன. 'எதற்கும் ஒரு தீர்ப்பு', 'கேளுங்கள் கொடுக்கப்படும்', 'நீ திருந்து உலகம் திருந்தும்', 'யார் ஆசை நிறை வேறும்', 'சாபக்கேடு', 'ஜீவவெளிச்சம்', 'பழிக்குப்பழி', 'அன்பைக் கடைப் பிடிச்சா', 'பூமியிலே சமாதானம்', 'ஜீவ னுள்ள நாட்களெல்லாம்', 'விசுவாசம் ஓர் அற்புத மருந்து' போன்ற அர்த்தமுள்ள நாடகங்கள் நவாலியூரானால் மேடை யேற்றப்பட்டுள்ளன.

'நாளை மலரும்', 'சுதந்திரப் போர்', 'பட்டமரம்', 'அன்பு இல்லம்' என்பனவும் இவரது நாடகங்கள். 'அன்பு இல்லம்' 1997 இல் யாழ்ப்பாணம் ஆத்திசூடிக் கலைமகள் சனசமூக முன்றலிலும், அரியாலை சனசமூக நிலைய மண்டபத்திலும், யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்திலும் அரங்கேறியது. 1999 ஆம் ஆண்டுக்கான கலாபூஷணம் விருது பெற்றவர்களைக் கௌரவிப்பதற்காக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுதலின் பேரில் இந்த நாடகம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் மேடை யேற்றப்பட்டது.

இலங்கையின் பல பாகங்களில் இவரது நாடகங்கள் பல மேடையேற்றப்பட்டன. எழுதி மேடையேற்றப்படாத நாடகங்களும் இருப்பதாக இன்று அறியக்கிடக்கின்றது. *

# பகைமை காட்டாதீர்கள்!

உங்களைத் திட்டுபவர் அல்லது துன் புறுத்துபவர் மீது உங்கள் இதயத்தில் எந்த விதமான பகைமை உணர்ச்சியையும் கொள் ளாதீர்கள். வெளிப்படையாகக் கோபத் தைக் காட்டுவதை விட இது மிகவும் மோசமானது. இது மானஸீகப் புற்றுநோய். பகைமையை வளர்க்காதீர்கள். மறவுங்கள், மன்னியுங்கள். இது ஏதோ ஒரு வெறும் லட்சியவாத பழமொழி அல்ல. உங்கள் அமைதியைப் பாதுகாக்க ஒரே வழி இதுதான். உள்ளே பகைமையை வளர்ப்பது என்பது ஒருவனுக்கு மிகுந்த கெடுதியைச் செய்யும்.

உங்களுக்குத் தூக்கம் போய்விடும். உங் கள் இரத்தத்தை நீங்கள் நஞ்சாக்குகின்றீர் கள். இரத்தக் கொதிப்பும், படபடப்பும் உங் களிடம் அதிகரிக்கும். பழிச்சொல்லோ, அவ தூறோ உங்களுக்குக் கடந்த காலத்தில் எப்பொழுதோ செய்யப்பட்டது. அது முடிந்து போன விஷயம். சிந்திய பால் அது. அதையே மீண்டும் மீண்டும் நினைத்து அந்த அவதூறு அல்லது பழிச்சொல்லின் துன்பத்தை ஏன் நீங்கள் நீடிக்கிறீர்கள்? பகைமை மற்றும் வெறுப்பு எனும் ஆறு கின்ற காயத்தை நீங்கள் குத்திக் குத்தி மீண் டும் ஏன் புண்ணாக்குகிறீர்கள்? இது மிகவும் முட்டாள்தனம் இல்லையா? இந்தச் சிறிய விஷயங் களில் நேரத்தையும், வாழ்க்கையை யும் வீணடிப்பது என்பது தகாத ஒன்று. ஏனெனில், மனிதனின் வாழ்வு மிகவும் சுருங்கியது. இன்றிருப்பார் நாளை இல்லை. இந்தத் தீயவழக்கத்தை விடுங்கள். உங் களுக்கு விருப்பமான வேலை ஒன்றில் பூரணமாக மனதை லயிக்கச் செய்வதே நீங் கள் செய்ய வேண்டிய சிறந்த காரியமாகும். உங்களுக்குப் பிடித்தமான வேலை அல்லது பொழுதுபோக்கில் நீங்கள் சுறுசுறுப்பாக ஈடுபடுவீர்களானால் உங்களுக்கு மிகுந்த மன அமைதி கிட்டும். ஆகவே பகைமை காட்டாதீர்கள். *

# இதை என்னென்டு சொல்வது?

அண்மையில் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் மணிமேகலை பிரசுரத்தாரின் நூல் வெளியீட்டுக்கு அழைப்புக் கிடைத்துச் சென்றிருந்தேன்.

நான் இருந்த கதிரைக்குப் பக்கத்தில் ஒரு நடுத்தர வயதானவர் இருந்தார். நான் ஓர் எழுத்தாளன் என்பது அவருக்குத் தெரிந்திருந்தது. அவர் கதைத்துக் கொண்டே இருந்தார். எனக்கு அலுப்புத் தட்டிவிட்டது. சந்தர்ப்பத்தைப் பார்த்து எழுந்து சென்று இன்னுமொரு கதிரையில் அமர்ந்தேன்.

எனக்குப் பக்கத்தில் ஒரு வயதானவர் இருந்தார். நான் அவரைப் பார்த்து, ''ஐயா எங்கிருந்து வந்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டேன்.

''நான் தம்பி யாழ்ப்பாணம். இஞ்ச வெள்ளவத்தையிலை ஒரு மகளோடை பிளாற்றிலை இருக்கிறன். என்ரை இளையவள் கனடாவில் இருக்கிறாள். அவளின்ரை வீட்டுக்குப் பக்கத்திலை இருக்கிறவரின்ரை புத்தகம் வெளியிடுகினமாம். பெயர் கூப்பிடும்போது காசு கொடுத்து புத்தகத்தை வாங்கட்டாம் எண்டு ரெலிபோனிலை மகள் சொன்னவள். அதுதான் வந்திருக்கிறன். நான் இஞ்சை கொடுக்கிற காசை அவர் கனடாவில் கொண்டுபோய் குடுப்பாரே?'' என்று கேட்டார். நான் மௌனமானேன்.

எனது பெயர் அழைக்கப்பட்டு மேடைக்குச் சென்று ஒரு புத்தகத்தைப் பெற்று வந்து எனது நண்பர் ஒருவருக்குப் பக்கத்தில் இருந்தேன். அவருடைய புத்தகமும் அன்று வெளியிடப்பட்டது. அவர் என்னிடம் பின்வருமாறு சொன்னார். ''விசர் வேலை மச்சான். என்னுடைய புத்தகத்தை வாங்குவதற்கு மூண்டு பேரை ஒழுங்கு செய்து தரும்படி கேட்கிறார். நான் யாரிட்டைப் போய்க் கேட்கிறது. நானே மூண்டு என்வலப்பில் காசுவைச்சு ஒட்டிக் கொடுத்து மூண்டுபேரை பலவந்தப்படுத்தி புத்தகம் வாங்க அனுப்பிவைச்சன். இது எனக்குத் தேவைதானோ? காசு கொடுத்துப் புத்தகம் அச்சடித்ததுமல்லாமல் அவரை யார் வெளியீட்டு விழா வைக்கச் சொன்னது. புத்தகத்தை அடிச்சு எங்களிட்டைத் தந்தால் நாங்களே வெளியீட்டு விழாவை வைச்சு புத்தகங்களை விற்கலாமல்லே.'' என்று அங்கலாய்த்துக் கொண்டார். அவர் ஓர் எழுத்தாளர்தான். ஆனால், கொதியன். அவருடன் மேற்கொண்டு ஒன்றும் கதைக்கவில்லை. என்னை விட்டால் காணும் என்று எழுந்து வந்துவிட்டேன். *

# முற்போக்கு இலக்கியம்

முற்போக்கு இலக்கியம் என்பது அச்சரம் மாறாத ஓர் அரிச்சுவடியல்ல, என்றென்றைக் கும் ஒன்றாகவே இருக்கும் ஒரு மலட்டுத் தத்துவமுமல்ல. அதற்கு மாறாக முற்போக்கு இலக்கியத்தின் பணியும் வரையறுப்பும் காலத் துக்குக் காலம் மாறுகின்றது. எனவேதான் பிடித்துவைத்த பிள்ளையாரை வர்ணிப்பது போல முற்போக்கு இலக்கியத்திற்கு வரை யறுப்புச் சொல்லமுடியாது. என்றாலும் முற் போக்கு இலக்கியத்திற்குத் தத்துவ தரிசனம் உண்டு. தனித்ததொரு தத்துவ வடிவம் உண்டு. ''சரித்துவத்தை உருவாக்குவதற்கு பெருவாரி மக்களைத் தட்டி எழுப்புகிறது. விழிப்புற்று முன்னேறிப்பாயத் தூண்டுகிறது. அந்த மக்களின் ஆழத்தில் அமுங்கிக்கிடக்கும் பிரமாண்டமான சக்தியைக் கட்டறுத்து விடு கிறது. உழைக்கும் மக்களின் நல்வாழ்வுக்காக, மனித வர்க்கத்தின் சுபீட்சத்துக்காக இந்த உலகை மாற்றும் மாபெரும் சக்தியாக விளங்குகிறது'' என்று முற்போக்கு இலக்கி யத்தை மார்க்ஸிம் கார்க்கி வரையறை செய் கிறார். 'இலக்கியம் மக்களுக்காகவே' என் றும் மக்களின் ஆசாபாசங்களையும், துன்ப துயரங்களை, இன்னல்களையும், ஆசை அபிலா ஷைகளையும், மனிதனின் ஒவ்வொரு பிரச்சினை யையும், அவனது வாழ்வின் ஒவ்வோர் அம்சத் தையும் பிரதிபலிக்க வேண்டும் என்றும் அது கருதுகிறது. இலக்கியம் மற்றெல்லாவற் றையும் போல மக்களுக்கு பயன்பட வேண்டு மென்றால் பெருவாரியான மக்களுக்கு, உழைக்கும் உத்தமர்களுக்குப் பயன்பட வேண்டும். இலக்கியம் உட்பட மனிதனின் சாதனைகள் அனைத்தும் பெருவாரி மனிதர் களுக்காகப் பயன்பட வேண்டுமேயல்லாது சுரண்டும், சூறையிடும் ஒரு கூட்டத்துக்காகப் பயன்படலாகாது. எனவேதான் இலக்கியம் மக்கள் இலக்கியமாக இருக்க வேண்டும் என்று முற்போக்கு இலக்கியவாதிகள் கூறுகிறார்கள்.

இலக்கியம் சமுதாயத்துடனும் வாழ்வுடனும் மக்களின் பிரச்சினைகளுடனும் பிரிக்க முடியாதவாறு இணைந்து, பிணைந்து பின்னிக் கிடக்கிறது. மக்களுக்கு வாழ்வில் நம்பிக்கையை ஊட்டி அவர்களு டைய எதிர்காலத்துக்குக் கோடிகாட்டி, நல் வாழ்வுக்காகவும் பிரகாசமான எதிர்காலத் திற்காகவும் மக்கள் நடத்தும் போராட்டத்தில் அவர்களின் பேராயுதமாகவும் வழிகாட்டியாக வும் அது திகழவேண்டும். சுபீட்சத்திற்கும் சுரண்டலுக்குமிடையில் நடைபெறும் போராட்டத்தில் இலக்கியமும் இலக்கிய கர்த்தாவும் முன்னையவற்றின் பக்கத்தில் நின்றேயாக வேண்டும்.

முற்போக்கு எழுத்தாளன் மக்கள் குலத்துடன், அவர்களின் நல்வாழ்விற்கான பேரணியில் முன்னணிப் படைவீரனாக, அணிவகுத்து நிற்கிறான். அதர்மத்தையும் அக்கிரமத்தையும் எதிர்த்துப் போர்க் குரல் எழுப்புகிறான். வாழ்வின் இன்ப கீதத்தை, இதய நாதத்தை மீட்டுகிறான். இலக்கியத்தை அவன் ஒரு சாதனமாக, மிக மிக உன்னதமான சாதனமாகக் கொள்கிறான். இலக்கியம் மக்கள் சமுதாயத்தின் வாழ்வோடு கலந்து, வாழ்வின் பிரதிபிம்பமாகத் திகழ வேண்டும். காலத்தின் தேவையையும் வரலாற்றின் கடமையையும் அது பிரதிபலிப்பதுடன் நிறைவேற்றவும் வேண்டும். இதுவரை மனிதவர்க்கம் கண்ட எல்லா நல்ல இலக்கியங்களும் இந்தப் பணியைத்தான் நிறைவேற்றியுள்ளன. ஈழத்து நவீன தமிழ் இலக்கியத்தின் பரிணாம வளர்ச்சிக்கும் பரிணாம விசாலிப்புக்கும் பெரும் பங்களிப்பு நல்கிய முற்போக்கு இலக்கியம் மக்கள் இலக்கியமாக முகிழ்ந்து நிற்கின்றது.

உலகினையும் மனிதவாழ்வினையும் எமது எழுத்தாளர் செவ்விய முறையில் விளங்கிக் கொள்வதற்கும், எமது மக்களின் வாழ்வு யதார்த்த பூர்வமாக இலக்கியத்தில் சித்திரிக்கப்படுவதற்கும், இலங்கைத் தமிழ் இலக்கியம் என்று சிறப்பாக அடையாளங் காணப்படத்தக்க ஓர் இலக்கிய வளர்ச்சிக்கும் பாரிய பங்களிப்பை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் வழங்கியுள்ளது. இலக்கியத்தையும் ஏனைய கலை வடிவங்களையும் பண்டிதர்களினதும் ஆதிக்க வர்க்கத்தினதும் பிடியிலிருந்து விடுவித்து மக்கள் உரிமையாக்குவதும், கலை இலக்கிய வடிவங்களை, வாழ்க்கையை யதார்த்த பூர்வமாகச் சித்திரிப்பவையாக்கி, மக்களின் எதிர்கால வாழ்வுக்கு ஒளியூட்டத்தக்க வகையில் முற்போக்குப் பாதையில் இட்டுச் செல்வதும் முற்போக்கு இயக்கத்தின் குறிக்கோளாகும். ஏகாதிபத்திய வாதத்தையும், பாசிசத்தையும், ஒடுங்கிய வரப்புவாத இனவாதப் போக்குகளையும் எதிர்த்த அவ்வியக்கத்தினர் தீண்டாமை, பெண்ணடிமை, சுரண்டல் போன்றவற்றை புறங்காண முனைந்தனர். ஆகவே, முற்போக்கு இலக்கியம் அன்றும் இன்றும் என்றும் மக்களுக்காகவே இயங்கிக் கொண்டிருக்கும். *


# நோய்களுக்கு அழைப்பு விடுக்கும் உணவுப் பழக்கம்!

ஒரு மனிதனின் உணவுப் பழக்கம்தான் அவனது உடல் நலத்தை தீர்மானிக்கிறது.

கொஞ்சம் ஆழ்ந்து யோசித்துப் பார்த்தால், இந்த ஒற்றை வரியிலேயே சகலமும் அடங்கி விடுவது புரியும்.

நினைத்த நேரத்தில் நினைத்த பொருட்களையெல்லாம் வாங்கி, வரைமுறை இல்லாமல் தின்று தீர்ப்பதல்ல, 'அனுபவித்தல்' என்பதன் பொருள்.

எந்த உணவையும் சாப்பிடுவதற்கென ஒரு நேரம் இருக்கிறது.



காலையில் 6 மணிக்குள் விழித்துக் கொள்ள வேண்டும். ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் இதுதான் சரியான நேரம். நூற்றுக்கு 99 சதவிகித நகரத்து மக்கள் அந்த நேரத்தில் காபி அல்லது டீ குடிப்பதை பழக்கமாக வைத்திருப்பார்கள். முதலில் இது மாற வேண்டும். வெறும் பால் குடிக்கலாம், அல்லது எலுமிச்சை கலந்த தேநீர் பருகலாம். இல்லை என்றால், இரண்டு மூன்று டம்ளர் தண்ணீரைக் குடிக்கலாம். இவை உணவுப் பாதையை இதமாக்கும். வயிற்றிலிருந்து கழிவுப் பொருட்கள் சிக்கல் இல்லாமல் வெளியேற உதவும். வேறு எந்த பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாது. காலை உணவு என்பது எப்போதுமே லேசாக இருக்க வேண்டும்.

பிற்பகல் உணவென்பது 12.30 லிருந்து 1.00 மணிக்குள் முடித்துவிட வேண்டும். தினசரி ஏதேனும் ஒரு கீரை, இரண்டு வகை காய்கறிகள், கொஞ்சம் பருப்பு, ரசம், மோர் என மதிய உணவு இருக்க வேண்டும். சாப்பாட்டுக்குப் பிறகு ஏதேனும் ஒரு பழம் சாப்பிடுவது நல்லது. இரவு உணவு மிக சாதாரணமாக இருந்தால் போதும். தயிர், கீரை அசைவ வகைகளை இரவில் தவிர்ப்பது நல்லது. முடிந்தவரை இட்லி, தோசை, பூரி, பிட்டு, இடியப்பம் என ஏதேனும் ஒரு வகையை மட்டுமே இரவு உணவாக கொள்வது நல்லது.

உணவுப் பழக்க முறையில் ஏற்படுகிற ஒழுங்கின்மை தான் அனைத்து வித வயிற்றுக் கோளாறுகளுக்கும் அடிப்படையாக அமைந்துவிடுகிறது.

நீரிழிவு வியாதி, இரத்த அழுத்தம், வயிற்றுப் புண், வாயுத் தொல்லைகள்... இவை அனைத்துக்கும் மூலகாரணம் உணவுப் பழக்கமே. இந்த வியாதிகளை வைத்துக் கொண்டு மருத்துவர்களிடம் செல்பவர்களுக்கு முதலில் பரிந்துரைக்கப்படுவது என்ன? குறிப்பிட்ட உணவுகளை மட்டுமே சாப்பிட வேண்டும் என்பதுதான்.

இதை முன்கூட்டியே திட்டமிட்டு செய்து வந்திருந்தால், மருந்துவமனையில் ஆயிரக்கணக்கில் செலவழிக்கும் நிர்ப்பந்தம் வராது அல்லவா!

இன்னொரு பக்கம் வேகமாக பரவி வரும் துரித உணவுக் கலாசாரம் கூட மனிதனின் ஆயுளோடு விளையாடிக் கொண்டிருக்கிறது. துரித உணவில் ருசியும் மணமும் மட்டுமே பிரதானம். ஆரோக்கியத்துக்கு அங்கு இடமே கிடையாது. ஒரு முறை பயன்படுத்திய எண்ணெயை மறு உபயோகம் செய்வது உணவில் விஷத்தை கலப்பதற்கு சமம் என்கிறார்கள் மருத்துவ நிபுணர்கள். ஆனால், துரித உணவகங்களில் சிக்கன் பொரித்த எண்ணெயைத்தான் [illegible] மாதக்கணக்கில் வைத்திருந்து மறு உபயோகம் செய்கிறார்கள்.

ப்ரைட்ரைஸ் போன்ற உணவுகளில் நிறைய மசாலாக்கள் சேர்க்கப்படுகின்றன. இவை முழுமையாக பொரிக்கப்படுவது கூட இல்லை. வாசனையோடு இருக்க வேண்டும் என்பதற்காக ஒன்றும் பாதியுமாக வேகவைத்து தரப்படுகின்றன. நீங்கள் இவற்றை மட்டும் சாப்பிடுவதில்லை. கூடவே சுகாதாரமற்ற இடத்தில் நிறைய நோய்க் கிருமிகளோடு உள்ள காய்கறிகள் மற்றும் உணவுப் பொருட்களையும் சேர்த்தே சாப்பிடுகிறீர்கள். ஆகவே நோயற்ற வாழ்க்கைக்கு ஆரோக்கியமான உணவுப் பழக்கமே மூல மருந்து. ✱



---

# எடை குறைந்த குழந்தையா?



அழகான ஆரோக்கியமான குழந்தை பிறக்க வேண்டும் என்பதுதான் அனைவரதும் - குறிப்பாக தாய்மார்களின் விருப்பம், ஆசை எல்லாமே. ஆனால், சில நேரங்களில் எடைக் குறைவு மிக்க குழந்தைகள் பிறப்பது உண்டு. இதனால் தாய்மார்களின் நிலை மிகவும் பரிதாபத்துக்குரியதாகத் தோன்றும். ஆனால், அவர்கள் போதிய கவனம் செலுத்தினார்களேயாயின் இத்தகைய குழந்தைகளைப் பெரிதும் காப்பாற்ற இயலும் என்பதே உண்மை.

வெளிப்புறச் சூழலுக்கு ஏற்றவாறு இந்த குழந்தைகளைத் தயார் செய்ய தனிப்பட்ட கவனம் தேவை.

குழந்தைக்கு ஏறக்குறைய மூன்று கிலோ எடை கிடைக்கும் வரை அதனை [illegible] மருந்துவமனை பாதுகாப்பில் [illegible]த்திருக்க வேண்டும். மூச்சுக்குழல் - நுரையீரல் விரிவுத் தன்மைக் குறைபாட்டினால் இந்த குழந்தைகளுக்கு மூச்சுத் தடை ஏற்படக்கூடும். எனவே பிராணவாயு அளிப்பதற்குரிய வசதிக்காக மருந்துவ மனையில் இருத்தல் வேண்டும்.

குழந்தையின் உடல் வெப்ப அளவு திடீரென குறைந்து போனால் ஆபத்தே! எனவே அதனை நன்கு தூய பருத்தி துணிகளால் சுற்றிப் பாதுகாக்க வேண்டும்.

மேலை நாடுகளில் தாயின் மடியிலேயே குழந்தைகளை படிந்திருக்கச் செய்கிறார்கள். இதனால் உடல் சூடு படிப்படியாக குறையும் போது குழந்தை செயற்கைச் சூடு பெறும்.

குழந்தைக்கு முடிந்த வரை தாய்ப்பால் மட்டுமே கொடுக்க வேண்டும். இரண்டு மணி நேரத்துக்கு ஒரு முறை [illegible] பால் அருந்[illegible]றதா, அதற்கொப்ப சிறுநீர் கழிக்கின்றதா எனவும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஒருவர் அல்லது இருவர் மட்டுமே குழந்தையை கையாளுதல் அவசியம். அதனைச் சுற்றிலும் ஆரோக்கியமான சூழல் அமைந்திருக்க வேண்டியதும் அவசியமே!

எடைகுறைவுமிக்க குழந்தைகளுக்கு பார்வை மற்றும் கேட்கும் திறன் குறைபாடுகளும் ஏற்படுவது உண்டு. இதனை முன்னதாகவே தெரிந்து, சரிசெய்ய முயற்சித்தால் ஓரளவு பின் விளைவுகளைத் தடுக்க முடியும். ✱

பெண்

---

உருளைக் கிழங்கை உரிக்கும் போது தோலுடன் சேர்ந்து கிழங்கும் வருவது தவிர்க்க முடியாதது என்று எண்ணும் இல்லத் தரசிகளுக்கு ஒரு யோசனை :-



உருளைக் கிழங்கை வேக வைக்கும் போது சிறிது உப்பை அந்த நீரில் சேர்த்து விடுங்கள். உப்பு கலந்த நீரில் ஊறிய உருளைக் கிழங்கை சுலபமாக உரிக்க முடியும். ✱

---

# சமைப்போம் சுவைப்போம்

## நெய் அப்பம்



**தேவையான பொருட்கள்:**

கித்துள் பாணி - 1 கப்,
அரிசி மா - 1/2 கப்,
கோதுமை மா - 1/2 கப்,
ஏலக்காய் - 5,
தேங்காய் (துருவியது) - 1/2 கப்
உப்பு - 1/2 டீஸ்பூன்
எண்ணெய் - 1 லிட்டர்,

**செய்முறை:**

✱ கித்துள் பாணி முதல் உப்பு வரை உள்ள அனைத்துப் பொருள்களையும் சேர்த்துக் கலக்கவும்.
✱ சற்று தளர்வாக, தோசை மாவு பதத்துக்குக் கலக்கி 1 மணி நேரம் ஊறவைத்துக் கொள்ளவும்.
✱ பின்னர் தாச்சியில் எண்ணெயைச் சூடாக்கவும். எண்ணெய் நன்றாகக் காய்ந்ததும், கலக்கி வைத்துள்ள மாவை கரண்டியில் எடுத்து ஒவ்வொரு கரண்டியாக ஊற்றிப் பொரிக்கவும்.
✱ மிதமான தணலில் வைத்துப் பொன்னிறமாகப் பொரிக்கவும்.
✱ மறுபக்கமும் திருப்பி விட்டு வேகவிடவும். சுற்றிலும் பிரவுன் கலரில் பொரிந்ததும், சூடாக எடுத்துப் பரிமாறவும்.
✱ கித்துள் பாணி கிடைக்காதவர்கள், பனக்கட்டி, பனங்கற்கண்டு போன்றவற்றைப் பயன்படுத்தலாம். ✱

---

## மதுவும் உடல் நலமும்



ஆரம்பத்தில் ஒரு 'பெக்'கில் ஆரம்பிக்கும் மதுப்பழக்கம் 2, 3, 4... என்று அதிகரித்துக் கொண்டே போகும். ஆண்களை விட பெண்கள் தான் இப்பழக்கத்தால் உடல் நிலை அதிகம் பாதிக்கப்படுகின்றனர். ஒரு நாளைக்கு 30 மில்லி லீட்டருக்கும் அதிகமாக மது அருந்துவது, உடலின் சீரான இயக்கத்தைப் பாதிக்கும். குறிப்பாக, இரத்தத்தின் நீர்த்துப் போகும் தன்மையை மதுவானது குறைத்து விடுவதால், புற்றுநோய் மற்றும் இருதயம் சம்பந்தமான நோய்கள் வர வாய்ப்புகள் அதிகம்.

கொழுப்புச் சத்து முக்கிய காரணம்: ஆணும் பெண்ணும் சம அளவில் மது அருந்தினாலும், இருவரின் உடம்பிலும் அது வெவ்வேறு விளைவுகளையே ஏற்படுத்துகிறது. ஆண்களுடன் ஒப்பிடும்போது மதுவானது பெண்களின் உடம்பில் அதிக கொழுப்பை ஏற்படுத்துகிறது. இதன் காரணமாக, உடம்பில் பல நோய்கள் தோன்றக்கூடும்.

இன விருத்திசெய்யும் திறனில் பாதிப்பு: அதிகமாக மது அருந்துவது பெண்களின் தாய்மை அடையும் திறனை பாதிக்கும். டினா கோல்ட் ஜான்சன் எழுதிய 'இஸ் மாடரேட் ஆல்கஹால் கன்சம்ஷன் அஃபெக்ட் ஃபெர்டிலிட்டி?' என்ற புத்தகத்தில், டெனிஸ் என்பவரின் ஆராய்ச்சி முடிவுகளின்படி, சிறிதளவு மது அருந்தும் பழக்கம் உள்ள பெண்களுக்கும் குழந்தை பெறும் திறன் வெகுவாகப் பாதிக்கப்படுமாம்.

கர்ப்ப சிசுவுக்குப் பாதிப்பு

மதுவின் உபயோகம் கர்ப்பிணிகளை வெகுவாகப் பாதிக்கும். இது சிசுவின் மூளை வளர்ச்சியைப் பாதிப்பதால், குழந்தை மந்த புத்தியுடன் பிறக்கும். ஆனால், பிரசவத்துக்கு முன்பாகவே சிசுவைப் பரிசோதித்து ஆல்கஹால் சம்பந்தப்பட்ட 'மல்டிபிள் கோஜெனிடல் அப்நார்மலிட்டி'யை கண்டுபிடித்து விடலாம். ✱

# கவிதைப்புனல்

## நாடு என்ன நாடு...!

நாடு என்ன நாடு! - நம்மை
நாடுவதேன் நித்தம் கேடு!
***
குடித்துறையோ கதிகலங்கிக்
காப்பகத்தில் தஞ்சம்! - தினம்
படியளக்கும் நிவாரணமோ
பதுங்கிவரும் கொஞ்சம்!
தடித்தனங்கள் இருக்குமட்டும்
தீர்ந்திடுமோ பஞ்சம்? - துயர்
பிடித்தாமே எம்வாழ்வில்
தொடர்கதையாய் மிஞ்சும்!

பாதையிலே போகவொண்ணா
பலவிடமும் மறியல்! - குடி
போதையிலே சோதனையோ
பகலிரவாய் வெறியில்!
ஈதையெல்லாம் எடுத்துரைத்தால்
இங்கிதமா கிடைக்கும்? - வரும்
வாதையினால் எங்களது
வலமிடமே புடைக்கும்!

சந்தியிலே எமகாதன்
வெள்ளைவேனில் அலைகிறான்! - அவன்
சந்தடியில் மனம்பதைத்துச்
சீமானோ குலைகிறான்!
இந்தநிலை, இழிவுகொலை
இன்றுமுள்ள நாட்டிலே - நம்
சொந்தநலச் சுகவளங்கள்
சுவைதருமா வீட்டிலே?

கட்ட(ப்)படும் ஏழையர்க்குக்
காலமில்லை சாமி! - அவர்
பட்டதுயர் நீங்கிடவே
பரிந்திடுமா பூமி?
நட்டமுடன் கையேந்தி
நாடுபடும் பாடு, - இனி
ஒட்டகல விளைந்திடுமோ
வயல்வெளியும் காடும்?

நாடு என்ன நாடு! - நம்மை
நாடுவதேன் நித்தம் கேடு?
■ ஏறாவூர் அனலக்தர்.

## சரசங்களின் சகி நீ

சித்திரையில் சுட்டெரிக்கும் தீத்துளியால்
தேவியுந்தன் மேனியெழில் சிவந்தனவோ - நின்
அத்திப்பழச் செவ்விதழின் அழகைத்தின்று
அவ்வனலும் களிப்புற்றுச் சென்றதுவோ!

முத்தமிழும் தத்துவமும் நின்மொழியின்
முகவுரையாய் ஆனதடி என்னவென்பேன்
நித்திலமே நிலமிசையில் எந்தனாவி
நிலைக்கும்வரை வேறெதையும் தீண்டமாட்டேன்!

உச்சிவெயில் சீற்றத்தினால் பூக்களெல்லாம்
உயிர்தொலைத்துப் போவதனால் மனம் வெடிக்கும்!
மச்சினிநின் உரசலினால் பூக்கள்எல்லாம்
மறுபடியும் பிறப்பெய்து நகம்கடிக்கும்!

கொழுந்திட்டு எரிகின்ற வெயிலைக்கூட - நின்
கொல்லும்விழி குடிகலைத்துச் செல்கிறதே
உழுதுண்டு வாழ்வோர்தம் உவமையெல்லாம்
உனதன்ன நடையழகைச் சொல்கிறதே!

ரவிவர்மன் தான்வரைந்த ஓவியம்நீ! என்
தங்கமணிக் கவிதையும்நீ! காவியம்நீ!
கவினாற்றுப் படைகொண்ட புலிவனிவன் -இக்
காமத்துப் பல்லவிநீ பஞ்சணைநீ!

தீயெரியும் சூரியனின் தேசமெல்லாம்
தீயணையும் நின்மோகத் தீண்டலாலே!
தீயெறியும் சரசங்களின் லீலைதன்னால்
நிம்மதியாய் கவிஞனிவன் உயிர்பிரியும்!
■ கவிஞர் ஏ.ஆர்.நாகூர், திருமலை.

## கொழுந்து ஆய்வு

இருகரங்கள் இயந்திரமாய் மாறும்; மேயும்
இலங்குநிரை தேயிலைகள் மீது! கைகள்
ஒருகுருத்து இருதளிர்கள் கொழுந்துக் கொம்பை
ஓய்வின்றி ஆய்ந்தாய்ந்து கூடைக் குள்ளே
பெருகிவர இட்டுவரும்; பளுவுங் கூடும்!
பெட்புவொளிர் தளிர்க்கரங்கள் தளிரே கொய்யும்!
கருத்தூன்றி தொழில்புரிவோம்; கதைப்பு இல்லை
கங்காணி மாரிங்கு கண்கா ணிப்பு!

இடைசுற்றிக் கட்டியுள்ளேன் 'ரெட்டை'; குச்சி
கூர்கட்டை கால்களையுங் குத்தா வண்ணம்
படைபோல மலையிறங்கி ஒன்ப துக்கு
பாதையடி வரிசைப்படி வந்தே நிற்போம்!
எடைதட்டில் கொழுந்துகளைக் கொட்டி யேட்டை
ஏந்தவேண்டும்; எடைகுறித்துக் கணக்குப் பிள்ளை
உடையவர்க்குக் கொடுத்திடுவார்; குறைந்தால் இறாத்தல்
ஏசிடுவார்; படவேண்டும்; செடிகள் தப்பும்!

வரும்போது வாஞ்சையுடன் கொணர்ந்து வுள்ள
வாட்டத்துடன் பராமரிப்புக் கூடம் விட்ட
அருஞ்செல்வக் குழந்தைக்குப் பாலு மூட்ட
அன்னையவள் விரைந்திடுவாள்; அடுத்து அன்னாள்
கருத்தோடு தம்பணியைத் தொடரு தற்குக்
கடுகதியில் வந்திடுவாள்; மற்றா ரோடு
திருவளிக்கும் தளிர்கொய்வாள்; வேலை ஓடும்!
தடையில்லா படைபோல செல்வர் பெண்கள்!

மாதத்தில் கடைக்கூறு வறுமைக் கண்டம்
மனைகளுக்குள் பூசல்கள்; பாசம் மங்கும்
காதணிகள் கழுத்தணிகள் அடகு வைப்புக்
கடைகளுக்குள் புகுந்துவிடும்; ஈட்டும் காசில்
ஏதேனும் பண்டங்கள் வாங்கி வந்து
எப்படியோ நாட்களையும் ஓட்டு வார்கள்
வேதனைதான் இல்லார்க்கு; விரக்தி; காலை
வெற்றுக்குடல்; என்றாலும் ஓடும் வேலை!

(தொடரும்)

■ கவிஞர் எி.எஸ்.காந்தி

## சுடர்ப்பூக்கள்

பூஞ்சோலைக்குச் சென்றாய்
நோக்கினாய்
அங்குமிங்கும்
திரும்பித் திரும்பிப் பார்த்தாய்
உன்
பெயர் சொல்வது
எவையென்று
புரியாமல்!

ஆயிரம் முறை
உன்
பெயர் சொன்னால்
சில நிமிடங்கள்
உன்னோடு
உரையாடிய மகிழ்ச்சி
எனக்கு!

உன்னைக்கண்ட
மலர்கள்
பட்டாம்பூச்சிகளாகின
உன்னில்
அமர்ந்துகொள்வதற்காக!

அமோக விளைச்சல்
என்றார்
உன் அப்பா
நீ
வயற்காட்டுக்கு
வந்து சென்றது
தெரியாமல்!

நட்சத்திரங்களின்
கடைசி ஆசை
உன் கூந்தலில்
உட்கார்வதுதான்!

குளத்தில்
முகம்கழுவினாய் நீ
பூக்களாகின
மீன்கள்!

உனது
ஆயிரக்கணக்கான
கறுப்புக் கவிதைகளை
தமிழ்மொழி
கூந்தல் என்று
கூறுகிறது

வேரிலிருந்து
இலைகள் வரை
மணக்கத் தொடங்கின
உன்
கூந்தலில் புகுந்து
வெளியேறிய தென்றல்
மரம்
தழுவியபோது!

கறுப்புத்தான்
அழகு என்று
மல்லிகைகள் கூறின
உன் கூந்தல்
பார்த்த பின்!

உன்னை
நினைக்கும் போது
தொடர்ந்து எழுதுகிறது
மை தீர்ந்த
பேனா!

புரட்டினேன்
நீ
படித்துவைத்த புத்தகத்தை
உன் கண்களின்
நறுமணம்
அதில்!

உன் பாதங்களில்
நனைந்துகொள்வதற்காக
மழையாகிறது
மேகம்!

பல்வரிசைகாட்டி
நீ
சிரிக்காதே
பாவம்
தாரகைகள்!

(தொடரும்)

■ கவிஞர் ஏ.சி.றாஹில்.

## ஒழியும் வறுமை

குப்பை என்ற பெயரில் என்னைக்
கூடைக் குள்ளே போட்டார் -ஒரு
தொப்பை மனிதன் வந்து வண்டி
தன்னில் ஏற்றிச் சென்றான்!

ஏற்றிச் சென்ற மனிதன் என்னை
எங்கோ கொண்டு போட்டான் - பல
நூற்றுக் கணக்காய் என்னைப் போன்றோர்
நிறைந்து வழிந்து கிடந்தார்!

தெருவில் போகும் மனிதன் மூக்கைச்
சுழித்த படியே சென்றான் - என்
அருகில் வரவே அச்சம் கொண்டு
அருவ ருத்துக் கொண்டான்!

முந்தை யோர்கள் போலே நாங்கள்
மண்ணுக் குள்ளே புதைந்து - நம்
சிந்தை யழிந்து செத்து மடிந்து
போவோம் என்றே யிருந்தோம்!

ஆனால் புதுமை யொன்று எங்கள்
அரிய வாழ்வில் வந்து - புதுத்
தேனாய் நாங்கள் மீளும் வகையில்
புரட்சி நடந்தது அம்மா!

தரங்கள் பிரித்து பொறியிற் போட்டு
இயற்கை வழியில் சேர்த்து - நல்
உரங்கள் என்ற பெயரில் எம்மை
ஊருக் குள்ளே விட்டார்!

தோட்டக் காரர் விரும்பி என்னைத்
தேடி வந்து பெற்றார் - பெரும்
ஊட்டம் எனத்தன் பயிருக் கிட்டு
அதிக விளைச்சல் கண்டார்!

மூக்கைப் பிடித்த மனிதன் கனியை
முகர்ந்து பார்த்துக் கொண்டான்
ஜோக்கா யிருக்கு தென்றே சொல்லிக்
கனியை உண்டு மகிழ்ந்தான்!

இயற்கை அன்னைக் கொடையில் கழிவு
என்று எதுவும் இல்லை - இதை
உணர்ந்து முறையாய்ப் பயனைப் பெற்றால்
ஒழியும் வறுமைத் தொல்லை!

■ க.கோணேஸ்வரன், திருமலை.

## சத்தியம்

உதட்டினிலே நீ வழங்கும்
உயர்வான முத்தத்தில்
எதற்காக மது கலந்தாய்
எனைமயக்கி ஏது செய்வாய்?

மலராகி எந்த னுக்கு
மணமூட்டும் வாழ்க்கையிலே
குலத்துக்கோர் மணியாகிக்
குதூகலிக்க வைத்தவளே!

நிசியினிலே நித்தமுமுன்
நிர்வாணப் பொன்னுடலை
பசிக்குரிய விருந்தாகப்
பரிமாறிக் கொள்ளுகிறேன்!

எந்தனுள்ளம் வருகின்ற
ஏராளம் கற்பனைகள்
அத்தனையும் உன்தூய,
அரவணைப்பால் வந்ததடி!

மருத்துவத்தின் தேவையென்று
மலையகம்தான் செல்கையிலும்
ஒருபோர்வை தனியறையில்
உயிரேநீ, எந்தன் அயல்!

உன்னைநான் பிரிகின்ற
ஒருநிலைதான் வந்தாலோ,
என்னுயிரும் அக்கணமே,
ஏகிவிடும்; "சத்தியமே?"

■ கவிஞர் அ.கௌரிதாசன்,
ஆலங்கேணி கிழக்கு.

## அமைதித் தீர்வை வையப்பா

வேட்டைக்கு போகும் பெரியப்பா
வேண்டுகோள் ஒன்று கேளப்பா
நாட்டின் பொக்கிஷப் பெட்டியிலே
ஓட்டை விழுவதைப் பாரப்பா!

சின்னஞ் சிறிய நாடப்பா
சின்னா பின்னம் ஆகுதப்பா
துன்பச் சுழலில் சிக்கியிங்கு
தவிக்கும் மக்களைப் பாரப்பா!

காட்டிலும் நாட்டிலும் வேட்டையிட்டு
கண்ட முடிவு என்னப்பா?
வேட்டையில் மாளும் உயிரெல்லாம்
விலையில்லா மனிதச் சொத்தப்பா!

சுட்டுச் சுட்டு வேட்டையிட்டு
சட்டிக்கு வந்தது எதுவப்பா?
கொட்டிக் கிடக்குது காடெல்லாம்
வெற்றுத் தோட்டா குவியலப்பா!


போதும் கணக்கு தப்பப்பா
போரால் வருமோ முடிவப்பா?
ஆடும் ஆட்டம் வீணப்பா
ஆயிரம் கோடி செலவப்பா!

சிந்தனை ஒன்றை எழுத்தினிலே
சிந்திக்க தந்தாய் மக்களுக்காய்
சிந்தனை வழியை தவறிவிட்டு
சறுக்கிப் போவது ஏனப்பா?

தந்து நிற்பாய் முடிவொன்றை
சரித்திரம் போற்றும் வகையினிலே
சிந்தித்து ஆற்றும் செயல்திட்டம்
சிகரத்தில் ஏற்றும் உனையப்பா!

மனதில் ஒன்றை நினையப்பா
மனிதர்கள் நாங்கள் என்றப்பா
அனைத்தும் விட்டுத் தள்ளப்பா
அமைதித் தீர்வை வையப்பா!

புத்தரைப் போற்றும் நாட்டினிலே
யுத்தம் வேண்டாம் கேளப்பா
சுதந்திர சமத்துவ உரிமையுடன்
சோதரர் உறவாய் வாழ்ந்திடுவோம்!
■ சி.சிவநேசன், அல்வாயூர்.




# பல்டி அடித்தார் பரமார்த்த குரு

பரமார்த்த குருவின் நொண்டிக் குதிரைக்குப் புல்லும், கொள்ளும் கொடுத்ததால் அதற்குச் சற்று தெம்பு வந்துவிட்டது. இப்போது அது சண்டித்தனம் செய்வதில்லை. சவாரியின்போது இடையிடையே ஓடவும் செய்கிறது.

ஒரு சமயம் வெளியூர் ஒன்றிற்கு குரு செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அது மழை காலம். கண்மாய்களும், ஏரிகளும் நிரம்பி வழிந்திருந்தன. ஆறுகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்தது. வழக்கம்போல் குதிரையின் மேல் குருவை ஏற்றிவிட்டு சீடர்கள் ஐவரும் குதிரைக்குப் பின்னால், தொங்கு தொங்கென்று ஓடிக்கொண்டிருந்தார்கள்.

பயணம் இப்போது ஒரு தோப்பிற்குள். மரக்கிளையொன்று இலேசாகக் குருவின் தலையில் தட்ட அவர் அணிந்திருந்த தலைப்பாகை கீழே விழுந்துவிட்டது. சீடர்கள் அதைப் பார்த்தும் எடுக்காமல் வந்து விட்டார்கள்.

சிறிதுநேரம் சென்றது. களைப்படைந்த குரு ஒரு மரத்தின் நிழலில் இளைப்பாறக் குதிரையை விட்டு இறங்கினார்.

''எங்கே என் தலைப்பாகை?''

''அது அங்கேயே அந்த மரத்துக்குப் பக்கத்திலேயே விழுந்துவிட்டது.''

''தலைப்பாகை விழுந்ததைப் பார்த்தீர்களா?

''பார்த்தோம், பார்த்தோம்.''

''பின் ஏன் அதை எடுக்கவில்லை.?''

''நீங்கள் சொல்லவில்லையே.''

''சொன்னால்தான் எடுக்க வேண்டுமா, இந்தச் சிறுவிஷயம் கூடத் தெரியாதா?''

''இதோ எடுத்து வருகிறேன் குருவே''

என்று கூறிய முட்டாள் லொங்கு லொங்கு என்று ஓடி அதை எடுத்து வந்து கொடுத்தான். ''இப்போது சொல்கிறேன், நன்றாகக் கேட்டுக்கொள்ளுங்கள். குதிரையிலிருந்து கீழே விழுவதை எல்லாம் எடுத்து வாருங்கள். மெத்தனமாக இருக்கவேண்டாம்.''

''ஆகட்டும் குருவே. அப்படியே செய்கிறோம்''

மீண்டும் பயணம் தொடர்ந்தது.

கொஞ்ச தூரம் ஓடிய குதிரை சாணம் போட ஆரம்பித்தது.

''அடே, அடே மடையா! குதிரை யிலிருந்து விழுகிறது பார். கவனமாகப் பிடி.''

பேதை சொன்னதைக் கேட்டு சுதாகரித்த மடையன் கவனமாக ஒன்றும் விடாமல் தன் தோளினில் கிடந்த துண்டை எடுத்துப் பிடித்துக் கொண்டான்.

மீண்டும் இளைப்பாற குதிரையை விட்டு இறங்கிய குரு ஒரு மரத்தடியில் அமர்ந்தார்.

''குருவே இந்தாங்க.'' துண்டை நீட்டினான் மட்டி.

''என்னாட இது, பெரிய பொட்டலமா இருக்கு?''

''வாங்கித்தான் பாருங்களேன்.''

வாங்கிப் பார்த்த குரு, ''சேய், சேய், செச்சே சேய், கர்மம், கர்மம்! என்னடா இது?''

''தெரியலே, குதிரைச் சாணம்.''

''அடே கிறுக்குப் பயலே, குதிரை போட்ட சாணத்தை எடுப்பது மதியீனம் அல்லவா?''

''அதெல்லாம் எங்களுக்குத் தெரியாது. நாங்கள் குருவின் மொழி தட்டாத சீடர்கள்.''

''இனிமேல் குதிரை லத்தியை எடுக்க வேண்டாம்.''

''உங்கள் பேச்சு எங்களைக் குழப்புகிறது. தயவு செய்து எதை எடுப்பது, எதை எடுக்கக் கூடாதென்று எழுதிக் கொடுத்துவிடுங்கள்.'' என்ற மட்டியின் கோரிக்கையை மற்ற அனைவரும் ஏற்றுக்கொண்டார்கள்.

ஏடும், எழுத்தாணியும் குருவின் பையில் எப்போதும் தயாராக இருக்கும். அதை எடுத்த குரு, 'குதிரையிலிருந்து கீழே விழும் கீழ்க்கண்ட பொருள்களை எடுக்க வேண்டுமாய், பரமார்த்த குருவாகிய நான் எனது ஐந்து சீடர்களுக்கும் நாளது தேதியில் எழுதிக்கொடுத்த ஒப்பந்தமுறி. குதிரை மணி, குஞ்சம், கடிவாளம், சேணம், குருவின் அங்கவஸ்திரம், சட்டை, வேட்டி...' இப்படிப் பட்டியல் நீண்டது.

ஓலை முறியை முட்டாள் வாங்கிக் கொண்டான்.

''அப்பாடா! ஒரு பிரச்சினை ஓய்ந்தது'' என்று பெருமூச்சு விட்டார்கள்.

பயணம் தொடர்ந்து.

குதிரை கண்மாய்க்கரை வழியாக ஓடிக் கொண்டிருந்தது. சீடர்கள் குதிரையின் பின்னால் ஓடி வந்தார்கள்.

முதல்நாள் பெய்த மழையால் தரை முழுவதும் ஈரமாக இருந்தது. கரையின் மேல் ஓடிக் கொண்டிருந்த குதிரை ஓரிடத்தில் யாரும், சற்று ம் எதிர்பாராதவகையில் வழுக்கிவிழுந்து விட்டது.

அந்தோ பரிதாபம்! குதிரையின் மேலிருந்த குரு குப்புற விழுந்து, பல பல்டிகள் அடித்து கிடுகிடுவென்று உருண்டு சகதியில் சிக்கினார்.

சகதியில் சிக்கிய குரு, ''என்னைக் காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள்'' என மரண ஓலமிட்டார்.

மட்டி அவரைத் தூக்குவதற்குக் கிட்ட ஓடிவந்தான்.

''அடே அறிவுகெட்ட முண்டம், எங்களுக்கு ஓடித்தூக்கத் தெரியாதா? அப்படித் தூக்கினால் நாம் குருவின் கட்டளையை மீறிய துரோகிகள் ஆவோம்'' என்றுகூறிய முட்டாள், ஏட்டை எடுத்தான்.

''அடே! ஏட்டைப் படிக்கிற நேரமா இது? என்னைத் தூக்கிவிடுங்கடா.'' பரிதாபக் குரல் கொடுத்தார் பரமார்த்தகுரு.

அவர்கள் அதைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

''குருவின் அங்கவஸ்திரம் ஏட்டில் இருக்கிறதா பார்.''

''இருக்கிறது. இருக்கிறது''

''அதை எடு.''

''சட்டை எழுதியிருக்கிறது, அதைக் கழற்று.''

''வேட்டி?''

''வேட்டியும் இருக்கிறது. அதை அவிழ்த்து எடு.''

''அடேய், அடேய் சண்டாளர்களா! என்னை அசிங்கப்படுத்தாதீங்கடா. ஐயோ, ஐயோ வேட்டியை உரிகிறானே, நாசமாப்போக.''

''சபிக்கவேண்டாம் குருவே. சற்றுப் பொறுங்கள்.''

''எங்கள் கடமையைச் செய்யும்போது குறுக்கிட்டுப் பேசி குளறுபடிகள் செய்யவேண்டாம்.''

''குருவின் உள்ளாடை இருக்கிறதா பார்.''

அதையும் உருவி விடுவார் களோ என்று பதறிய குருஅவசர, அவசரமாக உள்ளாடையின் நூலைப் படு முடிச்சுப்போட்டுக் கொண்டார். ஏட்டைத் திரும்பத் திரும்பத் புரட்டிய முட்டாள்,

''உள்ளாடை எழுதப்பட வில்லை.''

''நன்றாகப் படித்துப் பார்'' மிலேச்சன் அதட்டினான்.

''உள்ளாடை இல்லை.''

இவர்களுக்குக் கல்வி கற்றுக்கொடுத்தது எவ்வளவு பெரிய முட்டாள்தனமென்று அப்போது உணர்ந்தார் குரு.

''உங்களைக் கையெடுத்து கும்பிடுகிறேன், என்னைக் காப்பாற்றுங்கள்.''

''காலெடுத்துக் கும்பிட்டாலும் நாங்கள் காப்பாற்ற முடியாது. ஏனெனில், ஓலைமுறியில் அப்படியொரு ஒப்பந்தம் இல்லை.''

''என்னை நீங்க தூக்கிவிட நான் இப்ப என்ன செய்யவேண்டும்?'' தீனமாகக் கேட்டார் குரு.

''நீங்கள் ஒப்பந்தமுறியில், கீழே விழுந்த குருவையும் தூக்கவேண்டுமென எழுதித் தரவேண்டும்.''

''கொடு. எழுதித் தருகிறேன்.''

ஏட்டையும், எழுத்தாணியையும் கொடுத்தார்கள்.

குரு மிகுந்த சிரமத்துடன் கோணல் மாணலாய் ஏட்டில் குறுக்கும் நெடுக்குமாய்க் கிறுக்கினார்.

''ஒப்பந்தமாகிவிட்டது. தூக்குங்கள் குருவை'' கத்தினான் முட்டாள்.

அவர்கள் ஆரவாரமாய் குருவைத் தூக்கித் தோளில் வைத்துக்கொண்டு கூத்தாடினார்கள்.

அறிவிலிகளைச் சீடர்களாகச் சேர்த்துக் கொண்டதன் ஒட்டுமொத்தப் பலனையும் பரமார்த்தகுரு அன்று அனுபவித்தார்.



*நீதி: முட்டாள்களை விட மோசமானவர்கள் உலகத்தில் கிடையாது. அவர்களால் நம் உயிருக்கும் ஆபத்து ஏற்படும்.* ★

## அழகாக நிறம் தீட்டுங்கள்: 63



தம்பி, தங்கைகளே! அருகே உள்ள படத்துக்கு அழகாக நிறம் தீட்டி எமது முகவரிக்கு அனுப்பி வையுங்கள். மிக சிறந்த முறையில் நிறம் தீட்டப்பட்டு தெரிவுசெய்யப்படும் படம், உங்கள் பெயர், தரம், பாடசாலை போன்ற விபரங்களுடன் பிரசுரமாகும். எங்கே உங்கள் கைவண்ணத்தைக் காட்டுங்கள் பார்க்கலாம்.

## சிறந்த முறையில் நிறம் தீட்டப்பட்ட படம்

### அழகாக நிறம் தீட்டுங்கள்: 60



### பாராட்டுப் பெறுவோர்...

1. எம்.ஆர்.பாதிமா சாறா, தரம் - 2, முஸ்லிம் மகளிர் வித்தியாலயம், சம்மாந்துறை.
2. கி.சதர்சன், தரம் - 3, ஹைலைன்ஸ் கல்லூரி, ஹட்டன்
3. செல்வி றைசா அஸ்மத், தரம் 3, களு/ஜீலான் நவோதய மத்திய கல்லூரி, ஹேனமுல்ல, பாணந்துறை.

## சிறுவர் கைவண்ணம்



தரம் 4 ஓ. மு/தண்ணீரூற்று இ.கி.த.க. பாடசாலை, குமாரபுரம், முள்ளியவளை.



தரம் 8பீ, கொ/ஸைரியா முஸ்லிம் பாலிகா மகா வித்தியாலயம்.



ஜீ.ஜனனி.
தரம் 4
கிங்ஸ்டன் சர்வதேச கல்லூரி, வெள்ளவத்தை.



சுரேகா.
தரம் 3. கிங்ஸ்டன் சர்வதேசக் கல்லூரி, வெள்ளவத்தை.

# குரல் நாணில் ஏற்படும் வளர்ச்சி சத்திர சிகிச்சைதான் தீர்வா?







**கேள்வி:** ஒன்றரை மாதத்திற்கு முன்னர் எனக்கேற்பட்ட விபத்தின்போது எனது நக விரல் எலும்புகள் முறிந்து Palm எனப்படும் உள்ளங்கையிலும் பெருத்த வெட்டுக்காயம் ஏற்பட்டது. காயத்திற்கு சத்திரசிகிச்சை செய்யப்பட்டு தையல் போடப்பட்டது. புண் ஆறிவிட்டது. ஆனால், உள்ளங்கை விறைத்து Stiff ஆக இருக்கிறது. சில வேளைகளில் விரல்களிலும் உணர்வு குறைந்து விடுகிறது. டாக்டரிடம் காட்டினால் - சில தசை பயிற்சிகளை செய்ய அறிவுறுத்துகின்றார். எனது உள்ளங் கையை மென்மைப்படுத்த பூசுவதற்கு களிம்பு ஏதாவது இருக்கின்றதா?

**பதில்:** உங்களுக்கு விபத்து ஏற்பட்டு ஒன்றரை மாதங்களாகி விட்டன. காயமும் நன்றாகக் காய்ந் திருக்கும். காயமடைந்தபோது விரல்களுக்கு செல்கின்ற நரம்புகள், இரத்தக் குழாய்கள் சேதப்பட்டிருக்கும். விரல் நரம்புகள் முற்றாக பாதிக்கப்பட்டிருந்தால் ஆரம்பத்திலேயே - விரல்கள் உணர்விழந்திருக்கும். ஆனால், அப்படி ஏற்படவில்லை என்று நீங்கள் தந்திருக்கும் விவரங்களிலிருந்து அறிய முடிகின்றது. உள்ளங்கையில் காயம் ஆறும்போது SCARRING என்கின்ற தழும்பு ஏற்பட வாய்ப்புண்டு. தழும்புகள் முற்றும் போது - அடல் பிரதேசங்களை - குறுக்கி இழுக்கும் - CONTRACTURE தன்மையை பெறுகின்றன. மேலும், உள்ளங்கை என்பது தன்னிச்சையாகவே உள்ளுக்குள் மடியும் - (கைகளை பொத்துவது) தன்மையது. எனவே, தழும்பு உள்ளங்கையில் ஏற்படும்போது - உள்ளங்கை மடித்து பொத்தும் நிலையைப் பெறும். விரல்களை நீட்டி, மடிக்கும் பயிற்சிகளை கிரமமாக செய்யாவிடில் - உள்ளங்கை குறுத்துவிடும்.

உள்ளங்கையில் தழும்பு ஏற்பட்டு - 'குறுக்கு' நிலை ஏற்படும்போது விரலுக்கு செல்லுகின்ற நரம்புகள் - இதற்குள் சிக்குண்டு - விறைப்புத்தன்மை விரல்களில் ஏற்படலாம். தழும்பு ஏற்படுவதால் உள் ளங்கை தடிக்கவும் செய்யலாம்.

எனவே - வெறுமனே கிறீம் - களிம்புகளை பூசி காலத்தை வீணாக்காமல், இயன் சிகிச்சை நிபுணர் (PHYSIOTHEARPIST) உதவியுடன் உள்ளங்கை பயிற்சிகளை செய்து வர வேண்டும். இந்த பயிற்சிகளில் WAX BATH எனப்படும் மெழுகு மசாஜ், INFRA RED LIGHT TREATMENT என்பவை முக்கிய பங்கு வகிக்கின்றன.

இந்த சிகிச்சையுடன் MOISTURIZING CREAM எனப்படும் தண்ணீர் தன்மையை தோலுக்கு தருகின்ற EMOLLENE அல்லது கத்தாளையிலிருந்து தயாரிக்கப்படும் ALOE VERA GEL போன்றவற்றை - தடித்திருக்கும் தோலில் தடவி, ஒரு மணித்தியாலத்திற்கு ஒரு தடவை 5 நிமிடநேரம் மசாஜ் செய்வதும் நல்லது. தழும்பு மிகவும் தடிப்பாக இருப்பின் மருத்துவ ஆலோசனை பெறுவது நல்லது.

* * *

**கேள்வி:** ஆண். வயது 40. கடந்த இரண்டு மாதங்களாக எனக்கு தொண்டை வலி ஏற்பட்டுள்ளது. குரலும் தடித்துப் போய்விட்டது. மருந்துகள் எடுத்தேன். கொப்புளிக்க மருந்துகளும் எடுத்தேன். எதுவித பலனுமில்லை. தொண்டை, காது, மூக்கு விசேட வைத்தியரிடம் காட்டிய போது - அவர் பரிசோதித்து எனது குரல் நாணில் (VOCAL CHORD) - சிறு வளர்ச்சிகள் இருப்பதாகவும் அவற்றை சத்திர சிகிச்சை மூலம் அகற்றினால் எனது பிரச்சினை தீரும் என்றும் கருத்து தெரிவித்தார். இதனை மருந்துகளால் மாற்ற முடியாதா? உங்கள் கருத்து என்ன?

பதில்: குரல் நாணில் உள்ள வளர்ச்சிகளை VOCAL CHORD POLYPS என்பார்கள். அதிகமாக குரலை உபயோகிப்பவர்களுக்குத்தான் இந்த வளர்ச்சிகள் ஏற்படுகின்றன. நீண்ட நேரம் பாடுபவர்கள், நீண்ட நேரம் பேசுபவர்கள் (ஆசிரியர்கள் இதற்குள் அடக்கம்) அதிகமாக புகைப்பவர்கள், ACID REFLUX நோய் எனப்படும் ஒரு வகை இரைப்பை அமிலச்சுரப்பு அதிகம் உள்ளவர்கள் என்போரிடையே இந்தப் பிரச்சினை காணப்படுகின்றது. இதன் முக்கிய குறி HOARSENESS எனப்படும் குரல் கட்டுப்போதல். இதற்கு ஆரம்ப சிகிச்சை, இது ஏற்படும் காரணிகளைத் தவிர்ப்பதுதான். இப்படி காரணிகளை தவிர்த்தும் - ஒருவித குணமும் இல்லையென்றால் - மட்டுமே சத்திர சிகிச்சை சிபாரிசு செய்யப்படுகிறது. இப்படி சத்திர சிகிச்சை மூலம் வளர்ச்சி அகற்றப்படும் போது மேலும் ஓர் அனுகூலம் ஒன்று உள்ளது. ஒரு சில வளர்ச்சிகள் புற்று நோய் சம்பந்தப்பட்டவை. எனவே, அகற்றப் பட்ட வளர்ச்சிகளில் புற்றுநோய் குணங்கள் இருக்கின்றனவா என்று நோயியல் பரிசோதனை மூலம் - கண்டறிய இலகுவாகின்றது.

சில வேளைகளில் சத்திர சிகிச்சை மூலம் அகற்றப்பட்டாலும் இவை திரும்பவும் வளர சந்தர்ப்பம் உண்டு. இவை வளருவதற்குரிய காரணிகள் தவிர்க்கப்படும் வரை இம்மாதிரி நேரலாம்.

இலவச மருத்துவ
ஆலோசனைகளை
'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை
அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஜயந்த வல்விமாராய்ச்சி
மாவத்தை, கொழும்பு - 14.

* * *

**கேள்வி:** வயது 28. பெண். 5 மாதங் களுக்கு முன்னர் ஒரு கார் விபத்தில் சிக்கினேன். அவ் வேளை தலையில் அடிபட்டது. கடந்த ஒரு மாதமாகத் தான் விபத்தில் ஏற்பட்ட சிறு சிறு பிரச்சினைகள் தீர்ந்தன. கடந்த மாதம் தொடக்கம் காரில் அலுவலகத்திற்கு சென்று வருகின்றேன். எனது கார் சுமார் 50 கிலோமீட்டர் வேகத்தில் சென்றால் எனக்கு தலைச்சுற்றல் ஏற்படுகிறது. பதற்றம் வருகின்றது. நடந்த விபத்து நினைவுக்கு வரும்போது - உடல் இறுக்கம் (TENSE) அடைகிறது. விபத்து நடந்த நாளிலிருந்து சரியாக இரவில் தூக்கம் வருவதில்லை. இரவில் கூட தலைச்சுற்றல் ஏற்படுகிறது. இதற்கு நான் என்ன செய்யமுடியும்?

பதில்:- நீங்கள் கூறிய கோளாறுகள், உங்களது விபத்தின் பின்னர் அநேகமாக ஏற்படுவது உண்டு. வேகமாக சென்று கொண்டிருக்கும் வாகனத்தில் பயணிப் பவரும் வாகனத்தின் வேகத்தில் தான் பயணிக்கின்றார். வாகனம் முன்னால் மோதுண்டு திடீரென்று நிறுத்தப்படும் போது - வாகனம் நின்றாலும் - பயணித்துக் கொண்டிருப்பவரின் உடல் அதே வேகத்தில் முன்சென்று - அதன் பின்னர் தான் நிற்கும். 'சாட்டை சொடுக்குவது போல் தலை, கழுத்துப் பகுதிகள் முன்சென்று திடீரென்று நின்று பின்னால் இழுக்கும். இதனை WHIPLASH INJURY - சாட்டை சொடுக்கு தாக்கம் என்று அழைப்பர். இதனால் தலையினுள்ளே உள்ள மூளையும் அதிர்வை எதிர்கொள் கின்றது. - இந்த அதிர்வு தாக்கத்தின் வெளிப்பாடுகள் தலைசுற்றல், தூக்க மின்மை, தலைவலி, திடீர் திடீரென்று உடல் இறுக்கம் (TENSE) போன்றவை யாகும். இதற்கு நீங்கள் பின்பற்றவேண்டிய வழிமுறை பின்வருமாறு: முதலில் நரம்பியல் நிபுணர் - NEUROLOGIST ஒருவரின் ஆலோசனை பெற வேண்டும். இந்த நரம்பியல் சிகிச்சை நிபுணர் - ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு - நரம்பியல் தொகுதியில் உள்ள நோய்களோ, கட்டிகளோ, விபத் தின்போது ஏற்பட்டிருக்கக் கூடிய இரத்த உறை கட்டிகளோ (BLOOD CLOTS) காரணமா என்பதை கண்டறிவார். மேலும் உங்கள் தலைச் சுற்றலுக்கு தேவையான மருந்துகளையும் தருவார். அதன் பின்னர் நீங்கள் CLINI-CAL PSYCHOLOGIST என்கின்ற மனோவியல் நிபுணரின் ஆலோசனையையும் பெறுவது அவசியம். உங்கள் தூக்கமின்மை, மன இறுக்கம், படபடப்பு என்பவை விபத்தின் போது மனதில் ஏற்படுத்திய தாக்கங்கள். இவற்றை மனோவியல் நிபுணர் உளவள ஆலோசனை (COUN-SELLING) மூலமாகவும், REASSURANCE என்கின்ற தைரியமூட்டல் பயிற்சி மூலமாகவும் தீர்த்துவைப்பார்.

* * *

**கேள்வி:** ஆண். வயது 43. கடந்த 20 வருடங்களாக எனக்கு ஒருவித ஒவ்வாமை. 3 நாட்களுக்கு ஒருதரம் தும்மல், கண்ணீர் வடிதல், மூக்கு அடைப்பு, மூக்கால் சிந்துதல் போன்ற கோளாறுகள் ஏற்படும். மூக்கு, காது இரண்டும் அடைத்து விடும். சிலவேளைகளில் தலை வலியும் உண்டு. பரிசோதித்த மருத்துவர் எனக்கு ஒவ்வாமையும், எனது மூக்கினுள் ஒரு பக்கமாக சாய்ந்த பிரிவுச்சுவரும் (DEVIATED NASAL SEPTUM) இருப்பதாக கூறி ஒவ்வா மைக்கு மருந்துகளும், மூக்கினுள் உபயோகிக்க NASAL SPRAY யும் தந்தார். எனது நண்பர் இந்த கோளாறுக்கு சத்திர சிகிச்சை செய்ய சொல்கின்றார். உங்கள் ஆலோசனை என்ன? மருந்துகளை உபயோகிக்கும் போது தற்காலிக குணம் மட்டும்தான் கிடைக்கின்றது.

பதில்: உங்கள் பிரச்சினையை பார்க்கும்போது உங்களுக்கு ஒவ்வாமை இருப்பது தெளிவாகப் புரிகிறது. அநேக மானவர்களுக்கு உங்கள் வைத்தியர் தந்த மருந்துகளை தொடர்ந்து உபயோ கிக்கும்போது குணம் காணலாம் என்று நம்புகின்றேன். ஆனால், பிரிவுச் சுவர் சாய்ந்திருக்கும் கோளாறும் உங்களுக்கு இருப்பின் நாசியால் வெளிவரும் நீர்ச் சுரப்புகள் இலகுவாக வெளியேற கஷ்ட மாக இருக்கும்; தடையாக இருக்கும். எனவே, இப்படியான வேளையில் SINUSITIS என்கின்ற பீனிச நோயும் சேர்ந்துகொள்ளும். உங்கள் வைத்தியர் இந்த கோளாறுக்கு சத்திர சிகிச்சை செய்ய பரிந்துரைப்பாரானால் - அதனை செய்வது நல்லது. ஆனால், சத்திர சிகிச்சை உங்கள் ஒவ்வாமை நோயை குணமாக்காது என்பதை மனதில் கொள்ளவும். *

## சொற்சிலம்பம் போட்டி இல. 329

சொற்சிலம்பம் 329 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய கடைசித்தினம் செப்.06 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றிபெற்றவர்களின் பெயர்கள் செப்.14 ஆம் திகதி சுடர்ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.327 இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250ரூபாவும், இரண்டாவது பரிசாக 150 ரூபாவும்,மூன்றாவது பரிசாக 100ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல்மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப் படுவார்கள்.

**அனுப்பவேண்டிய முகவரி:**
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14.

## சொற்சிலம்பம் போட்டி இல.327

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 மு | ப் | 2 ப | 3 து | ■ | 4 செ | ம் | 5 பு |
| ழு | ■ | 6 கு | ம் | ப | ல் | ■ | த் |
| 7 ம | 8 தி | ப் | பு | ■ | 9 வ | 10 ச | தி |
| 11 தி | ரி | பு | ■ | 12 சூ | ம் | மி | ■ |
| ■ | ச | ■ | 13 வி | டை | ■ | 14 பா | 15 சி |
| 16 க | டை | 17 த | ல் | ■ | 18 வி | டு | தி |
| ம் | ■ | 19 வி | லை | 20 வா | சி | ■ | ல |
| 21 பு | ய | ல் | ■ | 22 வி | ல் | வ | ம் |

## சொற்சிலம்பம் போட்டி இல. 327

1. ம.கமல்நாதன்,
16/1, கோணர் வீதி,
மட்டக்களப்பு.

2. நா.ஹேமானந்தி,
200, பாடசாலை வீதி,
சேனைக்குடியிருப்பு - 01,
கல்முனை.

3. எஸ். என். மணி,
106, மகிந்த மாவத்தை,
நுவரெலியா.

1. மங்களம் மனோரஞ்சன்,
கல்முனை - 02.
2. திருமதி ம. கனகசேகரம்,
தெஹிவளை.
3. திருமதி பாலசரஸ்வதி தங்கவேலு
கொழும்பு - 05.
4. முத்துசாமி பரந்தாமன்,
வெளிமடை.
5. வ.நிலோஜா,
புத்தளம்.
6. நெல்சன் ஜெபத்துரை,
பண்டாரவளை.
7. ப.நா.ஈஸ்வரி,
கல்கிசை.
8. நஸ்லான் ஹாரிஸ்,
பேருவளை.
9. சி.வதனகுமார்,
வவுனியா.
10. எம்.எம்.எப்.ஸப்னா,
அக்கரைப்பற்று - 04.
11. வி.தினேஸ்,
கிளிநொச்சி.
12. எஸ். மி. நாராயணன்,
கொழும்பு - 07.
13. ஆர். கார்த்திகேசு,
கொழும்பு - 06.
14. கே.அருள்சீலி,
மன்னார்.
15. ஜோசப் டொரிங்டன் ஸ்பெக்,
மட்டக்களப்பு.

## சொற்சிலம்பம் போட்டி இல.329

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | ■ | 3 | 4 | 5 | |
| 6 | | ■ | 7 | | | | ■ |
| 8 | | 9 | ■ | | ■ | 10 | 11 |
| ■ | 12 | | 13 | | | ■ | |
| 14 | ■ | 15 | | | ■ | 16 | |
| 17 | 18 | | | ■ | 19 | | |
| 20 | | | ■ | 21 | | | ■ |
| 22 | | ■ | 23 | | | | |

## சொற்சிலம்பம் போட்டி இல. 329

**இடமிருந்து வலம்**

1. மிக, மிக நீண்ட கால அலகு (அளவு)
3. கூட.
6. (காயத்தின்) அடையாளம்.
7. ஒன்றுக்கு அதிகம். மூன்றுக்கு குறைவு.
8. தினசரி மாறுவது.
10. ஒருங்கு சேர்.
12. இலட்சுமி.
15. ஒரு நட்சத்திரம்.
16. எமது.
17. ஒரு பெரு வள்ளல்.
19. மத்திய கிழக்கு நாட்டின் பிரதான மொழி.
20. வீரம்.
21. பசளை.
22. சிரார்த்த நாள்.
23. உயிராயுதம் இவன்.

**மேலிருந்து கீழ்**

1. இள மங்கை.
2. வேகமாக விரைந்து செல்வது.
3. மேடை/களம்/ஆற்றகை நிகழ்த்தும் இடம்.
4. வலி/ பலம்.
5. சிறிது என்றாலும் காரம் பெரிது.
9. கலியாணம்.
11. ஆசைப்படு / இச்சை கொள்.
13. புதல்வன்.
14. சன்மானம்/ பரிசாக அளிப்பது/ நன்கொடை.
16. உணர்வைக் கடத்துவது.
18. ஞாபகமின்மை / நினைவில் கொள்ளாமை.
19. உலோகக் கருவிகள் தீட்டுவது இதனால்.
21. வடிவம் / தோற்றம்.

## A9 இல் காதல் கிளி..

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்று பெற்றோர் இருவரும் கதைச்சிட்டாங்க. அவருக்கும் என்னை ரொம்ப பிடிக்கும். என் படிப்பு முடிவுக்காக காத்திருக்கிறாங்கள். நானும் நீங்களும் சேர்ந்தா நம்ம காதலைத்தான் போற்றியதாய் இருக்கும். எங்கட சொந்தங்களை நானும் உங்கட சொந்தங்களை நீங்களும் இழந்திடுவீங்க. ஆனால், ஒன்று மட்டும் சொல்லுறன். என் மனசு பூரா நீங்கதான் இருக்கிறீங்க தலையெழுத்து எப்படியோ...... அப்படியே நடக்கும். கடவுள் என்று ஒருவர் இருந்தால் நீங்க எனக்குத்தான் சொந்தம்...'' என்று கூறி அழத் தொடங்கினாள். இவ்வாறாக அவர்களின் காதல் வளர்ந்து கொண்டிருந்தது.

விதிவிளையாடப் போகின்றது என்று எவரும் எதிர்பார்க்கவில்லை. நிலவனுக்கு வேலையும் கிடைக்கவில்லை. திடீரென யாழ்ப்பாணத்தைச் சுற்றி யுத்த மேகங்கள் கருக்கொண்டன. எங்கும் வேட்டுச் சத்தமும் குண்டுச் சத்தமும் அழுகுரலும் தான். மக்கள் இடம்பெயர்ந்திருந்தனர். சர்மிக்கும் நிலவனுக்கும் எந்தவித தொடர்பும் இல்லாமல் போனது. கையடக்கத் தொலைபேசிகளும் நிறுத்தப்பட்டிருந்தன. எங்கும், ''அங்கசுட்டான் இஞ்சசுட்டுப்போட்டான், அவனை வெள்ளைவானில் பிடிச்சுக்கொண்டு போட்டாங்கள், யாழ்ப்பாணம் போன வையனைக் காணோம், மனித உரிமைக்குழுவில் சரணடைந்து போட்டானாம், சடலம் யாழ்ப்பாண பிரேத அறையில் கிடக்குதாம். இதே பேச்சுத்தான்.

''கொழும்பிலயும் பிடிக்கிறாங்களாம். திருப்பி அனுப்பிறாங்களாம். ஊரடங்குச்சட்டத்தப் போட்டு இடம்பெயரவும் விடுறாங்கள் இல்ல,'' இதுதான் எங்கும் பேச்சு.

நிலவனைக் காப்பாற்ற எல்லோரைப் போலவும் அவனின் பெற்றோருக்கு விருப்பம் இல்லாத போதும் அவனை ஜேர்மனிக்கு உறவினரின் உதவியுடன் அனுப்பி வைத்தனர்.

நிலவன் ஜேர்மனி வாழ்க்கையையும் யாழ்ப்பாணத்து வாழ்க்கையையும் மீட்டிப்பார்த்தான். காதல்கிளியில் பயணிக்கும்போது இருந்த சந்தோசம், கோயிலில் நண்பர்களோடு பழகிய சந்தோசம், வீட்டில் இருந்தபோது உறவுகளோடு இருந்த சந்தோஷம் எதுவுமே கிடைக்கவில்லை. மாறாக நிறைவான வேலையும் கைநிறையக் காசும் கிடைத்தன. காசைவைத்து என்ன செய்ய என்றுதான் பலதடவை நினைத்தான். நாட்கள் நகர நகர ஜேர்மனி வாழ்க்கையும் பழகிப் போனது. ஆனால், சர்மியின் பிரிவு அவனை வாட்டியது. சர்மியுடன் தொடர்புகொள்ள பலதடவைகள் முயன்றும் அது பயனின்றும் போனது. பின்பு சாந்தன் மூலம் அறிந்தான், சர்மிக்கு யாரோ? உறவினருடன் திருமணம் நடைபெற்று விட்டதாக... நிலவன் துடிதுடித்துப் போனான்.

ஜேர்மனியில் பனி கொட்டிக் கொண்டிருந்தது. வழமையான சோவை இழந்திருந்தது. எல்லோரும் அதற்கேற்றவாறு ஆடைகளை அணிந்திருந்தனர். தலையை மூடிமொட்டாக்கு போட்டிருந்தனர்.

''ஹலோ... ஹலோ... நிலவன்'' ஒரு பெண்ணின் குரல். திரும்பிப்பார்த்தவன், அது என்ன பிரமையா...? தொடர்ந்து நடந்தான்.

''ஹலோ... நிலவன் நான்தான் சர்மி'' நிலவனுக்கு தன்னையும் நம்ப முடியவில்லை தன் கண்ணையும் நம்ப முடியவில்லை.

''சர்மி நீங்க எப்படி இங்க.''

''அது பெரிய சோகக்கதை நிலவன்'' நிலவன் சர்மியை உச்சந்தலையிலிருந்து உள்ளம் கால்வரை பார்த்தான். பொட்டைக் காணவில்லை, பூவைக்காணவில்லை, தாலியையும் காணவில்லை, மெட்டி அதையும் காணவில்லை.

''உங்களுக்கு திருமணம் ஆயிட்டதாக சாந்தன் சொன்னது...''

''ஆம்...!''

''திருமணம் தான் ஆனது வாழமட்டும் கொடுத்துவைக்கவில்லை.''

''என்ன சொல்லிறியள் சர்மி ?''

''ஜேர்மனியில் இருந்த அத்தை மகனுக்கும் எனக்கும் வீட்டில் சம்பந்தம் பேசி திருமணத்துக்காக நான் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு வந்திருந்தன். அவரும் கொழும்புக்கு வந்திருந்தார். எல்லாம் நல்லபடி நடைபெற்றன. அன்றிரவே வெள்ளை வானில் வந்தவங்கள் நகை, காசு, எல்லாத்தையும் கொள்ளையடித்ததோட அவரையும் பிடிச்சுக்கொண்டு போட்டாங்கள். அங்க இஞ்ச எல்லாம் அறிவிச்சும் எந்தப்பயனும் கிடைக்கல்ல. காணாமல் போனவர்கள் பட்டியலில் அவரும் சேர்ந்திட்டார். கோவில் குளம் என்று அலைஞ்சன். பூ பொட்டு வைக்க முடியல்ல. தாலியும் மாற்றிய மோதிரமும் அவங்கள் கொண்டு போட்டாங்கள். இப்படியே எப்படி யாழ்ப்பாணம் போறதென்று வந்திட்டன்'' சர்மி விம்மத் தொடங்கினாள்.

''சரி சரி அழாதே சர்மி... நடந்தவற்றை எல்லாம் ஒரு கெட்ட கனவாய் எண்ணி புதிய வாழ்க்கையை ஆரம்பிக்கலாம் தானே?'' நிலவனை சர்மி உற்று நோக்கினாள்.

''காணாமல் போனவர்கள் எவருமே இன்னும் திரும்பி வரவில்லை. எல்லோரையும் என்ன செய்து போட்டாங்கள் என்பது விளங்குதுதானே...! நீங்கள் சம்மதம் என்றால் நான் உங்களை மறுமணம் செய்துகொள்ளச் சம்மதம்'' என்றான் நிலவன்.

சர்மி அவ்விடத்தைவிட்டு நகரத் தொடங்கினாள். ''சர்மி கொஞ்சம் நில்லும். என்னோட கதையும்... நான் கேட்டது தப்பா? இப்படி இருந்து நீங்கள் ஏன் உங்கள் வாழ்க்கையை அழிக்க வேண்டும். திரும்பவும் சொல்லுறன். காணாமல் போனவர்கள். எவரும் வர வில்லை. அதுதான் கேட்டேன் தப்பா...? சொல்லு சர்மி''

''ஐரோப்பிய நாடுகளைப் பொறுத்தமட்டில் இதெல்லாம் சின்னவிஷயம். ஆனால், எங்கட தமிழ்பாரம்பரியத்தில் இதெல்லாம் பெரியவிடயம். நான் இன்று விதவையா? அல்லது சுமங்கலியா? என்று சொல்லமுடியாத நிலையில் இருக்கின்றேன். உங்களுடைய தியாக மனப்பாங்குக்கு நல்ல மனைவி அமைவா. என்னுடைய கணவன் என்றோ ஒருநாள் வருவார் என்ற நம்பிக்கை இருக்கிறது. என்னைத் தடுக்காதீர்கள். நான் என் வழியில் போறேன். நீங்க உங்கள் மனசுக்கு பிடித்தவங்களாகப் பார்த்து திருமணம் செய்யுங்கோ.'' என்று கூறி நம்பிக்கையுடன் நடந்தாள்.

'இப்படி சர்மி மட்டுமா? எத்தனை ஆயிரம் ஆயிரம் தமிழ்ப்பெண்கள்...' என நினைத்து மனதுக்குள் நொந்து கொண்டான் நிலவன்.

(முற்றும்)

## இளநீர் மருந்து

இளநீருக்கு இயற்கையாகவே மருத்துவக் குணங்கள் உண்டு. பாக்டீரியா, வைரஸ் போன்ற கிருமிகளை அழிக்கும் சக்தி இளநீருக்கு உண்டு என்பது மருத்துவ ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் சிக்குன் குனியா, காலரா, டைபாய்ட் போன்ற நோய்களுக்கு இளநீர் சிறந்த நிவாரணம் அளிக்கக்கூடியது என மருத்துவர்கள் ஆதாரபூர்வமாக நிரூபித்துள்ளனர்.

சமீபகாலமாக உலகம் முழுவதும் சிக்குன் குனியா நோய், கொசுக்கள் மூலம் வேகமாக பரவி வருகிறது. இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள் மூட்டுவலி, காய்ச்சல், பசியின்மை, வாயில் புண் போன்றவற்றால் அவதிப்படுவார்கள். வைரஸ் தாக்குதலால் இந்த நோய் ஏற்படுவதால், இதற்கென தனிப்பட்ட மருந்துகள் எதுவும் இல்லை. சில நாட்களில் நோய் கட்டுக்குள் வந்தாலும், மூட்டு வலி, உடல் வலி போன்ற பிரச்சினைகள் நீண்ட நாட்களுக்கு இருக்கும்.



சிக்குன் குனியா நோயை கட்டுப்படுத்தும் சக்தி இளநீருக்கு உண்டு. எமது உடலில் கல்லீரல் மூலம் உடலின் வெப்பநிலை கட்டுப்படுத்தப்படும். சிக்குன் குனியா வைரஸ் கல்லீரலில் இருந்து பெருகும் தன்மை கொண்டது. இளநீர் கல்லீரலில் உள்ள நச்சுப்பொருட்களை அகற்றும் தன்மை வாய்ந்தது. எனவே, இளநீர் சாப்பிட்டால் கல்லீரலில் உள்ள வைரஸ் பெருக்கத்தை தடுக்கலாம். இதனால் உடல் வெப்பநிலை சீராக இருக்கும். இப்படி இளநீர், சிக்குன் குனியா நோயாளிகளுக்கு ஏற்படும் பிரச்சினைகளின் தன்மையை குறைத்து, நோயைக் கட்டுக்குள் வைக்கிறது.

# வன்னியில் புலிகள் அமைத்துள்ள தேள் வியூகம்

''வன்னிப்படை நடவடிக்கையின் அடுத்த கட்டம் என்ன?'' என்ற தலைப்பில் லண்டனிலிருந்து வன்னியன் எழுதிய கட்டுரை இங்கு 'வன்னியில் புலிகள் அமைத்துள்ள தேள் வியூகம்' என்ற தலைப்பில் பிரசுரமாகிறது.

கடந்த சில வாரங்களாக படை நடவடிக்கை ஒரு மந்த நிலையை அடைந்திருப்பதையும், புலிகளின் எதிர்ச்சமர் வலுவடைந்திருப்பதையும் அவதானிக்க முடிகிறது.

பலமுனைகளில் இராணுவம் முன்னோக்கிச் சென்றாலும் சமீபத்தில் பூநகரி நோக்கிய நகர்வு முழங்காவில் பிரதேசத்தைக் கைப்பற்றியதோடு இராணுவ வெற்றிகள் பற்றிய அரசின் பரப்புரை உச்சக்கட்டத்தை அடைந்துவிட்டிருக்கிறது. எனினும், அடுத்து என்ன நடக்கப் போகின்றது? என்பதை அறிய சிங்கள தேசமும், புலிகள் என்ன செய்யப் போகின்றார்கள்? என அறிய உலகம் முழுதும் பரந்து வாழும் தமிழர்களும், ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருக்க, புலிகளும் தாம் நீண்ட காலம எதிர்பார்த்த இலக்கு நெருங்கிவருவதை எதிர்பார்த்து காத்திருக்கிறார்கள் என்று சொல்வது இன்றைய நிலையில் பொருத்தமானது.

பாலமோட்டை, வவுனிக்குளம், கிளாலி, முகமாலை, கல்விளான், முழங்காவில் ஆகிய போமுனைகளில் பாரிய அளவிலான முன்னகர்வுகள் இடம்பெற்ற போதிலும் கல்விளான், முழங்காவில் ஆகியவற்றில் படையினர் முன்னகர்ந்திருப்பதையும் ஏனைய இடங்களில் சற்றேனும் முன்னகர முடியாமல் இறுக்கமான சண்டைகளை படைத்தரப்பு சந்தித்திருப்பதையும் நோக்குகின்றபோது புலிகள் போர்முனையில் ஓர் ஆச்சரியமான முடிவினை எடுத்து விட்டார்கள் என ஊகிக்க முடிகிறது.

வெள்ளாங்குளத்திலிருந்து ஏ32 வீதியூடாக முழங்காவில பிரதேசத்தைப் படைகள் கைப்பற்றிய விதத்தைப் பார்த்தால் வெள்ளாங்குளத்திற்கும் கல்விளானுக்கும் இடைப்பட்ட காட்டுப் பகுதியினூடாக நகர்ந்து முழங்காவில் ஏரிப்பகுதியைக் கடந்து மீண்டும் மேற்கு நோக்கி எல் வடிவில் நகர்ந்ததன் மூலம் வெள்ளாங்குளத்தை இராணுவப் பெட்டிக்குள் அகப்படுத்தியிருக்கிறார்கள். இதன்மூலம் முழங்காவில் கிராமம் முழுவதும் இராணுவ வசமாயிற்று. முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லம் கைப்பற்றப்பட்டமை அரசின் பரப்புரைக்கு மேலும் வலுச்சேர்த்துள்ளது. 1990ஆம் ஆண்டின் இறுதியில் உருவாக்கப்பட்ட முழங்காவில மாவீரர் துயிலுமில்லத்தில் ஏறக்குறைய 3000இற்குட்பட்ட மாவீரர்களின் வித்துடல்கள் விதைக்கப்பட்டிருக்கின்றன. இராணுவம் கைப்பற்றிய மாவீரர் துயிலும் இல்லங்களில் இதுவே மிகப்பெரியதாக இருப்பதனால் இதைககாட்டி சிங்கள தேசத்திற்கு தமது புயபலத்தை நிரூபிக்க முனைகிறது அரசு.

ஏ32 வீதியில் நாச்சிக்குடாச் சந்திக்கு (நாச்சிக்குடாவிற்கு செல்லும் வீதி ஆரம்பிக்கும் இடம்) அண்மையில் இராணுவம தரித்து நிற்கின்றது. இவ்விடம் பூநகரியில் இருந்து 21 மைல் தெற்கே அமைந்துள்ளது. அத்தோடு நாச்சிக்குடாச் சந்தியிலிருந்து மேற்காகச் செல்லும் வீதியில் மூன்று மைல் தொலைவிலேயே மேற்குக் கடற்பரப்பின் முக்கியத்துவமான நாச்சிக்குடா ஓடத்துறை அமைந்துள்ளது. அதனை அடுத்த குமுழமுனை, வலைப்பாடு, பாலாவி ஆகிய ஓடத்துறைகள் இருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. எனினும், மேற்குறிப்பிட்ட நாச்சிக்குடா, வலைப்பாடு, பாலாவி ஆகியவை பாக்குநீரிணையின் ஆழ்கடலை அண்மித்தே அமைந்துள்ளன. எனவே, இவற்றின் முக்கியத்துவம் புலிகள் உணராதிருக்காதது ஒன்றல்ல. எனினும், இவற்றினை மிஞ்சிய ஓர் இலக்கினை எதிர்பார்த்துக் காத்திருப்பதனாலேயே முழங்காவில் நோக்கிய நகர்வு இராணுவத்திற்குச் சாத்தியமாயிற்று.

அடுத்து, கல்விளான் பகுதியைக் கைப்பற்றியதோடு இராணுவம் நேரெதிர் வடக்கே காடுகளூககூடாக நகர்ந்தால் தென்னியக்குளத்தை அடையமுடியும். அந்தமுயற்சி பலத்த அடி வாங்கியதை பார்க்கின்றபோது. பூநகரிநோக்கிய நகர்வில் இராணுவ வலயத்தின் வடமுனையில் ஒடுங்கலான ஒரு



பிரதேசத்தினூடாக நகர புலிகள் இடமளிப்பதாகவே தோன்றுகிறது. ஏனெனில், பாலமோட்டையிலிருந்து பார்த்தால் படிப்படியாக மேற்கு நோக்கி கூம்புவடிவில் வவுனிக்குளம், அதனை அடுத்து கல்விளான், இறுதியாக முழங்காவில் என ஒரு படிமுறையிலான இராணுவ ஒடுங்கல் பிரதேசத்தை அவதானிக்கமுடியும். எனவே, மேலும் முழஙகாவிலில் இருந்து பல்லவராயன்கட்டு என முன்னோக்கி இராணுவம் நகருகின்றபோது கைப்பற்றப்படுகின்ற இராணுவ ஒடுங்கல் வலயம் மேலும் நீண்டுசெல்லப்போகின்றது. அவ்வாறு செல்லுகின்றபோது மேற்குக் கடற்பரப்பில் புலிகளின் ஆதிக்கம் இழந்துபோகலாம. ஆனால், புலிகளின் காத்திருப்பு இதற்காகத்தான் என அமையுமானால் ஒடுங்கல் வலயம் இராணுவ வரலாற்றில் கறைபடிந்த வரலாற்றுப் பதிவாகிவிடும்.

இதுவரை காலமும் ஏ32 வீதியில் இராணுவம் நகருகின்றபோது கடற்கரை வீதிக்கு மிக அண்மித்ததாகவும் சமாந்தரமாகவும் இருந்துவந்த புவியியல் அமைப்பு நாச்சிக்குடாச்சந்திக்கப்பால் வீதியிலிருந்து சற்று விலகி வீதிக்கும் கடலுக்குமான தூரம் அதிகரித்துச் சென்று பூநகரிக்கு அண்மையாக மீண்டும் ஒடுங்குவதனால் வீதிக்கு மேற்காக இருக்கின்ற முனை போன்ற விரிந்த பிரதேசத்தை கைப்பற்றுவதற்கு பெரிய ஆளணிவளத்தேவை அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது. எனவே, பூநகரி நோக்கிய வெற்றிக்கு இன்னும் இருபத்தியொரு மைல் தூரத்தில் அமைந்துள்ள பூநகரி வாடியடியை (ஒல்லாந்தர் கோட்டையுள்ள இடம்) சென்றடைய வேண்டும். அவ்விடத்தை அடைந்துவிட்டால் சங்குப்பிட்டி இறங்குதுறைக்கு மேலும் செல்லவேண்டிய ஆறு மைல் தூரததை சண்டையின்றி உல்லாச நடைப்பயணமாகச் சென்று கடல்நீரேரியைத் தாண்டி யாழ்ப்பாணத்துக்கான தொடர்பை ஏற்படுத்துவதன் மூலம் மீண்டும் ஒரு 'யாப்பாணப்பட்டுனா'வை சிங்களதேசம் கொண்டாடும். இது நடப்பதற்கு புலிகள் என்ன தூங்கிக்கொண்டா இருப்பார்கள்?

அது என்ன யாப்பாணப்பட்டுனா? கி.பி.13 ஆம் நூற்றாண்டில் கோட்டை மன்னன் ஆறாம் பராக்கிரமபாகு யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கு கோட்டையிலிருந்து (கொழும்பு). புத்தளம், மன்னார் ஊடாக தற்போதைய ஏ32 வீதிவழியே பூநகரியை அடைந்து அங்கிருந்து தனங்கிழப்பு, அரியாலை ஆகியவற்றை அடைந்து அன்றைய தமிழர் தலைநகரான நல்லூரை தாக்கி வெற்றி கொண்டான். நல்லூர் வீதியில் சிங்களச் சேனைகள் வெற்றிக்களிப்பில் வலம் வந்ததைப் பெருமையுடன் சிங்களப் புலவர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பையே 'யாப்பாணப்பட்டுனா' என சிங்கள தேசம் இன்றும் பெருமையுடன் குறிப்பிடுகிறது. மேலும் இதிலுள்ள சோகம் என்னவெனில், நல்லூர் மீதான படையெடுப்பின் படைத்தளபதி யாரெனில் செண்பகப்பெருமாள் என்றழைக்கப்படுகின்ற பணிக்கர் குலத்தைச் சேர்ந்த தமிழர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் பின்னாளில் இவர் மனம் திருந்தி முத்திரைச் சந்தியில் நல்லூர்க் கந்தன் கோயிலைக் கட்டினார் என்பதும் இரண்டு வருடங்களுக்குள்ளேயே சிங்களப் படைகளின் நீண்டதூர படைப் பரம்பலும் அதனால் ஏற்பட்ட சிம்மாசனப் போட்டியும் கோட்டை இராச்சியத்தின் வீழ்ச்சிக்கு வழிவகுத்ததோடு திரும்பிக் கோட்டைக்கு செம்பகப்பெருமாள் ஆறாம் புவனேபாகு என்ற பெயருடன் கோட்டை அரசனாக முடிசூடி சிம்மாசனத்தில் குந்தியமையும் பெட்டிச் செய்தியாயிற்று.

எது எப்படியாயினும் மீண்டுமொரு யாப்பாணப்பட்டுனாவை சிங்களதேசம் கொண்டாட தமிழர் தேசம் அனுமதிக்குமா என்பதே தற்போது அனைவரிடமும் உள்ள கேள்வியாகும். தற்போதைய நிலையில் பெரும்பாலானோர் கருத்து என்னவெனில், யாழ்ப்பாணத்துக்கான தரைவழிப்பாதையை இராணுவம் திறந்து விடும் என்பதை நம்புகின்றனர், காரணம், அரசின் பிரசாரத்தின் வெற்றியும் புலிகளின் பின்நகர்வும் ஆகும். மேலும் புலம்பெயர் தமிழர்களின் மனங்கள் சலிப்படைந்து தோல்வியடைந்து விடுவோமா என்கின்ற ஏக்கமும் சோகமும் நிறைந்த ஓர் மனநிலையில் அவர்கள் இருப்பதனை அவதானிக்க முடிகிறது. போர் என்றால் எப்போதுமே எமக்குத்தான் வெற்றியா என்ன... சண்டைகளில் வெற்றியும் தோல்வியும் வருவது இயற்கையே! தோல்விகளைக் கண்டு தமிழர்கள் துவண்டு போனது வரலாற்றில் எங்கேனும் நாம் கண்டதில் லையே! தோல்விக்குப் பின்னர் மீண்டும் வீறுகொண்டெழுந்து வரலாற்றுப் பக்கங் களை நிரப்பியவர்கள் அல்லவா தமிழர்கள். பிறகு எதற்கு தற்போது சோகத்தால் சோர வேண்டும்? தோல்வி என்று ஏன் துவண்டு போக வேண்டும்? இழப்புக்கள் எமக்குப் புதியவை அல்லவே.

**வன்னியன்**

விடாமுயற்சிக்கு உலக வரலாற்றில் உதாரணமானவர்கள் தமிழர்கள் அல்லவா! ஏன் இதை நாம் மறக்கவேண்டும். இதனையே 2001 இல் ஏற்பட்ட சமாதான உடன்படிக்கையின் பின்னர் வன்னிக்கு விஜயம் செய்த நோர்வேயின் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம்; ''இரண்டாம் உலகப் போரின் அழிவிலிருந்து மீண்டெழுவதற்கு ஐரோப்பாவுக்கு நீண்டகாலம் தேவைப்பட்டது. ஆனால், குறுகிய காலத்தினுள் வன்னியில் ஏற்பட்ட அழிவில் இருந்து மீண்டெழுவதற்கு மக்கள் மேற்கொண்ட மிகவேகமான கட்டுமான வேலைத்திட்டங்கள் எனக்கு ஆச்சரியத்தை ஏறபடுத்தும் அதே நேரம், உலகில் வேறு எந்தவொரு இனத்திலும் இல்லாத ஒரு விடா முயற்சியையும் தன்னம்பிக்கையையும் நான் தமிழர்களிடம் காண்கிறேன். இதனையிட்டு பெருமையடைகிறேன்.'' என்றும் குறிப்பிட்டிருந்தார். இதற்கு இன்னுமொரு உதாரணம் உங்களுக்கு வேண்டுமானால் சொல்கிறேன். ஐந்து பெரிய இராணுவ நடவடிக்கைகளுக்கு உள்ளாகி மண்மேடாக பார்ப்பவர்களின் மனதை உருக்கக் கூடியதாக அழிந்து போயிருந்த கிளிநொச்சி நகரத்தை இன்று போய்ப்பாருங்கள். போரின் வடுக்கள் தெரிகிறதா என்ன? தமிழர்கள் என்றும் உறுதியானவர்களே!

எனவே, வன்னியில் ஏற்பட்டிருக்கின்ற படைநடவடிக்கைகள் பற்றி உலகத் தமிழர்கள் சலிப்படையவோ, சோர்வடையவோ வேண்டியதில்லை. கடந்த காலப் படைநடவடிக்கைகளில் புலிகளுக்கு ஏற்பட்ட ஆளணி இழப்பு தற்போதைய இராணுவ நடவடிக்கையின் போது ஏற்படவில்லை. எது எப்படியிருப்பினும் தமிழீழ விடுதலைப் புலிகள் எந்தப் பெரிய இராணுவ நடவடிக்கைக்கும் எதிராக நினைத்த மாத்திரத்தில் களமுனையை தமக்குச் சாதகமாக மாற்றக்கூடிய ஆளணி ஆயுத பலத்துடனேயே இருக்கிறார்கள். இதற்கு வடபோர்முனை மற்றும் மணலாறு, பாலமோட்டை, வவுனிக்குளம் ஆகிய பகுதிகளில் போராளிகள் மேற்கொள்ளும் முறியடிப்புத் தாக்குதல்கள் தக்க சான்றாகும்.

மேலும் இராணுவம் கைப்பற்றிய பிரதேசங்களைச் சுற்றி புலிகள் இட்டிருக்கும் வியூகத்தை உற்று நோக்குகின்றபோது வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களின் மேற்குக் கரையோரங்களை தமது பிடிக்குள் இறுக்கமாக வைத்திருப்பதற்கு புலிகள் ஒரு தேள் வடிவ வியூகம் இட்டிருக்கிறார்கள் போல் தோன்றுகிறது. அது எப்படி எனில், வன்னியின் மையத்தில் கிழக்குப் புறத்தில் மேற்கு நோக்கிப் பார்த்தவாறு அமர்ந்திருக்கின்ற தேளின் இடப்புறக் கொடுக்கில் பாலமோட்டை, குஞ்சுக்குளம் பகுதிகள் அகப்பட்டிருக்கின்றன. மறுபுறத்தே தேளின் வலப்புறக் கொடுக்கில் வவுனிக்குளம், மல்லாவிப் பகுதிகள் அகப்பட்டிருக்கின்றன. இப்பகுதிகளுக்குள் நுழைவோருக்கு தேளின் கொடுக்கு கவ்வினால் எப்படியிருக்கும் என்பதை நான் சொல்லித்தான் உங்களுக்குப் புரியவைக்க வேண்டியதில்லை. மேலும் தேளின் வால்பகுதியில் இருக்கின்ற கொடூரமான ஊசி போன்ற முனை எந்த நேரமும் பின்பக்கம் நீண்டு தெற்காக உள்ள மணலாற்றுப்பக்கம் திரும்பி குத்தவும் வாய்ப்பாக இருக்கும். அதேபோல் முன்புறத்தே சடுதியாக தேளுக்கு மேலாக எழுந்து தேளின் முன்புறம் குத்தும். அப்போதுதான் அதன் வேதனை எப்படியிருக்கும் என்பதை பாலம்பிட்டி, பெரியமடு, விடத்தல்தீவு, சிறாட்டிகுளம் ஆகிய இடங்களிலிருந்து குத்து வாங்கிய பின்னர் துடிதுடிக்கப் போகின்ற சிங்களச்சேனையிடமே கேட்க வேண்டும். இதுவே ஒரு முக்கிய போர்க்களப் பிரதேசம் என்பதை வரும் நாட்களில் உணர முடியும்.

மேலும் வெள்ளாங்குளத்திலிருந்து பூநகரி நோக்கி நீண்டு செல்லப் போகின்ற இராணுவ ஒடுங்கல் வலயம் இன்னுமொரு வித்தியாசமான புலிகளின் இராணுவப் பொறியினுள் நுழைந்து கொண்டிருப்பதா கவே தோன்றுகிறது. தற்போது அந்தப் பொறியின் இழுவிசையின் அந்தத்தினை இராணுவம் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்றே சொல்லலாம். அத்தோடு புலிகளும் தமது பாச்சலுக்கான ஆயத்தங்களில் ஈடுபட்டிருப்பதாகவே வன்னித் தகவல்கள் சொல்கின்றன. இதற்கு கடந்த வார இறுதியில் விடத்தல் தீவுப்பகுதியில் அதாவது, இராணுவ வலயத்தினுள் புலிகளின் வேவு அணிகள் நுழைந்து தமது பணிகளில் ஈடுபட்ட வேளை எதிர்பாராத விதமாக இராணுவ அணியுடன் முட்டியதன் வெளிப்பாடாக ஏற்பட்ட சண்டையைக் குறிப்பிடலாம். எனவே, வன்னியில் ஏற்படவிருக்கும் கொடுமையான தேள் பாச்சலின் அகோரத்தை சிங்களப்படை உணரும் நாள் வெகுதூரமில்லை.

*

நன்றி: பதிவு

# மெதட் நடிப்புமுறை (Method Acting)

**கே.எஸ். சிவகுமாரன்**




மேல் நாட்டுத் திரைப்படங்களிலும், மேடைகளிலும் இடம்பெற்றுவரும் ஒரு ரக நடிப்பு முறையை மெதட் நடிப்புமுறை (Method Acting) என்பார்கள். பெரும்பாலும், பயிற்சிக் கல்லூரி களிலிருந்து வெளியேறிய்வர்கள் இதனைப் பிரயோகிப்பர். இந்தியப் படங்களில் நஸிருதீன்ஷா, ஷப்னா அஸிம் போன்றவர்கள், தமிழில் ஓரிரு படங்களில் கமல்ஹாஸன் ஆகியோர் இந்த நடிப்புமுறையைத் தழுவியுள்ளனர்.

ஹொலிவுட் நடிகர்களில் குறிப்பிடக்கூடிய 'மெதட்' நடிகர்கள் எனப் பின்வருபவர்களின் நடிப்பு ஞாபகத்திற்கு வருகிறது.

E lia kazan (இவர் ஓர் அருமையான நெறியாளரும் கூட), Le Jay Cob, Marlon Brando, James Dean, Shelly winters, Maureen Stapleton, Rod Steiger, Paul Newman, Joan Widward, Ailan Bevstein, Dustin Hoffman, Al Pachino, Robert de Niro, Steve Mc queen மற்றும் இப்பொழுது பிரபல்யமான நடிகர்கள் அனைவருமே 'மெதட்' நடிக, நடிகையரே.

அமெரிக்க 'மெதட்'நடிகர்களைப் பொறுத்தமட்டிலே இந்த முறையை அறிமுகப்படுத்தியவர் Lee Strasburg.

இவர் God father -II இல் நடித்திருக்கிறார். Border Walk, And Justice for all, going in style ஆகியன இவர் நடித்த படங்களுள் சில.

Lee Strasburg 1931 இலே Group Theatre என்ற பெயரிலே ஒரு நிறுவனத்தை ஆரம்பித்து பத்து வருடங்கள் நடத்தினார். இவருடைய ஞானக்குருக்கள் நாடகமேதைகளான Stanislavski, Meyerhold, Reinhart போன்றவர்களாவர்.

'மெதட்' முறையிலே கருத்து வேறுபாடுடைய இருவர் இருந்து வந்தனர். Lee Strasburg ஒரு பாணி என்றால் Stella Adler மற்றொரு பாணி.

'மெதட்' நடிப்புமுறை பற்றி நாடகமேதை Stanislavsky என்ன கூறுகிறார்?

''ஒரு காட்சியில் உண்மையாகவே ஒரு நடிகர் நடிக்கவேண்டுமாயின், அவர் அக்காட்சியை மூன்று அடிப்படைக் கூறுகளாகக் பகுத்துப் பார்த்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு கூறையும் Beat என்போம். ஒவ்வொரு Beatக்கும் ஒரு நோக்கம் இருத்தல் வேண்டும். இந்த நோக்கங்களை எப்பொழுதும் மனதில் இருத்திக்கொண்டால், அதுவே யதார்த்த பூர்வமான நடிப்புக்குத் திறவுகோலாகும். நடிகர்கள் திறம்பட நடிக்கும்பொழுது பிரக்ஞை நிலையில் இல்லாமல், ஆழமாக அவர்களிடம் புதைந்திருக்கும் ஆற்றலின் திரட்சியே 'மெதட்' முறை நடிப்பாகும்''.

'மெதட்' முறையில் அவதானிக்கத்தக்க மற்றோர் அம்சம் உணர்ச்சிக்கு அதிக கவனம் செலுத்தாமல் அவ்வுணர்ச்சியுடன் தொடர்பு உள்ள உளவியல் விவரங்களை நடிகன் தேர்ந்தெடுக்கிறான். அவ்விவரங்களை அவன் தேர்ந்தெடுத்ததும் அவற்றை நினைவுபடுத்திக் கோவைப்படுத்தித் தனது நடிப்பில் கொண்டு வருகிறான். தனது சொந்த அனுபவங்களை அப்பாத்திரத்தில் ஏற்றி அவன் நடிக்கிறான். ✵

## மீண்டும் வான்...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சென்றதில் பத்து வரையான படையினர் பலியாகியிருக்கின்றனர் முப்பத்தியைந்து படையினர் வரை காயமடைந்திருக்கின்றனர்.

ஆனால், அரசுத்தரப்பில் விமானப்படை பயன்படுத்தும் விமானங்களோ, குண்டுவீச்சுக்கென்றே தயாரிக்கப்பட்ட மிகையொலி விமானங்கள். துல்லியமாக இலக்குகளைத் தாக்கும் நவீன கருவிகள், வசதிகள் கொண்டவை. அவற்றின் மூலம் தினசரி பல டசின் பறப்புகளை மேற்கொண்டு தமிழர் தாயகத்தில் நூற்றுக்கணக்கில் குண்டு வீசும் விமானப்படை, அதன் மூலம் சாதிப்பவற்றை எடைபோடுபவர்களுக்கு, குறைந்த வசதிகளை வைத்துக்கொண்டு உயரிய பெறுபேறுகளை எட்ட முயலும் புலிகளின் திறமையைப் புரிந்துகொள்ளமுடியும்.

இதேவேளை -

மிகையொலி -

'சுப்பசொனிக்' - ரக ஜெட் குண்டு வீச்சு விமானங்களை வைத்திருக்கும் விமானப்படை, புலிகளின் விமானம் திருகோணமலை வரை வந்து தாக்குதல் நடத்துவதை அறிந்தும் ஏன் அதைக் கலைத்துச் சென்று சுட்டுவீழ்த்தும் நடவடிக்கையை சரிவர எடுக்கவில்லை என்ற கேள்வி இங்கு எழுவதும் நியாயமானதே.

திருகோணமலைத் துறைமுகத்தின் மீது புலிகளின் விமானம் குண்டு வீசியமையை அறிந்ததும் அந்தக் கையோடே கொழும்பில் - கட்டுநாயக்காவில் - இருந்து 'கிபிர்' போன்ற சுப்பசொனிக் ஜெட் குண்டுவீச்சு விமானங்கள் புறப்பட்டாலும், புலிகளின் விமானம் திரும்பி முல்லைத்தீவை அடைவதற்கு முன்னரே, அந்த ஜெட் விமானங்கள் முல்லைத்தீவைக் கடந்து விட முடியும். அப்படியிருந்தும் புலிகளின் விமானத்தை விமானப்படை குண்டுவீச்சு விமானங்களால் மடக்கமுடியாமல் போனமை ஏன் என்று ஒரு கேள்வி எழுகிறது.

ஆகக்கூடியது மணிக்கு 150 முதல் 200 கடல்மைல் வேகத்தில் பறக்கும் இலகுரக விமானங்களே புலிகளிடம் உள்ளன. ஆனால், ஒலியின் வேகத்தை விட அதிக வேகத்தில் - அதாவது புலிகளின் இலகு ரக விமானங்களின் வேகத்தைப் போல குறைந்த பட்சம் பத்துமடங்கு வேகத்தில் செல்லத்தக்கவை மிகையொலி விமானங்கள்.

இவ்வளவு வேகமாகச் செல்லும் குண்டுவீச்சு விமானங்களால், இவ்வளவு குறைந்த வேகத்தில் செல்லும் விமானத்தைத் துல்லியமாக இலக்கு வைப்பது என்பது கஷ்டமான விடயம்.

அடுத்தது - நிலத்தில் அசையும் அல்லது நிலையாக இருக்கும் இலக்குகளைத் தாக்கி அழிக்கும் வசதிகளையும் கருவிகளையுமே இலங்கை விமானப்படை விமானங்கள் இதுவரை கொண்டிருந்தன.

அதாவது - வானத்திலிருந்து தரைக்கான தாக்குதல் வசதிகளே அவற்றில் இருந்தன.

வானத்திலிருந்து வானத்துக்குத் தாக்குதல் இலக்குகளை - அதுவும் குறைந்த வேகத்தில் நகரும் விமானம் ஒன்றை - குறிவைப்பதற்கான வசதிகளை இலங்கை விமானப்படை விமானங்கள் விருத்தி செய்து கொண்டுவிட்டனவா என்பது இன்னும் தெளிவாகவில்லை.

இதுவும் புலிகளின் விமானத்தை இலங்கை விமானப்படை திரும்பவும் கோட்டை விட்டதற்கான முக்கிய காரணங்களில் ஒன்றாக இருக்கக்கூடும். ✵




நல்லூர் திருவிழாவை முன்னிட்டு
கோயில் வளாகத்திலுள்ள
பூபாலசிங்கம் புத்தகசாலை
விற்பனைக்கூடத்திற்கு
விஜயம் செய்யுங்கள்

எமது புதிய வெளியீடுகள்
படித்து பயன்பெறுங்கள்..



ஜீனியஸ்
மாணவர்களுக்கான அறிவுக்களஞ்சியம்
மாதம் இருமுறை



இசை உலகம்
இசை, இசைக்கலைஞர்கள் பற்றிய தகவல்களுடன்
மாதம் இருமுறை



சுகவாழ்வு
ஆரோக்கிய வாழ்வுக்குரிய தகவல்களுடன்
மாதம் ஒருமுறை



சோதிடகேசரி
ராசிபலன், ஜோதிட கட்டுரைகளுடன்
மாதம் ஒருமுறை

கிடைக்குமிடங்கள்

பூபாலசிங்கம் புத்தகசாலை, 04, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். Tel: 021 2226693

வீரகேசரி கிளைக்காரியாலயம், 303, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Tel: 021 2222730

Express Newspapers (Ceylon) Limited P.O. Box 160. Colombo

# சிறு விளம்பரங்கள்

## திருமண சேவை

சுலபமான வாழ்கைத்துணைத் தெரிவுக்கு சுயதெரிவுமுறையே! சுயதெரிவு முறை பற்றிய வரன்முறையைத் தெரிந்திடத் திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் சுயதெரிவு முறைமுன்னோடி சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர் மாயெழுவேல்-அமுதனிடம் தொடர்புகொள்ளுக! தொலைபேசி: 2360488, 2360694, 4873929.

---

இன, மத வித்தியாசமின்றி விதவைகள், விவாக ரத்துப் பெற்றவர்கள், இரண்டாம் தாரம், உள்நாடு, வெளிநாடு வயது வித்தியாசம் இன்றி மணமக்களை தெரிவு செய்ய நாடுங்கள். Raheem Marriage, No. 48/5, Walikadamulla Road, Orchid Place, Mabola - Wattala. 071 5967187, 011 499 8162. E mail: ahm nilufarn@gmail.com

---

உள்நாடு,வெளிநாடு மணமக்களை பெற்றுக்கொள்ளவும். திருமண பொருத்தம் பார்க்கவும். Pramei Astrologer 23B, Vishnu Temple Road, Colombo 15.

## வீடு விற்பனைக்கு

வத்தளை. கெரவலப்பிட்டிய றோட்டில் (11.75 Perch) காணியுடன் சகல வசதிகளையுமுடைய வீடு விற்பனைக்கு உண்டு. விலை (9.3 Million) அவசியமில்லை. தொலைபேசி இலக்கம் 0785 462062, 2981607.

---

நீர்கொழும்பு, தாகோன்ன வீதியில் 38 பேர்ச்சஸ் அங்க சம்பூரணமான புதிய வீடு விற்பனைக்கு. M.முக்தார் Tel: 078 5225080.M.நிசான்: 077 3416128.

---

மாளிகாவத்தை தொடர்மாடி வீட்டுத் தொகுதியில் வீடு ஒன்று விற்பனைக்கு உள்ளது. இரவு 8 மணிக்குப் பின்னர் தொடர்பு கொள்ளவும் 2712576, 077 3088428.

---

நாவலப்பிட்டி, நகர எல்லையில் Handungala Watta, இயற்கை சூழலில் 40 Perches, 5 Bedrooms, 2 Attached Bathroom.மாடி வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: 0715186130.060 2544248.

---

வத்தளை தேவாலயத்திற்கு அருகில் 32 பேர்ச்சஸ் காணி விற்பனைக்குண்டு. வியாபாரத்திற்கு அல்லது குடியிருப்பதற்கு உகந்தது. 1 பேர்ச்சஸ 125,000/- மற்றும் ஹுனுப்பிட்டிய, ஜயாந்திமஹால் வீதியில் நவீன இரண்டு மாடி வீடு விற்பனைக்குண்டு. விலை 85 இலட்சம். ஹுனுப்பிட்டிய அபாட்மண்டில் வீடொன்று விற்பனைக்குண்டு. விலை 23 இலட்சம். தொடர்பு: 011 4990832, 077 4336082. 0776953615.

## தேவை

சர்வதேச பயிற்சிகளுடன் பல வேலை வாய்ப்புக்கள் "மட்டக்களப்பு" Supervisors Training Managers பயிற்சி வழங்கி இணைத்துக் கொள்ளப்படும். பயிற்சிக் காலத்தில் ரூ. 15000 - 25000 இடையில் பயிற்சிக்கு பின்னர் ரூ50000 அதிக சம்பளம் தொடர்பு : 077 6795-940, 065 4904455.

---

தனியார் முதியோர் பராமரிப்பு இல்லத்திற்கு சமையல் வேலைகள் மற்றும் இதரவேலைகளை தங்கியிருந்து செய்வதற்கு பொறுப்புக்கள் அற்ற ஆண்/பெண் இருபாலாரும் தேவை. Kind Care Elders Home, 17/1, George Mawatha, Mabola, Wattala. Tel: 071 4819033,29442554.

---

கொழும்பு, புறக்கோட்டையில் அமைந்துள்ள மொத்த வியாபார ஸ்தாபனத்துக்கு பெண் காசாளர் ஒருவர் தேவை. (மலையகத்தைச் சேர்ந்தவர்கள் விரும்பப்படுவர்) சாப்பாட்டுடன் சம்பளம் வழங்கப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்: Amal grams Stores, No. 218, Gaswork Street, Colombo 11. Tel: 2321249.

---

கொழும்பில் சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டு வேலைக்கு ஆள் தேவை. Tel: 077 972114.

---

வத்தளை, ஹேகித்தயிலுள்ள Plastic Factoryக்கு ( Hants இற்கு அருகாமையில்) ஞாயிற்றுக்கிழமைகளில் வேலை செய்வதற்கு பெண்கள் தேவை. தொடர்பு : 0777 895023

---

ஸ்கூல் பேக் தைப்பதற்கு வேலைக்கு ஆள் தேவை. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி. 231/9, கிராண்ட்பாஸ் றோட், கொழும்பு 14.

---

ஸ்வீட் ஹவுஸில் வேலை செய்வதற்கு வேலையாட்கள் தேவை.ஆண்கள் மட்டும். தங்குமிட வசதியும் சாப்பாடும் நல்ல சம்பளமும் தரப்படும். வரும்பொழுது அடையாள அட்டை (Identity Card) உடன் நேரில் வரவும் அல்லது தபாலில் விண்ணப்பிக்கவும். முகவரி: Gunasiri Sweets. No. 487, B.Eriyawatiya Kiribathgoda, Kelaniya. Tel: 2939160,2974700.

---

தேவை. விற்பனை பெண் பிள்ளைகள், பையன்கள் மற்றும் காசாளர்கள் ஒரு T/Away மற்றும் ரெஸ்டொரண்டிற்கு கொழும்பு - கோட்டையில். சம்பளம் 7500/- உணவு வசதிகளோடு. சனிக்கிழமை அரை நாள்.ஞாயிறு மற்றும் போயா நாள் விடுமுறை. வேலை நேரம் காலை 6.30 முதல் மாலை 3.30 வரை மாத்திரம். பிக்அப்பில் ஒல்டிங்ஸ், 29.பிரிஸ்டல் வீதி.-கொழும்பு 01. (கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு எதிரான பர்தை )

---

வியாபார ஸ்தாபன வேலை வாய்ப்பு புடவை கடை, பென்சி போன்ற கடைகளுக்கு அனுபவமுள்ள,அனுபமற்ற வேலையாட்கள் தேவை. மற்றும் ( K.P.கணக்காளராக வேலை செய்யக்கூடிய ஒருவர் தேவை) மலையகத்தவர்கள் விரும்பத்தக்கது. சாப்பாடு,தங்குமிட வசதி உண்டு. சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும். உரிய மூல சான்றிதழ்களுடன் நேரில் வரவும். இல. 332, டைமட்ஸ் புரோட்வே. கிராண்ட்பாஸ், கொழும்பு - 14. புறக்கோட்டையில் இருந்து இல. 152 பஸ் எடுத்து கொஸ்கஸ் சந்தியில் வந்து இறங்கவும். Tel:244-8540

---

கணக்கியல், முகாமைத்துவம் மற்றும் மும்மொழிகளில் தேர்ச்சியுடையவர் தகுதியான தொழிலை எதிர்பார்க்கின்றார் தொடர்பு: 2437630 (After 1p.m )

---

கொழும்பு 4 இல் அமைந்துள்ள விடுதிக்கு சகலவிதமான உணவு வகைகள் சமைக்க தெரிந்த அனுபவம் வாய்ந்த சமையல்காரர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு கிழமை நாட்களில் சமுகமளிக்கவும். லக்மால், இல. 17B.மிலாகிரிய அவனியூ,-கொழும்பு 04.

---

புடவை வியாபாரத்தில் நன்கு அனுபவமுள்ள சேல்ஸ்மேன்(Sales man) உடனடியாகத் தேவை. உயர்ந்த சம்பளம் மற்றும் சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படும். நேரில் வரவும். Saree Centre, 41, Ambagamuwa Road, Gampola. Tel: 0777 813 114.

---

அச்சகத்தில் வேலை செய்த அனுபவமுள்ளவர் தமிழ்,சிங்களம்,ஆங்கிலம் ஆகிய மொழிகளில் Type - setting செய்யக்கூடியவர் தேவை. Designing தெரிந்திருந்தால் முதலிடம் வழங்கப்படும். ஸ்கிரீன் பிரிண்டிங் செய்ய க்கூடியவரும் தேவை. தொடர்பு: 51/45. Dias Place, Colombo 12. Tel: 071 4296281.

---

பெண் இன்வொயிஸ் லிகிதர்கள்,விற்பனை பிரதிநிதிகள் மற்றும் டிலிவரி பையன்கள் தேவை.நேர்முக பரீட்சைக்கு நேரடியாக வரவும். மூல சான்றிதழ்க ளோடு ஸ்பீட் பார்மா டிஸ்ரிபியூட்டர்ஸ், No.28, Piyarathanarama Place, Off allan Avenue, Dehiwela. தொலைபேசி: 2739899.

---

பிரபலமான தொழிற்சாலைக்கு வேலையாட்கள் அவசியம் கவர்ச்சிகரமான சம்பளம் தரப்படும். இருபாலாரும் விரும்பத்தக்கது. சம்பளம் 28000 - 36000 வரை. வீட்டுப் பணிப்பெண்களும் அவசியம். திறமைக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும். மேலதிக விபரங்களுக்கு: தினேஷ் : 077 2589141, 0114 886718.

---

இலங்கையில் முன்னணி தொழில்சார் மின்சார உபகரண விற்பனை நிறுவனம் ஒன்றிற்கு முதலீட்டாளர்கள் தேவை தொடர்பு: 0714843432.

## வாடகை

வத்தளை, அல்விஸ் டவுண் பிரதான வீதியில் 5 அறைகளைக் கொண்ட இரட்டை மாடி வீடு வாடகைக்கு உண்டு. மாத வாடகை ரூபா 70,000.(பேசித் தீர்க்கலாம்) லைசியம் சர்வதே[illegible]சாலைக்கு அருகில். 077 4315293

---

மட்டக்களப்பு, சின்ன உப்போடையில் சகல வசதிகளுடன் சிறிய வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு தொலைபேசி: 065 2226780.

---

தெமட்டகொடை பேஸ்லைனுக்கு 150m தொலைவில் 2 மாடி உள்ள வீட்டில் மேல் தட்டில் 3 அறைகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. ஒரு வருட முற்பணம் மாதவாடகை 20,000/- Tel: 078 6455225, 078 5517605.

---

தெமட்டகொட வீதி, மருதானை ஸாஹிரா கல்லூரிக்கு அருகில் புத்தம் புதிய அப்பார்ட்மன்ட்ஸ்கள் வாடகைக்கு. 1900 சதுர அடி. 3 படுக்கை அறைகள். 3 குளியல் அறைகள்,கிரைனட்,டைல் முழுமையாக பதிக்கப்பட்டது.முழுமையாக நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டது. சுடுநீர்,ஏ.சி, வாகன த்தரிப்பிட வசதிகள். தொடர்புகளுக்கு: 077 266678. 072 6341894, 0714 242903.

---

65/1, விஜய வீதி, கல்கிசையில் வீடு வாடகைக்குண்டு. 2 அறைகள், சமைய லறை, வரவேற்பறை,மலசல கூடம். ஒரு வருட முற்பணம் தேவை. தொடர்புக ளுக்கு: 011 2532349,011 2738814.

---

சகல விதமான தேவைகளுக்கும் உபயோகிப்பதற்கு கட்டடம் வாடகைக்கு உண்டு. 900 பரப்பளவு. வாகனத் தரிப்பிட வசதியுடன் கூடியது. தொடர்பு இல. 305, ஜெயந்த வீரசேகர மாவத்த, கொழும்பு 10. Tel: 0714 242903.

---

மாளிகாவத்தை தொடர்மாடித் தொகுதியில் இரண்டாம் மாடியில் இரண்டு படுக்கையறை, ஹோல், மலசலகூடத்துடனான தொலைபேசி வசதிகளுடன் (சகல வசதிகளுடனும்) வீடு வாடகைக்கு உண்டு. தொடர்புக்கு : 011 2454702.

---

ஒரு படுக்கை அறை, குசினி, பாத்றூம் மற்றும் கார் நிறுத்தும் இடம் உள்ள அனேக்ஸ் வாடகைக்கு உண்டு. Tel: 011 5645014.

---

மாபோல,வத்தளையில் 8 1/2 P காணியுடனான இருமாடி புது வீடு விற்பனைக்குண்டு.விலை ரூபா 65 இலட்சம். தரகர் வேண்டாம். தொடர்பு கொள்ள: 071 2343416.

---

கிருலப்பனை இல. 54/6,ஸ்ரீ சித்தார்த்தா வீதியில் அமைதியான சூழலில் 7 பேர்ச்சஸ் வீடு கராஜுடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு : 2515445.

---

வீடு வாடகைக்கு எல்லா வசதிகளுடன் கல்கிசை KFC இற்கு எதிராக ரூபா 10,000/- மாதாந்தம். இல.6 ஸ்ரீ குணரத்ன மாவத்தை,கல்கிசை. தொலை பேசி: 5617853.

---

மாளிகாவத்தை வீட்டுக் கட்டத் தொகுதியில் சகல வசதிகளுடன் மனோரம்யமான இல்லம். 3 படுக்கையறைகள், வரவேற்பாளர்கள், வரவேற்பு மண்டபம் மற்றும் உணவு அறை, சுடுநீர் வசதியுடனான குளியலறை, இரு புறமும் பாதுகாப்பு கிரில் வளையம் பொருத்தப்பட்டுள்ள பெல்கனி, முற்று முழுதாக நில ஓடுகள் பதிக்கப்பட்டுள்ளது. கேபிள் டி.வி. இணைப்பு மற்றும் வீட்டின் இரு புறமும் வாகன தரிப்பிட வசதி மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள். 077 9907782. 0115 720779.

---

கல்கிசையில் Mount Laviniya Hotel, St.Thomas College இற்கு மிக அண்மையில் காலி வீதியிலிருந்து 100mக்குள் அமைதியான சிறந்த சூழலில் ஆறு வீடுகளை மட்டும் கொண்ட தொடர்மனையில் முறையே 2 Bathrooms 2 Bedrooms வீடு விற்பனைக் குண்டு. வீட்டுக்கடன் வசதியும் செய்து கொடுக்கப்படும். ஒரு மாதத்தில் குடிபுகலாம். மேலதிக விபரங்களுக்கு : 0777 895225.

## கல்வி

அரச கரும மொழிகள் திணைக்களத்தில் பயிற்சி பெற்ற பல வருடம் அனுபவம் வாய்ந்த ஆசிரியரால் சிங்களம், ஆங்கிலம் பாடசாலை மாணவர்கட்கும், தொழில் புரிபவர்கட்கும் அடிப்படையிலிருந்து தனியாகவோ குழுவாகவோ அல்லது வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும். மும் மொழிகளிலும் மொழி பெயர்ப்புக்கள் மேற்கொள்ளப்படும். பல வருட கால அனுபவம் வாய்ந்த பயிற்சி பெற்ற ஆசிரியையினால் கணித வகுப்புகள் ( தமிழ், ஆங்கிலம் மொழிகளில்) தரம் 6 - 11 வரை தனியாகவோ குழுவாகவோ வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும். அத்துடன் கல்வி நிறுவனங்கட்கு வந்தும் கற்பிக்கப்படும். தெஹிவளையில் விபரங்கட்கு. Subash - 0777 593798,2739498.

---

G.C.E. O/L மாணவர்களுக்கான கணித பாட அலகு மீட்டல் பயிற்சிகளும் கடந்த கால மாதிரி வினாத்தாள்களும் துரித மீட்டல் வினாவிடைகளும் பிரத்தியேகமாக (Personal) கற்றுத் தரப்படும். தொடர்புக்கு : 078 6561855.

---

பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியரால் உயிரியல் பாடம் கற்பிக்கப்படும். தனியாகவோ,கூட்டாகவோ வகுப்புகள் எடுக்கப்படும். குறிப்பாக வெள்ளவத்தை, நீர்கொழும்பு பகுதிகளில் விரும்பத்தக்கது. மீட்டல் வகுப்புகள்,பயிற்சி வகுப்புகளும் உள்ளடக்கப்படும். தொடர்புக்கு: 071 5634438.

---

A/L Physics, Chemistry, Grade 8 -11 வரை Maths வகுப்புகள் தனியாகவோ,குழுவாகவும் வீடுகளுக்கு வந்தும், திறமையான ஆசிரியர்களால் கற்பிக்கப்படும்,தொடர்புகளுக்கு:V.P. Keshan, 071 5442627, 071 9085592.

---

க.பொ.த. ( உ/த) மாணவர்களுக்குரிய Accounting, Economics மற்றும் Business Studies ஆகிய பாடங்கள் Home Visiting மூலம் கற்பிக்கப்படுகின்றன. பிரத்தியேக ரீதியான அல்லது குழு ரீதியான வகுப்புகள் ஒழுங்கு செய்து கொள்ள முடியும். 077 1547320.

---

யாழ். இந்துக்கல்லூரியில் முன்பு கற்பித்தவரும், தற்பொழுது கொழும்பில் கற்பிப்பவருமாகிய பௌதீகவியல் ஆசிரியரினால் G.C.E. A/L, 2009,2010 Batchக்கு Physics உம் Grade 7 - 10க்கு Mathematics (Tamil / English) இல் தனி/குழுவாக வீடு வந்து கற்பிக்கப்படும். தொடர்பு : 077 5342191.011 2362359.

## சேவை

Canada அல்லது UK இல் குடியேற விரும்புகிறீர்களா? எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். நிபுணத்துவமிக்கவர்களின் நம்பிக்கைமிக்க சேவை Rf General & Sports Placement (Pvt)Ltd. No.46 1/1, Castle Street, Colombo 08. Tel. 011 4710686.Email:rfasialimited@yahoo.com

---

கௌரவமான - பாதுகாப்பான- நம்பிக்கையான இடத்தில் 24 மணிநேர தாதியர் வைத்திய பராமரிப்புடன் முதியோர்கள், நோயாளர்களுக்கான தங்குமிட வசதி சகல வசதிகளுடன் பம்பலப்பிட்டியில் உண்டு. தேவைப்படின் தொடர்பு: 072 6346443.

---

யோகாசனம் பயிற்சி வகுப்பு ஆரம்பம். அனுபவசாலியால் கொட்டாஞ்சேனை, தெஹிவளை, வெள்ளவத்தை ஆகிய இடங் களில் வாரத்தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் பயிற்சி வகுப்பு நடை பெறும். உங்கள் வசதிக்கேற்ப பயிற்சியினை மேற்கொள்ளலாம். தொடர்புகளுக்கு: 077 9434837 S.தேவன்.

---

தட்டச்சு சேவை : தட்டச்சுத் துறையில் ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழி களிலும் அனுபவம் கொண்ட தட்டெழுத் தாளரால் கணினி மூலமான தட்டச்சு வேலைகள் நேர்த்தியான முறையில் உரிய நேரத்திற்கு செய்துதரப்படும். தொடர்புக்கு : 4854771 2809185.

---

சகல விதமான உணவு வகைகளையும் குறைந்த விலையில் தரமான முறையில் உங்கள் இல்லத்திற்கு,திருமண மண்டபத்திற்கு கொண்டு வந்து தரப்படும் 0777 777735.

---

ஆடைகள் தைக்கும் சேவை- சாரி ஜக்கெட், சல்வார் பாடசாலை சீருடைகள் வீடுகளுக்கு வந்து அளவுகள் எடுக்கப்படும். மொறட்டுவ முதல் கொழும்பு 03. 011 4934440 பிரியந்தி.

---

உங்கள் வைபவங்களுக்கு ஏற்ற வகையில் நீங்கள் விரும்பிய கறிகளுடன் (சைவ, அசைவ) வீட்டுச் சமையலாக சமைத்துக்கொடுக்கப்படும். அத்துடன் சிற்றுண்டி வகைகளும் செய்து கொடுக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு: 011 4986752.

---

அதி நவீன வசதிகளுடன் தனிப்பட்ட அறைகளுடன் TP தனியான முதியோர் பராமரிப்பு இல்லம் . வயோதிபர் ஆண் / பெண் இருபாலாருக்கும் ஏற்ற அமைதியான சூழலில் உணவு, தங்கு மிடம், மருத்துவம் மற்றும் எல்லாவிதமான இதர வசதிகளுடன் கொழும்புக்கு அண்மையில் வத்தளையில் அமைந்துள்ளது. கட்டணம் மற்றும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள : Kind Care Elder's Home, 17/1, Gorege Mawatha , Mabola, Wattale. Mob : 071 4819033. Tel 2942554.

## வைத்திய ஆலோசனை

சித்த ஆயுர்வேத பயிற்சி நெறிகள் ஆரம்பமாகியுள்ளன. இதில் சேர விரும்புவோர் உடனடியாக தொடர்பு கொள்ளவும். வைத்திய நிபுணரால் நடத்தப்படுகின்றது. Dr.S. Indiraniee Seewali Road, Mount-lavinia. Tel : 060 2172699.

---

மஸாஜ் தெரபியும் ஆலோசனையும் சிறப்பு பயிற்சி பெற்ற ஆயுர்வேத தெரபிஸ்டினால் வழங்கப்படும் முற்பதிவுகள் : 071 6545766. 072 5990399.

## பழுதுபார்த்தல்

Computer, Monitor, Printer Repairs Service Maintence & Upgrading Net2Phone, Network, software Installation ஆகியன தங்கள் இடத்திற்கு வந்து செய்து தரப்படும். தொடர்புகளுக்கு: 071 444-8855.

---

Computer பழுதுபார்த்தல், Software Installation, Computer Assembling, Internet and Email Configuration முதலியன மிகவும் குறைந்த கட்டணத்தில் வீடு வந்து செய்து தரப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம்: 071 5788426, 077 6532107, 011 4944152.

---

சகல விதமான குளிர்சாதனப் பெட்டிகள் ( Fridge), A/C மற்றும் மின்சார உபகரணங்கள் அனைத்தும் ஒரு வருட கால உத்தரவாதத்துடன் உடனுக்குடன் வீடுகளுக்கு வந்து திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு : 077 1248204, 071 58-20429.

---

Computer Repairing, Software Installation, Trouble shooting, Virus healing, Networking, ADSL, Internet, Email by Professional Home Visited, DJ Computer Service. njhlu;G: 071 3542117.

---


Mobile Phone & TV, DVD, VCD, Deck, Radio மற்றும் சகலவிதமான மின் உபகரணங்கள் நவீன முறையில் கொழும்பில் அனைத்துப் பாகங்களிலும் வீட்டிற்கு வந்து உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும். Tel: 077 3405941,072 4706-780, Ayngaran Electronic, 28, shantarama Road, Kawdana Road, Dehiwala. 060 2136256.

---

TV, CD, Set-up, Grinder, Fan, Washing Machine, Antenna, satelite (40 Channels) House Wiring என்பன வீட்டிற்கு வந்து உத்தரவாதத்துடன் செய்து தரப்படும். 077 4050617, 077 9498917.

---

Computer Repairing, Network, ADSL, Internet E- mail Configuration, Net-2Phone,இல்லங்கள், காரியாலயங்களுக்கு வந்து செய்துதரப்படும். Rajan - 077 3753771 PC-Accplus Solutions F14, Peoples Park Complex, Colombo 11.


PAATUKU PAATU
MANJAL MAGIMAI
கலைஞர்
இதோ!
உங்கள் வீட்டின் வரவேற்பறைகளில்
கலை விருந்தளித்துக் களிப்பூட்ட,
டயலொக் தொலைக்காட்சியினூடாக
தமிழின்பம் சுமந்து வருகின்றது
கலைஞர் தொலைக்காட்சி.
இப்பொழுது டயலொக் தொலைக்காட்சியினூடாக நாடெங்கிலும்
நீங்கள் பார்த்து மகிழலாம்
திரைப்படங்கள், நாடகங்கள், நடன மற்றும் இசை நிகழ்ச்சிகள், பல்சுவை நிகழ்வுகள் என
நாள் முழுவதும் பார்த்து மகிழ தரமான நிகழ்ச்சிகளுடன் உங்கள் டயலொக் தொலைக்காட்சியின்
சின்னத்திரையில் கலைஞர் தொலைக்காட்சி
SATELLITE
Dialog tv
Don't miss out
Call 0777 679 679
ரூ. 500/- மாதாந்த கட்டண பக்கேஜில் இருந்து.
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் 0777 679 679

# ரொமான்ஸ் தாத்தாக்கள்



பத்மாலட்சுமியுடன் சல்மான் ருஷ்டி..

சல்மான் ருஷ்டி, அமிதாப் பச்சன் ஆகியோர் இந்தியாவின் பெருமையை முடிந்த திசைகளில் எல்லாம் பரப்புகிறார்கள். இவர்களின் 'ரொமான்ஸ்' வாழ்க்கை மிகவும் சுவாரஸ்யம்.

இவர்களில் நம்பர் வண் சல்மான் ருஷ்டி.

இந்தியாவில் பிறந்து வளர்ந்து இங்கிலாந்தில் வசிக்கும் எழுத்தாளர் சல்மான் ருஷ்டி! தன் இரண்டாவது நாவலிலேயே புக்கர் பரிசைத் தட்டிய புத்திசாலி. எகிடுதகிடு சர்ச்சைகளைக் கிளப்பியது இவரின் 'சாத் தானின் வேதங்கள்' நாவல். அதற்காக ஈரானியத் தலைவர் கொமேனி அறிவித்த 'பத்வா' (மரண தண்டனை) இன்றுவரை உயிருடன் இருக்கிறது.

சல்மான் ருஷ்டியின் தனிப்பட்ட பக்கங்கள் சுவாரஸ்யமானவை. ருஷ்டியின் முதல் மனைவி கிளாஸியா லார்ட், பதிப்பக ஊழியர். பதினேழு வருட மணவாழ்க்கை, விவாகரத்தில் முடிந்தது. அடுத்த சில மாதங்களிலேயே அமெரிக்க எழுத்தாளர் மரியான் விக்கின்ஸுடன் திருமணம். நான்கு வருடங்களிலேயே இன்னொரு பதிப்பக ஊழியர் எலிசபெத்துடன் திருமணம்.

நான்காவது ஜோடி சேர்ந்தது 'ஹொட் மொடல்' பத்மாலட்சுமி. மற்ற மனைவிகள் போலில்லாமல் பத்மா மேல் ருஷ்டிக்கு 'டபுள் எக்ஸ்ட்ரா' காதல். பொதுஇடங்களில் பத்மாவின் இடுப்பை வளைத்தபடி பெரு மிதத்துடன் நடப்பது சல்மானின் 'ஸ்டேட் டஸ் சிம்பல்'. ஒருமுறை பத்மாவின் இமேஜை பாதிக்கும் விதத்தில் கட்டுரை வெளியிட்டது பத்திரிகை நிறுவனம் ஒன்று. 'சிங்கம் ஒன்று புறப்பட்டதே!' அந்த வேகத்தில் அந்தப் பத்திரிகை அலுவலகத்தை அடித்து நொறுக்க கையில் பேஸ்போல் துடுப்புடன் கிளம்பி, பின் அமைதியானார் ருஷ்டி.

''ஒரு சராசரி ஆணால் பத்மாவிடம் எந்தக் குறையும் காணமுடியாது. அழகு, சமையல், நிர்வாகம் எனப் பல தளங்களில் சிறப்பாக இயங்கும் பெண் பத்மா. அவர் எனக்குக் கிடைத்த மிகப் பெரிய பரிசு'' என உருகிக்கொண்டு இருந்த ருஷ்டியிடம் விவாகரத்துப் பத்திரம் நீட்டினார் பத்மா. அவர் மேலுள்ள காதலால் எந்த மறுப்புமின்றி, விவகரத்துக்குச் சம்மதம் தெரிவித்தார் ருஷ்டி. ஆனால், மனதளவில் மனிதர் நொறுங்கிப் போய்விட்டார். சமீபத்தில் ருஷ்டி வெளியிட்ட, 'தி என்ச்சான்ட்ரஸ் ஆப் பிளோரென்ஸ்' நாவலின் கதாநாயகி கூட பத்மாவின் சாயல்தான் என்கிறார்கள்.

பத்மாவுடனான பிரிவுக்குப் பிறகு, தற்போது பாலிவுட்டின் நிஷா கோத்தாரி, ரியா சென் ஆகியோருடன் ருஷ்டி கிசுகிசுக்கப்படுகிறார்.

எயிட்ஸ் விழிப்பு உணர்வுப் பிரசாரத்துக்காகச் சமீபத்தில் இந்தியா வந்த ருஷ்டியைச் சந்தித்திருக்கிறார் ரியாசென். 'ருஷ்டியால் பத்மாவை மறக்க முடியவில்லை. ரியாவுடன் நெருங்கிப் பழகி பத்மாவை வெறுப்பேற்றி மீண்டும் பத்மாவுடன் சேருவதுதான் அவரது திட்டம்' என்பவர்களும் உண்டு. எதைப்பற்றியும் கவலைப்படாமல் ரியாவுடன் ஊர் சுற்றிக்கொண்டு இருக்கிறார் ருஷ்டித் தாத்தா.

ஷாருக், ஹர்த்திக், சல்மான் ஆகியோருக்கு சளைக்காமல் இளசுகளை ஈர்ப்பது 'பிக் பி' அமிதாப் ஸ்பெஷல்.



அமிதாப் பச்சன்

'இந்திய சினிமாவின் அடையாளம்' என்கிற உயரிய மரியாதை யோடு இருக்கிறார் அமிதாப் பச்சன். ஆனாலும் 'ப்ளேபோய் சாயல்' பாத்திரம் என்றால் தயங்காமல் புகுந்து விளையாடுவார். இப்போதும்கூட, தபு, ராணி முகர்ஜி என 'டொப்' கதாநாயகிகள் பச்சனுடன் 'பச்சக்' கொடுத்து நடித்து வருகிறார்கள். அப்பா, தாத்தா என்று வேஷம் காட்டினாலும் அமிதாப் நடிக்கும் படங்களில் அவர்தான் ஹீரோ.

அமிதாப் - அபிஷேக்- ஐஸ்வர்யாவுக்கு 'பாலிவுட் முக்கோணம்' என்று செல்லப் பெயர் உண்டு. இன்றைய தலைமுறை என்றாலும் அந்த முக்கோணத்தில் அபிஷேக்குக்கு மூன்றாவது இடம்தான்.

இந்த ஸ்டார் குடும்பம் இப்போது மேற்கொண்டு இருக்கும் 'மறக்கமுடியாத 'உலக சுற்றுலா'விலும் அமிதாப்புக்குத் தான்கிரேஸ் அதிகம்.

மேடை நிகழ்ச்சிகளில் ப்ரீத்தி ஜிந்தா, ஷில்பா ஷெட்டி என 'டொப்' ஹீரோயின்கள் அபிஷேக்கை விட்டுவிட்டு, அமிதாப்புடன்தான் இணைந்து ஆடிக்கொண்டு இருக்கிறார்கள். காரணம், அபிஷேக் டான்சில் கொஞ்சம் வீக். சிலநேரங்களில் அபிஷேக்கைக் கழட்டிவிட்டு, ஐஸ்வர்யாவே அமிதாப்புடன் ஆட ஆரம்பிக்கும் அளவுக்கு டான்சில் அமிதாப் பலே பேர்வழி. *

## நான் கண்ட பாரதி...

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டார். அதிலேதான் அவர் "தேசபக்தி மார்க்கம்" என்பதை முதன்முதலாகக் குறிப்பிட்டார்.

அவர் எழுதியதாவது:

"நாட்டில் ஒரு புதிய ஆதர்சம் -ஒரு கிளர்ச்சி- ஒரு மார்க்கம் - தோன்றுமேயானால், மேன் மக்களின் நெஞ்சமனைத்தும் இரவியை நோக்கித் திரும்பும் சூரியகாந்த மலர்போல, அவ்வாதர்சத்தை நோக்கித் திரும்புகின்றன.

சென்ற சுபக்கிருது வருஷத்திலே பாரத நாட்டில், சர்வ சுபங்களுக்கும் மூலாதாரமாகிய "தேச பக்தி" என்ற நவீன மார்க்கம் தோன்றியது. நல்லோர்களின் சிந்தையெல்லாம் உடனே புளகிதமாயின. நல்லோருடைய குணங்களிலே குறைவுடையவனாகிய யானும் தேவியினது கிருபையால் அப்பு... சுடரினிடத்து அன்பு பூண்டேன். அவ்வன்பு...மாகச் சென்றவருஷம் சில கவிதைம... மாதாவின் திருவடிக்குப் புனைந்தேன்".

பாரதியாருடைய இந்த வாசகத்தில் எவ்வளவோ விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. அவற்றை இதுவரை யாரும் என்னுடைய இந்தக் கண்ணோட்டத்தில் ஆராயவில்லை என்பதை இங்கு சுட்டிக்காட்டுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

மேற்கூறிய வாசகத்தில் பாரதியார் முதன்முதலாக "தேச பக்தி" என்ற நவீன மார்க்கத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

அந்த நவீன மார்க்கத்தில் நவீன சமயத்தில், சேர்ந்து-அதாவது மதம் மாறி-அந்த மார்க்கத்தின் ஒரு முன்னணிப் பிரசாரகனாக பாரதியார் விளங்கியமையினாலேதான் அவர் பாடிய புதுமைக் கவிதைகள், புரட்சிக் கருத்துகள் அவருக்கு மகாகவி என்ற அந்தஸ்தை ஏற்படுத்திக்கொடுத்தன. பழைய மொந்தையில் புதிய கள்ளை வார்த்த புலவன் தான் 'நான் கண்ட பாரதி'!

இந்த உண்மையை மேலும் விரிவாக அடுத்த கட்டுரையில் ஆராய்வோம்.

தொடரும்.

# ராசி பலன்

01-09-2008 முதல் 07-09-2008 வரை

பொ.சந்திரலிங்கம்

### மேஷம்



அச்சுவினி,பரணி,கார்த்திகை1.

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர்.பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. நண்பர்களால் பிரச்சினை உருவாகலாம்.

### இடபம்



கார்த்திகை2,3,4.ரோகிணி,மிருகசீரிடம் 1, 2

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் உதவி செய்வர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளில் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறா.

### மிதுனம்



மிருகசீரிடம் 3,4. திருவாதிரை, புனர்பூசம்1,2,3

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் உண்டு. தெய்வீக எண்ணம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறா.

### கடகம்



புனர்பூசம்4,பூசம்,ஆயிலியம்

காரிய தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் உதவி செய்வர். உதவியை எதிர்பார்ப்பர். தாய் நலம், தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

### சிம்மம்



மகம்,பூரம்,உத்தரம்1

காரியத் தடை இருக்கும். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் உதவி செய்வர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. நண்பர்களால் பிரச்சினை உருவாக வாய்ப்புண்டு.

### கன்னி



உத்தரம்2,3,4.அத்தம்,சித்திரை 1,2

காரியத்தடை விலகும். பணம் இருக்கும். உறவினர், அயலவர் பகை கொள்ளக் கூடும். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமணவாய்ப்பு தாமதமாகலாம். புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

### துலாம்



சித்திரை 3, 4. சுவாதி, விசாகம் 1, 2, 3.

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாகக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகைகொள்ளக்கூடும். தாய் நலம், தந்தை நலம் இல்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

### விருச்சிகம்



விசாகம்4,அனுசம்,கேட்டை

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவுவர்; உதவியை எதிர்பார்ப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலமுண்டு. பகை நட்பாகலாம். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

### தனுசு



மூலம்,பூராடம்,உத்தராடம் 1.

காரிய சித்தியுண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறா. நண்பர்களால் தொல்லையுண்டு.

### மகரம்



உத்தராடம்2,3,4.திருவோணம்,அவிட்டம் 1,2

காரியத்தடை இருக்கும். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர் பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறா.

### கும்பம்



அவிட்டம்3,4சதயம்,பூரட்டாதி 1,2,3

காரியத் தடை இருக்கும். பணம் இருக்கும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவுவர்.

### மீனம்



பூரட்டாதி4,உத்தரட்டாதி,ரேவதி

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக் கூடும். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு கால தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

# ஹெட்போன் அபாயம்



செல்போன்களில் எப்.எம் ரேடியோ வந்த பிறகு ஹெட்போனை காதில் வைதத்துக்கொண்டு பாடல் கேட்டுக் கொண்டு இருப்பவர்கள் அதிகரித்து விட்டார்கள். பஸ்ஸுக்கு காத்திருக்கும் நேரம், ரயிலில் பயணம் செய்யும் நேரம் என அதிக நேரம் காதில் ஹெட்போனை மாட்டி நிகழ்ச்சிகளைக் கேட்கின்றனர். இப்படி தொடர்ந்து பாடல் கேட்டுக்கொண்டே இருப்பதால் காது கேட்கும் திறன் குறைவதோடு, மனரீதியான பிரச்சினைகள், இதயம் தொடர்பான சிக்கல்கள் ஏற்படுவதாக மருத்துவர்கள் கூறுகின்றனர்.

சத்தம், கேட்கும் நேரம் போன்ற இரண்டும் அதிகரிக்கும்போது காதில் உள்ள உணர்வு நரம்புகள் பாதிக்கப்படுகின்றன. இதனால் கேட்கும் திறன் குறையும். பாதிக்கப்பட்ட நரம்புகளை மீண்டும் சரி செய்ய முடியாது என்பதால் கேட்கும் திற[ன்] முற்றிலுமாக இழக்கும் வாய்ப்பும் உள்ள[து].

காதில் வலி, தூக்கமின்மை, தலை[வலி] போன்ற உடல் உபாதைகள் இதனால் ஏ[ற்படும்]. தேவையற்ற கோபம், எரிச்சல் போன்ற மனரீதியான பாதிப்புகள் ஏற்படும். காலப்போக்கில் இதய பிரச்சினைகளும் ஏற்படும். ஹெட்போனை அதிக நேரம் பயன்படுத்துவதால், கேட்கும் திறன் பாதிக்கப்பட்டு மருத்துவர்களை அணுகி வருபவர்கள் சமீப காலமாக அதிகரித்து வருகிறார்கள். எனவே, 'அளவுக்கு மீறின அமிர்தமும் நஞ்சு' என்பதை செல்போன் உபயோகிப்பவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.












செப். 06, 2008

இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிரைசஸ் ஸ்தாபனத்தினால் 2008, ஆகஸ்